# சத்யாகிரகம்



பொ. திருகூடசுந்தரம்.

கமர்ஷியல் வெளியீடு. 4.

மகாத்மா காந்தி

அருளிய

# சத்தியாக்கிரகம்

மொழிபெயர்த்தவர்

பொ. திருகூடசுந்தரம்

வெளியிடுவோர்

கமர்ஷியல் பிரிண்டிங் அண் பப்ளிஷிங் ஹவுஸ்

46, அரமணைக்காரத்தெரு, சென்னை-1

முதற் பதிப்பு
நவம்பர் 1946

விலை ரூ. 1-12-0

மொழிபெயர்ப்புரிமை
மொழிபெயர்த்தவருடையது.

கமர்ஷியல் ப்ரிண்டிங் அண் பப்ளிஷிங் ஹவுஸ்
46, அரமனைக்காரத் தெரு, சென்னை-1

# வெளியிடுவோர் முன்னுரை

நாங்கள் அச்சு, கலர்படம், பிளாக்கு வேலைகளை அழகாகவும் சுத்தமாகவும் செய்து வருவதை எல்லோரும் அறிவார்கள். கம்மர்ஷியல் என்றதும் கண்ணைக் கவரும் என்று பொருள் கூறுகிறார்கள். கண்ணைக் கவருவது போலவே கருத்தையும் கவரச் செய்ய வேண்டும் என்று நாங்கள் விரும்புகிறோம். அதனால் இனித் தொடர்ச்சியாகப் பல பெரியோர்களுடைய நூல்களை நல்ல அழகான முறையில் அச்சிட்டு வெளியிடத் தீர்மானித்திருக்கிறோம். அது போலவே குழந்தைகளுக்காகச் சித்திரப் படப் புத்தகங்கள் வெளியிடவும் ஏற்பாடு செய்து கொண்டிருக்கிறோம்.


மகாத்மா காந்தியடிகள் சகல துன்பங்களுக்கும் சஞ்சீவி மருந்தாகச் **சத்தியாக்கிரகம்** என்னும் புது வழியைக் கண்டு, அதைப்பற்றிப் பல கட்டுரைகள் எழுதியிருக்கிறார். இந்தச் சமயம் அவற்றைப் படித்து உணர்வது எல்லோர்க்கும் பயன் அளிப்பதாகும். அவருடைய பக்தர்களில் ஒருவரும், பல சிறந்த தமிழ் நூல்கள் இயற்றியுள்ளவருமான அறிஞர் பொ. திருகூடசுந்தரம் அந்தக் கட்டுரைகளை எளிய இனிய நடையில் மொழி பெயர்த்திருக்கிறார். அவற்றை மிக்க மகிழ்ச்சியுடன் வெளியிடுகின்றோம்.

உலகப் பிரசித்தி பெற்ற நாவலாசிரியர் டால்ஸ்டாய் எழுதிய **போரும் காதலும்** என்னும் நாவல் அச்சில் இருக்கின்றது. அதை அடுத்த பிரசுரமாக வெளியிடுகின்றோம். தமிழ் மக்கள் எங்களை இதுவரை ஆதரித்து வருவது போலவே இனி மேலும் எங்கள் புது முயற்சியையும் ஆதரித்து வருவார்கள் என்று பரிபூரணமாக நம்புகின்றோம்.

**கமர்ஷியல் பிரிண்டிங் அன் பப்ளிஷிங் ஹவுஸ்.**

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| | | பக்கம் |
| 1. | சத்தியாக்ரகம் ... ... | 1 |
| 2. | அஹிம்சா தர்மம் ... ... | 30 |
| 3. | ஒத்துழையாமை ... ... | 60 |
| 4. | சாத்வீகச் சட்டமறுப்பு ... ... | 86 |
| 5. | வரிகொடாமை ... ... | 101 |
| 6. | உண்ணவிரதம் ... ... | 103 |
| 7. | அனுபந்தம் ... ... | 106 |



# சத்தியாக்ரகம்

## 1

நான் என் குழந்தைப் பருவத்தில் பள்ளிக் கூடத்தில் கற்றிருந்த ஒரு குஜராத்திச் செய்யுள் என் ஞாபகத்தை விட்டு இன்னும் அகலவில்லை.

"ஒருவன் உனக்கு தாகத்திற்குத் தண்ணீர் கொடுக்க நீயும் திரும்பி அவனுக்கு தாகத்திற்குத் தண்ணீர் கொடுத்தால், அதனால் யாதொரு அழகுமில்லை. இன்னா செய்தார்க்கும் இனிய செய்தலே மெய்யழகாம்" என்பதே அச் செய்யுளின் கருத்து. குழந்தையா யிருக்கும் பொழுது நான் அதைப் பரிபூரணமாய் நம்பி அனுஷ்டானத்தில் கொண்டு வர முயன்றேன்.

பின்னர் ஸம்ஸ்கிருதத்திலுள்ள பகவத் கீதையும் எனக்கு நன்றாய்த் தெரியும். ஆனால் நான் அதில் மேற்கண்ட விஷய சம்மந்தமாய் ஆராய்ச்சி யொன்றும் செய்யவில்லை. சத்தியாக்கிரகத்தின் உண்மையையும் உபயோகத்தையும் அறியுமாறு என்னை உண்மையில் தட்டியெழுப்பியது பைபிளில் உள்ள "புதிய ஏற்பாடே" யாகும். மலைமேல் கிறிஸ்துநாதர் செய்த ஹிதோபதேசத்தில் "கொடுமை செய்பவனை எதிர்க்காதே; ஆனால் வலது கன்னத்தில் அடிப்பவனுக்கு இடது கன்னத்தையுங் காட்டு. பரலோகத்திலுள்ள பிதாவின் குமாரர்களாயிருப்பதற்கு உன் பகைவர்களை நேசித்து, உன்னைத் துன்புறுத்துபவர்க்காக கடவுளிடம் பிரார்த்தனை செய்' என்ற வாக்கியங்களை வாசித்த பொழுது நான் அடைந்த ஆனந்

தத்திற்கு அளவில்லை. நான் எதிர் பாராத இடத்தில் என் அபிப்பிராயம் சரியென்பதற்கு அத்தாட்சியும் கிடைத்தது. பகவத் கீதை என் அபிப்பிராயத்தைப் பலப்படுத்தியது. டால்ஸ்டாய் என்னும் ருஷ்ய ஞானியின் "தேவ ராஜ்யம் உன்னுள்ளேயே இருக்கிறது" என்ற நூல் அதற்கு சாஸ்வதமான உருவம் அளித்தது. குஜராத்திச் செய்யுளிலும், மலைமேல் கிறிஸ்து நாதர் செய்த ஹிதோபதேசத்திலும் உள்ள கருத்துக்களால் நம் வாழ்க்கை முழுவதும் மாறுதல் அடைய வேண்டுமென்பது என் விருப்பம்.

குறிப்பு :— கிளீம்ஸ் என்னும் ஆங்கிலேயர் மகாத்மா காந்தியுடன் பேசிக் கொண்டிருந்து, பின் "பால இந்தியா"ப் பத்திரிகையில் அதைக் குறித்தெழுதினர். அதில் கீழ்க் கண்டவை காணப்படுகின்றன :—

"மகாத்மா காந்தி தாம் அதிகமாகப் படிப்பவரில்லை என்றும், ஆனல் ஜாக்கிரதையுடன் மிக உயர்ந்த நூல்களையே பொருக்கி வாசிப்பவர் என்றும் கூறினர். தம் வாழ்க்கையைத் திருத்தியவை முறையே "பைபிள் ; ரஸ்கின் எழுதிய நூல்கள்; டால்ஸ்டாய் எழுதிய நூல்கள்" என்றும் சொன்னர். பைபிளைப் பற்றிப் பேசும்பொழுது அவர் சொன்னதாவது "என்ன செய்வதென்று தெரியாமல் பல சமயங்களில் நான் திகைத்திருக்கிறேன். ஆனல் அச்சமயங்களில் பைபிளும், முக்கியமாக அதிலுள்ள புதிய ஏற்பாடுமே எனக்கு தைர்யம் அளித்திருக்கின்றன."

## 2

சத்யாக்ரகம் என்பதற்குச் சத்தியத்தைக் கடைப்பிடித்தல் என்பது பதப் பொருள். அதாவது சத்ய சக்தி. உண்மை என்பது ஆன்மாவாகும்; அதனல் அதை ஆன்ம சக்தி என்பர். அதில் பலாத்காரம் என்பது கிஞ்சிற்றுங் கிடையாது. ஏனெனில் மனிதன் முழு உண்மையையும்

அறிய முடியாது. ஆகையால் பிறரைத் தண்டிக்க அவ னுக்கு அதிகாரங் கிடையாது. சத்தியாக்ரக மென்பது நான் ஆப்பிரிக்காவில் இருக்கும் பொழுது அங்குள்ள இந்தியர்களின் பலாத்காரமற்ற எதிர்ப்பை, மற்றவர்கள் கையாண்டு வந்த சாத்வீக எதிர்ப்பினின்றும் வேறு பிரித் துக் கூறுவதற்காகச் சிருஷ்டிக்கப்பட்ட மொழியாகும். அது பலவீனர்களுடைய ஆயுதம் ஆகாது.

சாத்வீக எதிர்ப்பு என்பதை ஆங்கிலேயர் கொள்ளும் பொருளிலேயே நான் உபயோகிக்கிறேன். அதை பல வீனர்களுடைய ஆயுதமாகவே கருத வேண்டும். பல வீனர்கள் பலாத்காரத்தை உபயோகிக்கமுடியாது. ஆனல் சாத்வீக எதிர்ப்பில் பலாத்காரம் கிடையாது. ஆனல் பலாத்காரத்தை உபயோகிக்க வேண்டிய சமயம் வந்தால் சாத்வீக எதிர்ப்பினர், பலாத்காரத்தை உபயோகிக்கலாம். ஆயினும் சாத்வீக எதிர்ப்பிற்கும் ஆயுத எதிர்ப்பிற்கும் வித்தியாசம் உண்டு. ஒரு காலத்தில் சாத்வீக எதிர்ப் பைக் கிறிஸ்துவ மதாபிமான பிராணத் தியாகிகளே கையாண்டு வந்தனர்.

சாத்வீகச் சட்டமறுப்பு என்பது ஒழுக்கவீனமல்லாத சட்ட சம்பந்தமான விதிகளைச் சாந்தமாய் மீறி நடத்த லாகும். எனக்குத் தெரிந்த மட்டில் அமெரிக்கரான தோரோ என்பவர் தான் அடிமை அரசாங்கத்தின் சட்டங் களைத் தாம் மீறி நடந்ததைக் குறிப்பதற்காக இப்பதத்தைக் கற்பித்தார். சாத்வீகச் சட்டமறுப்புச் செய்ய வேண்டிய கடமையைப் பற்றி அவர் ஒரு அருமையான நூல் இயற்றி யிருக்கிறார். ஆனல் தோரோ பலாத்கார மின்மையை முழுவதும் ஆதரிக்கவில்லை; வரி செலுத்துதல் சம்பந்த மான சட்டங்களை மீறி நடத்தலை மட்டுமே சட்ட மறுப்பிற் குப் பொருளாகவும் கொண்டார். ஆனல் 1919-ம் வருஷத் தில் கையாளப்பட்ட சாத்வீகச் சட்டமறுப்பில் சட்ட சம் பந்தமானதும் ஒழுக்க வீனத்தில் சேராததுமான சகல

விதிகளையும் மீறி நடத்தலும் அடங்கியிருந்தது. அப்படி மறுப்பவன் பலாத்காரத்தை உபயோகிக்காமல் சாந்தமாய் விதிகளை மீறி நடப்பான்; மீறி நடப்பதால் ஏற்படும் தண்டனைகளை வெகு சந்தோஷத்தோடு அனுபவிக்கவும் செய்வான். அவ்விதமான சாத்வீகச் சட்டமறுப்பு சத்தியாக்ரகத்தில் ஒரு அம்சமாகும்.

கெட்டது, பழுதானது என்று ஒரு அரசாங்கத்தை ஒருவன் கருதினால் அதற்குத் தான் செய்து வந்த உதவியை மறுத்தலே ஒத்துழையாமையாகும். மேற் சொல்லிய சாத்வீகச் சட்ட மறுப்பு அதற்குப் புறம்பாகும். அறிவுள்ள குழந்தைகளும் சரி, ஜன சமூகமும் சரி, யாதொரு அபாயமுமின்றி அநுஷ்டிக்கத் தக்க குணம் பொருந்தியது. தண்டனைக்குப் பயந்து நடக்காமல் தன் சுயேச்சையாகவே சட்டங்களின்படி நடக்கும் வழக்கத்தை யுடையவனே சாத்வீகச் சட்ட மறுப்பைக் கையாளலாம். ஆகையால் வேறு வழியில்லை என்ற நிலைமையில் தான் அதை அநுஷ்டிக்கலாம். அப்பொழுதும் குறிப்பிட்ட சிலர் தான் ஆரம்பிக்க வேண்டும். சத்யத்தை நிலை நாட்டச் செய்யப்படும் சகல சாத்வீக மறுப்பும் சத்யாக்ரகத்தில் அடங்குவதால், சாத்வீகச் சட்ட மறுப்பைப் போல் ஒத்துழையாமையும் அதில் ஒரு அம்சமாகும்.

## 3

சத்யாகரகமெனனும் ஆன்ம சக்தி உலகத்தில் மனித ஜாதி தோன்றின நாள் முதற் கொண்டே இருந்து வருகிறது. இயேசு கிறிஸ்து, தானியேல், சாக்கிரட்டீஸ் ஆகியவர்கள் பலாத்காரம் சிறிதும் கலவாத வெகு சுத்தமான ஆன்ம சக்தியை அநுஷ்டித்தவர்கள். இப் பெரிய மகான்களெல்லாம் தங்கள் ஆன்மாவுக்கெதிரில் தங்கள் உடலை வெகு அற்பமாகவே கருதி யிருந்தனர். இக்காலத்தில் டால்ஸ்டாய் என்பவரே இவ்வான்ம சக்திக் கொள்கையை

எல்லோரிலும் வெகு தெளிவாய் எடுத்துக் காட்டுபவர். அவர் அதை எடுத்துக் காட்டியதோடு நில்லாமல், அதன்படி வாழ்வுஞ் செய்தார். # இக் கொள்கை ஐரோப்பாவில் வழங்கப்படுவதற்கு வெகு காலத்திற்கு முன்னதாகவே இந்தியாவில் அறியப்பட்டு அநுஷ்டானத்தில் இருந்து வந்திருக்கிறது. # ஸ்தூல சக்தியை விட ஆன்ம சக்தியே அளவற்ற மேன்மையை உடையது. ஜனங்கள் தங்கள் குறைகளை நீக்கிக் கொள்ள ஆன்ம சக்தியையே உபயோகிப்பார்களானால், ~~தங்களைப்~~ அவர்கள் அநுபவித்து வரும் துன்பம் வெகுவாகக் குறைந்து விடும். எது எப்படியானாலும், இச்சக்தியை உபயோகிப்பதால் பிறர்க்குத் துன்பம் ஒருகாலும் உண்டாவதில்லை. ஆகையால் அதைத் தப்பிதமாய் உபயோகித்தால், அது உபயோகிப்பவர்களுக்குத் துன்பம் தருமே யன்றி, யாருக்கு எதிரிடையாக உபயோகப் படுத்தப் பட்டதோ அவர்களுக்கு யாதொரு துன்பமும் தாராது. அறத்தைப் போல் அதற்கு அதுவே பலனாகும். அந்தச் சக்தியை உபயோகிப்பதில் அபஜயமென்பதே கிடையாது. "தீமையை எதிர்க்காதே" என்று கிறிஸ்து நாதர் சொல்லியதற்குத், தீமையை மாற்றுவதற்குத் தீமையைச் செய்யாமல் நன்மையையே செய்ய வேண்டு மென்பது பொருள். அதாவது சரீர வலிமையை சரீர வலிமையால் எதிர்க்காமல் ஆன்ம வலிமையால் எதிர்க்க வேண்டும். இந்திய சாஸ்திரங்களில் சொல்லப் பட்டிருக்கும் "உயிர்க்கு உறுகண் செய்யாமை" என்பது இக் கருத்தையே விளக்கு கின்றது.) இதை அநுஷ்டிப்பவர்களுக்கு சரீர சம்பந்தமான துன்பங்கள் உண்டாகலாம். ஆனால் உலகத்தில் அவ்விதத் துன்பங்களுக்கு குறைவில்லை, அதிகமே என்பது யாவரும் அறிந்த விஷயம். ஆகையால் ஆன்ம சக்தியின் அளவற்ற வலிமையை அறிந்தவர்கள் செய்ய வேண்டிய தெல்லாம் சரீரத் துன்பங்களைத் தங்களுக்குக் கிடைத்த பாக்கிய மெனக் கருதி அனுபவிப்பதே. அப்

படிச் செய்யின் அத்துன்பங்களே அவர்களுக்கு ஆனந்தத்தை அளிக்கும். சத்தியாக்ரகத்திற்கு இவ்விதமான பொருள் கொண்டோமேயானால், சத்தியாக்ரகமே சரீர வலிமையைவிட மேலானது என்றும் சரீர வலிமையை உபயோகிப்பதற்கு வேண்டிய மனோ தைர்யத்தை விட சத்தியாக்ரகத்தை உபயோகிப்பதற்கு அதிகமான மனோ தைர்யம் வேண்டுமென்றும் எளிதில் தெரிந்து கொள்ளலாம். ஆகையால் சத்யாக்ரகத்தை அனுஷ்டிக்கும் பொழுது உடனே அதை விட்டு சரீர சக்தியை உபயோகிப்பதில் எவ்விதத்திலும் இறங்க முடியாது. ஆன்ம சக்தியை உபயோகித்து ஜயமடைவதற்கு வேண்டியதெல்லாம் ஆன்மா வேறு, சரீரம் வேறு, ஆன்மா அழிவற்றது, மேலானது என்று ஒப்புக் கொள்வது ஒன்றுதான். ஆனால் நம் அறிவு மட்டும் ஒப்புக் கொண்டால் போதாது. மனமொப்பி அநுஷ்டானத்தில் கொண்டு வருவதற்கு வேண்டிய நம்பிக்கையும் இருக்க வேண்டும்.

## 4

சத்யாக்ரகம் என்பது சத்ய சக்தியாகும். டால்ஸ்டாய் என்பவர் அதை ஆன்மசக்தி அல்லது அன்பு சக்தி என்று கூறியிருக்கிறார். அது உண்மையே. எவ்வளவு தூரம் அதை அனுஷ்டிக்க முடியுமோ, அவ்வளவு தூரம் அதை அனுஷ்டித்தால், அதற்குப் பொருளுதவி அல்லது அதைப் போன்ற இதர உலக வுதவிகள் ஒன்றும் தேவையில்லை, புஜபலம் அல்லது பலாத்காரம் கிஞ்சித்தும் வேண்டியதில்லை என்பதும் நிச்சயம். மேலும் பலாத்காரம் இப்பெரிய ஆன்மசக்திக்கு எதிர்மறையாகும். பலாத்காரத்தை முற்றிலும் விலக்கியவர்களே இவ் வான்ம சக்தியைக் கையாளவும் விர்த்தி செய்யவும் முடியும். இச் சக்தியைத் தனிப் பட்டவர்களும் ஜன சமூகங்களும் உபயோகிக்கலாம். ராஜீய கார்யங்கள், குடும்பக் கார்யங்கள்

இரண்டிலும் அதை அநுஷ்டிக்கலாம். சகலரும் சகல காரியங்களிலும் உபயோகப் படுத்தக் கூடியதா யிருப்பதால் அது அழியாதது, தோல்வி யுறாதது என்பது விளங்கும். அதை ஆடவரும்சரி, பெண்களும் சரி, குழந்தைகளும் சரி, எல்லோரும் கையாளலாம். # பலாத்காரத்தை உபயோகிக்க அசக்தர்களா யிருக்கும் வரை, பலவீனர்கள் உபயோகிக்கக் கூடிய ஒரு சக்தி யென்று அதைச் சொல்வது சுத்தப் பொய். தங்களை பலவீனர்களென்று எண்ணிக் கொண்டிருப்பவர்கள் இச் சக்தியை உபயோகிக்கவே முடியாது. மனிதனிடம் மிருக சுபாவத்திற்கு மேலானதொன்று இருக்கிறதென்றும்; அது மிருக சுபாவத்தை எப்பொழுதும் வெல்லக் கூடுமென்றும் உணர்ந்தவர்களே சத்யாக்ரகிகளாய் இருக்க முடியும். இருட்டிற்கும் வெளிச்சத்திற்கும் எவ்வளவு வித்தியாசமுண்டோ, அவ்வளவு வித்தியாசம் பலாத்காரம், அநியாயம், கொடுங்கோன்மை, ஆகியவைகளுக்கும் இந்தச் சக்திக்கும் உண்டு. இந்தச் சக்தியை உபயோகிப்பதற்கு வறுமையை மேற்கொள்ளல் அவசியம். உண்பதற்கோ, அல்லது உடுத்துவதற்கோ, என்ன இருக்கிறதென்ற கவலையே இருக்கக் கூடாது.

பரிசுத்தமான ஆன்ம சக்தியைக் குற்ற மற்ற முறையில் உபயோகித்தால், உடனே கஷ்ட நிவர்த்தி கிடைக்கும். அப்படிச் செய்வதற்கு ஒவ்வொருவனும் தன் ஆன்மாவை அம்முறையில் வெகு காலம் பழக்கிக் கொள்ள வேண்டியது அத்யாவசியம். அவ்விதம் பழக்கிக் கொண்டவன் அநேகமாய்ப் பூர்ண மனிதனாவான். ~~நாம்~~ எல்லோரும் திடீரென்று அத்தகைய மனிதர்களாய் விட முடியாது. ஆனால் எவ்வளவுக் கெவ்வளவு சத்தியாக்கிரக உணர்ச்சி ~~நம்மிடம்~~ அதிகப்படுகிறதோ அவ்வளவுக்கவ்வளவு ~~நாமும்~~ நல்லவர்களாவோம். ஆகையால் அதன் உபயோகத்தை ஒருவரும் மறுக்க முடியாது ~~தென்று நினைக்கிறேன்~~ அதை சமஸ்த

ரும் உபயோகிக்க ஆரம்பித்து விட்டால், சமூக லட்சியங்களும் மாறிவிடும். கொடுங்கோன்மையும் ஒழிந்துவிடும்.

ஆகவே, சத்யாக்ரகமே எல்லாவற்றிலும் உயர்ந்ததும் மேன்மை பொருந்தியதுமான கல்வியாகும். அது சாதாரணமான கலைஞானக் கல்விக்குப் பின்னல்லாமல், முன்னதாகவே குழந்தைகளுக்குக் கற்பிக்கப்பட வேண்டியது. குழந்தைகள் அரிச்சுவடி எழுதவும், லௌகிக ஞானம் அடையவும், ஆரம்பிக்கும் முன்னதாகவே, ஆன்மா, உண்மை, அன்பு முதலிய விஷயங்களைப் பற்றித் தெரிந்து கொள்ள வேண்டியதவசியமென்பதை யாவரும் ஒப்புக்கொள்வர். உலக வாழ்க்கையில் துவேஷத்தை அன்பாலும், பொய்யை மெய்யாலும், பலாத்காரத்தைப் பொறுமையாலும் வெகு சுலபமாய் வெல்லக்கூடுமென்பதைக் குழந்தைகள் அறிந்து கொள்ள வேண்டுமென்பது உண்மையான கல்வியில் ஒரு முக்ய அம்சமாக இருக்க வேண்டும்.

## 5

நான் இப்பொழுது எழுத உத்தேசித்திருக்கும் சக்தியை சாத்வீக எதிர்ப்பு என்பது தெளிவாய்க் குறிக்கவில்லை. ஆனல் சத்யாக்ரகம் அதாவது உண்மைச்சக்தி என்பது சரியாய்ப் பொருளை விளக்குகின்றது. உண்மைச் சக்தி என்பது ஆன்ம சக்தியாகும். அது புஜபலத்திற்கு மாறுபட்டது. அது முற்றிலும் மத சம்மதமான ஆயுதமாகும். ஆகையால் மதப்பற்றுள்ளவர்களே அதைக் கையாள முடியும். பிரகலாதாழ்வார், மீராபாய் முதலியவர்கள் சத்யாக்ரகிகள். மொரோக்கோ யுத்த காலத்தில் அராபியர் மீது பிரஞ்சு பீரங்கிகள் குண்டுகளைச் சரமாரியாகப் பொழிந்து கொண்டிருந்தன. அராபியர்கள் தாங்கள் தங்களுடைய மதத்தைக் காப்பாற்றுவதற்காகவே யுத்தஞ் செய்வதாய் நம்பியிருந்தனர். அவர்கள் மரணத்

திற்கஞ்சாமல், அல்லாவின் திருநாமத்தை உச்சரித்துக் கொண்டு பீரங்கி வாய்க்கு நேராக ஓடினர். இத்தகைய அராபியர்கள் பேரில் குண்டு போட பிரஞ்சு வீரர்கள் மறுத்தனர். பிரஞ்சுப் போர்வீரர்கள் தங்கள் தொப்பிகளைக் கழற்றி ஆகாயத்தில் வீசிவிட்டு ஓடிப்போய் அராபிய வீரர்களை ஆனந்தமாய்க் கட்டித் தழுவினர். இது சத்யாக்ரகத்தின் வெற்றிக்கோர் உதாரணம். அராபியர்கள் சத்யாக்ரக மென்பது இன்னதென்றறிந்து அநுஷ்டித்தவர்களில்லை. அவர்கள் ஆவேசத்தில் இறக்கத் துணிந்தவர்கள். அவர்களிடம் அன்பு குடிகொண்டிருக்கவில்லை. சத்யாக்ரகியிடம் பொறுமை கிடையாது. கோபத்தினால் இறக்கத் துணிவதுமில்லை. ஆனால் தன்னிடமுள்ள துன்பத்தைச் சகித்துக் கொள்ளும் சக்தி காரணமாகவே பகைவன் என்பவனைப் பணிய மறுக்கிறான். ஆகவே சத்யாக்ரகிக்கு மனோ தைர்யம், அன்பு, பொறுமை வேண்டிய தவசியம்.

இமாம் ஹுஸைனும் அவருடைய சிறு சைன்யமும் தங்களுக்கு அநீதியான உத்திரவு என்று தோன்றியதை எதிர்த்தனர். அவ்விதம் எதிர்க்கும் பொழுது தாங்கள் நிச்சயம் இறக்க நேரிடும் என்பது அவர்களுக்குத் தெரியும். ஆனால் அநீதியான உத்தரவின்படி நடந்தால் தங்கள் ஆண்மையும், மதமும், அழிந்துவிடும் என்று உணர்ந்தனர். ஆகையால் அவர்கள் இறக்கத் துணிந்தனர். இமாம் ஹுஸைன் தமக்கு அநீதியானதென்று தோன்றிய உத்திரவொன்றிற்குப் பணிவதைவிடத் தாமும் தம் புத்திரனும் தம் மருமகனும் தாகத்தினால் வருந்துவதையும், மகளும் மருமகனும் தம் கையாலேயே இறப்பதையும் மேலெனக் கருதினார். இஸ்லாம் மதத்தின் வளர்ச்சிக்கு புஜபலமன்றி இஸ்லாம் மத ஸந்யாசிகளாகிய பக்கிரிகளின், சத்யத்திற்காகத் தங்களையே வருத்திக் கொள்ளும் தவமே காரண ~~மென்பது என் நம்பிக்கை.~~ மாகும்.

வாளை உபயோகிக்கும் சக்தியில் பெருமை பேசிக் கொள்வதற்கு ஒன்றுமில்லை. வாளை உபயோகிக்கிறவன் தான் செய்தது கொலையாகு மென்றும், அது பாபமான கார்யமென்றும் உணர்ந்து தன் அறிவின்மைக்காகப் பச்சாதாபப்படுவான். ஆனால் பிறர்க்குத் தீங்கிழைக்காமல் தான் சாகத் துணிந்தவன் செய்தது பிழையானாலும் அவனுக்கு அது வெற்றியேயாகும். சத்யாக்ரக மென்பது அஹிம்சா மதம். ஆகையால் அது எங்கும், எப்பொழுதும் கடமையும் விரும்பத்தக்கதுமாகும். பலாத்காரம் என்பது ஹிம்சை. அது எல்லா மதங்களிலும் விலக்கப் பட்டிருக்கின்றது. ஹிம்சை முறையை அநுஷ்டிக்கிறவர்களுங்கூட அதை உபயோகிப்பதற்கு அனேக நிபந்தனைகள் ஏற்படுத்தி யிருக்கின்றனர். சத்யாக்ரகத்திற்கு அவ்வித நிபந்தனைகள் ஏற்படுத்த முடியாது. துன்பத்தைச் சகித்துக் கொள்வதற்கு சத்யாக்ரகிக்குள்ள சக்தி போதாமை யொன்றே அதற்குள்ள நிபந்தனையாகும்.

சக்தியாக்ரகி யொருவனுடைய சத்யாக்ரகம் சரியானதா, அல்லவா என்ற கேள்விக்கு அவனைத் தவிர வேறெவரும் பதிலுரைக்க முடியாது. சத்யாக்ரகி தன் வேலையை ஆரம்பித்த பின்னரே, பொது ஜனங்கள் தங்கள் அபிப்பிராயத்தை உரைக்க இயலும். பொது ஜனங்களுடைய வெறுப்பு அவனைத் தடுக்க முடியாது. நுட்பமாக முன் கூட்டி யோசித்து அவன் கார்யத்தைத் தொடங்குவதில்லை. வெற்றி தோல்விகளைப் பற்றி முன்கூட்டி யோசித்துப் பின் சத்யாக்ரகத்தை ஆரம்பிப்பவனை சாமர்த்தியமுள்ள ராஜதந்திரி அல்லது புத்திமான் என்று சொல்லலாம்; ஆனால் அப்படிப்பட்டவன் எவ்விதத்திலும் சத்யாக்ரகியாக மாட்டான். சத்யாக்ரகி ஜயமோ, தோல்வியோ, செய்யாமலிருக்க முடியாதென்ற காரணமொன்றினாலேயே செய்கிறான்.

ஆன்ம பலமும் புஜ பலமும் தொன்று தொட்டு வழங்கி வந்தவை. சகல மத சாஸ்திரங்களிலும் இவ்விரண்டின் புகழும் அதற்குத் தகுந்தவாறு கூறப்பட்டிருக்கிறது. அவை 'யிரண்டும் முறையே நன்மை தீமையாகிய இரண்டையும் குறிக்கின்றன. நமது நாட்டில் தர்மத்தின் பலமே மேலோங்கி நின்ற காலமொன்றுண்டென்பது நமது நாட்டினரின் கொள்கை. அதுவே இப்பொழுது நம்முடைய லட்சியமாக இருக்கின்றது. அதர்மத்தின் பலம் மேலோங்கி நிற்பதற்கு ஐரோப்பா தேசம் ஒரு சிறந்த திருஷ்டாந்தமாகும்.

கோழைத்தனத்தை விட இவ்விரண்டிலொன்றே மேலானதாகும். இவ்விரண்டிலொன்றை அநுஷ்டிக்காமல் நமக்குள் தேச முன்னேற்றமும் சுயராஜ்யமும் அடைதல் முடியாது. கார்ய மொன்றுஞ் செய்யாமல் கிடைக்கும் சுயராஜ்யம் சுயராஜ்யமாகாது. அவ்வித சுயராஜ்யத்தில் ஜனங்களுக்கு யாதொரு பற்றுமிராது. ஜனங்கள் தங்களுடைய சக்தியை உணர்ந்தாலன்றி யாதொரு முன்னேற்றமும் அடைய முடியாது. தலைவர்கள் என்ன சொன்னாலும் சரி, அரசாங்கத்தார் என்ன செய்தாலும் சரி, அவர்களும் நாமும் சத்யாக்ரகத்திற்கு முக்ய ஸ்தானம் கொடுக்காவிடில் பலாத்கார வழிகள் தாமாகவே சக்தி பெற்றுவிடும். பலாத்கார வழிகள் களைக்குச் சமானமானவை, அவைகள் எந்த நிலத்திலும் உண்டாகும். ஆனால் சத்யாக்ரகப் பயிரின் வளர்ச்சிக்கு ,வேண்டியவை முயற்சியும் மனோ தைர்யமும் ஆகும். களைகள் பறித்தெறியாவிட்டால் எப்படிப் பயிரைக் கெடுத்து விடுமோ அப்படியே சத்யாக்ரக வளர்ச்சிக்குத் தியாகத்தால் நிலத்தைப் பண்படுத்தி வைத்திராத இடத்திலும், பலாத்காரம் முளைத்த இடத்தில் அதை உடனே அன்பால் களைந்தெறியாத இடத்திலும், பலாத்காரமும் வெகுவாய் வளர்ந்து கேடு விளைக்கும். நாம் சத்யாக்ரகத்தை அநுஷ்டித்தால்,

சர்க்காரின் அநீதிகளைக் கண்டு கோபமடைந்து ஆத்திரப் படும் சிறுவர்களை அவர்களுடைய தீய வழிகளினின்றும் விலக்கி, அவர்களுடைய வீரத்தையும் மனோதைர்யத்தை யும் நல் வழியில் உபயோகிக்கும்படி செய்ய முடியும்.

ஆகையால் எவ்வளவுக் கெவ்வளவு சத்யாக்ரக உணர்ச்சி நாட்டில் பெருகுகின்றதோ, அவ்வளவுக்கவ் வளவு நன்மை யுண்டாகும். அதனால் அரசாங்கம், குடிகள் இருவர்க்கும் க்ஷேமமுண்டாகும். சத்யாக்ரகி சர்க்காருக் கும் பிறர்க்கும் கஷ்ட முண்டுபண்ண விரும்புவதில்லை. அவசரப்பட்டு யோசனையின்றி ஒன்றையுஞ் செய்வதில்லை. அவனிடம் ஒரு பொழுதும் அவமரியாதை கிடையாது. அதனால் அவன் 'பகிஷ்காரம்' என்பதை வெறுத்து, "சுதேசியம்" என்பதைத் தன் மதமாகக் கொண்டு அதை அநுஷ்டிப்பதில் ஒரு பொழுதும் பின்னடைவ தில்லை. கடவுள் ஒருவருக்கே பயபக்தி உடையவன். ஆகையால் உலகில் வேறெவருக்கும் அஞ்சான். அரசர்க்கு அஞ்சித் தன் கடமையை விட்டு ஒரு பொழுதும் விலகான்.

## 6

நாம் சுயராஜ்யம் அடைய விரும்புகின்றோம். அதை அடைய இரண்டு வழிகள் உண்டு. ஒன்று மெய்யா னது; ஒன்று பொய்யானது. நமது சாஸ்திரங்களில் அவை கள் முறையே தெய்வீகமானவை யென்றும், அசுரத் தன்மையானவை யென்றும் கூறப்பட்டிருக்கின்றன. சத்யாக்ரக முறையில் என்ன கேடு விளைந்தாலும் எப்பொ ழுதும் உண்மையினின்று சிறிதும் பிறழாது நடக்கவேண் டும். தேசத்தின் க்ஷேமத்தைக் கருதிக்கூட அதை விட்டு விலகக் கூடாது. தெய்விக முறையில் சத்தியமே இறுதி யில் ஜயமடையும் என்பது துணிபு. சத்ய மார்க்கத் தில் சில வேளை கடக்க முடியாத கஷ்டங்களும், ஆபத்துக் களும் இருப்பதாய்த் தோன்றினாலும், அந்த நேர்வழியி

ன்று சிறிது விலகி நடந்தால் நன்மை அதிகமாய் விளைவதாய்த் தோன்றினாலும் சத்யாக்ரகி அதை விட்டு விடான். அப்பொழுதும் நடுப் பகலில் சூரிய வெளிச்சம்போல், சத்ய நெறியில் அவனுக்குள்ள நம்பிக்கை பிரகாசித்துக் கொண்டிருக்கும். அவன் ஒரு பொழுதும் மனச் சோர்வடையான். வாய்மையையே வாளாகக் கொண்டதால் அவனுக்கு வேறு வாளாவது, வெடி மருந்தாவது, வேண்டிய அவசியமில்லை. அன்பாகிய ஆன்ம பலத்தால் அவன் பகைவனை வெல்கிறான். நண்பர்களுக்குள் அதன் உபயோகத்தைப் பரீட்சை செய்ய முடியாது. நண்பன் நண்பனை நேசிப்பதில் சிரமமுமில்லை, மேன்மையுமில்லை. பகைவன் என்று கருதுபவனை நேசிப்பதில் தான் மேன்மையுண்டு. அப்பொழுது அது ஒரு நற்குணமாகும். அதில் சிரமமுமுண்டு. ஆண்மைக்குரிய கார்யமும் மெய்யான மனோதைர்யமுமாகும். இம்முறையை அரசாங்கத்தினிடம் கையாளலாம். கையாண்டால், அவர்களுடைய நன்மையான கார்யங்களை அறியவும், பிழைகளைக் கோபமின்றி அன்புடன் எடுத்துக் காட்டுவதால் வெகு சுலபமாய்த் திருத்தவும் கூடும். அச்சமுள்ள விடத்து அன்பு நிகழாது. ஆகையால் அன்பு செய்வதற்கு பலவீன மிருக்கக்கூடாது. கோழையானவன் அன்புகாட்ட முடியாது. தைர்யவானே அன்புகாட்ட அதிகாரம் பெற்றவன். இம்முறையை அநுசரித்தால் அரசாங்கத்தார் செய்யும் சகல கார்யங்களையும் சந்தேகிக்கவோ, அல்லது அவர்களிடம் கெட்ட எண்ணங்கள் கற்பிக்கவோ கூடாது. அவர்கள் கார்யங்களை அன்பால் சோதிப்பின் தவறுதலும் ஏற்படாது; அதனால் அவர்கள் நாம் சொல்வதையும் நம்புவர்.

அன்பு செய்வதில் கஷ்டங்களும் உண்டு. அதிகார வெறியால் அனேக முறை மனிதன் தன் பிழைகளை உணர்வதில்லை. அப்பொழுது சத்யாக்ரகி சும்மா உட்கார்ந்திருப்பதில்லை. அவன் கஷ்டம் அனுபவிக்கிறான்.

அவன் சர்க்கார் சட்டங்களையும் உத்திரவுகளையும் கீழ்ப் படிய சாத்வீகமாய் மறுத்து, அதனால் ஏற்படும் துன்பங் களை எல்லாம் மனமொத்து அநுபவிக்கிறான். இவ்விதம் ஆன்மா தேர்ச்சியடைகின்றது. இதில் சக்தியொன்றும் வீணுவதில்லை. இப்படிச் சாத்வீகமாய் மறுப்பதில்ஏதேனும் கேடுகள் ஏற்படின் அவைகளைச் சத்தியாக்கிரகியும் அவன் தோழர்களுமே அநுபவிப்பர். சத்யாக்ரகி அதிகாரிகளோடு கலகஞ் செய்வதில்லை. அதிகாரிகளே மனப்பூர்வமாக அவ னைப் பணிவர். அவனை ஆயுதத்தால் வெல்ல முடியாதென்று அவர்களுக்குத் தெரியும். அவனுடைய சம்மதமின்றி, அவ னைத் தங்கள் மனம் போல் நடக்கும்படி செய்ய முடியாது. இதுவே முழு சுயராஜ்யமாகும்; ஏனெனில் அதில் பூர்ண சுதந்திரமும் அடங்கி யிருக்கின்றது. நாகரீக முள்ள அரசர்களிடம் மட்டுந்தான் இப்படிச் சாத்வீக மாய் எதிர்க்க முடியுமென்று நினைக்க வேண்டாம். எவ் வளவு கடினமான கல் மனமும் ஆன்ம சக்தியில் எழும் அக்கினியில் இளகி விடும். கொடுங்கோன்மை யுருவான நீரோ சக்ரவர்த்தியுங் கூட அன்பின் முன் ஆட்டுக்குட்டி போல் அடங்கி விடுவான். இது புனைந்துரை யன்று. கூட்டல், கழித்தல் போல் உண்மையானதே. இத்தகைய சத்யாக்ரகம் இந்தியாவின் விசேஷ ஆயுதமாகும். மற்ற ஆயுதங்களும் இருந்திருக்கின்றன. ஆனால் அதிகமாகப் போற்றப்பட்டது இதுவே. இது சர்வ வியாபகமுள்ளது; எக்காலத்திலும், எச்சந்தர்ப்பத்திலும் இதை உபயோகிக்க முடியும். இதை உபயோகிக்கக் காங்கிரஸின் உத்திரவு வேண்டிய அவசிய மில்லை. இதன் சக்தியை அறிந்தவன் உபயோகியாமலிருக்க முடியாது. எப்படிக் கண்ணிமை கண்ணைத் தானகவே காக்கின்றதோ, அப்படியே சத்யாக் ரகமும் ஆன்மாவின் சுதந்திரத்தைத் தானகவே காக் கின்றது.

ஆனல் பொய்க்கோ இதற்கு மாறுபட்ட குணங்கள் உண்டு. ஐரோப்பாவில் நடந்து கொண்டிருக்கும் யுத்தமே

இதற்கு உதாரணமாகும். ஒரு தேசம் மற்றோர் தேசத்தை புஜ பலத்தை மட்டுங் கொண்டு ஜயித்து விட்டால் ஜயித்த தேசத்தின் விஷயம் நியாயமானதென்றும், தோற்ற தேசத்தின் விஷயம் அநியாயமானதென்றும், சொல்வதற்கு என்ன நியாயமோ? அநேகமாய் பலவான் பலஹீனனைக் கெடுத்து வாழ்வதைக் காண்கிறோம். புஜபலச் சண்டையில் தோற்றதால் பலவீனனுடைய விவகாரம் தப்பென்றும் ஜயித்ததால் பலவானுடைய விவகாரம் சரியென்றும் சொல்வதாகாது. புஜபலத்தை உபயோகிப்பவன் தான் கையாளும் முறைகள் சரியானவையா என்று யோசிப்பதில்லை. முறைகள் எவையானாலும் சரி, தன் காரியம் மட்டும் கைகூட வேண்டும். இது தர்ம மன்று அதர்மம். தர்மத்தில் பொய், குரூரம், கொலை முதலியவை எள்ளளவும் கிடையாது. அன்பிற்கும் உண்மைக்கும் தக்கவாறே தர்மத்தின் அளவுமாகும். இவ்விரண்டிற்கும் பதிலாக ஸ்வர்க்கமே கிடைத்தாலும் வேண்டத் தக்கதன்று. உண்மையை யிழந்து ஸ்வராஜ்யம் பெறுவதிலும் பயனில்லை. உண்மையை யிழத்தலே ஒரு தேசத்தின் அழிவிற்கு அஸ்திவாரம். புஜபலத்தை நம்புபவன் பொறுமையை யிழந்து, தான் பகைவன் என்று எண்ணுபவன் இறந்து விட வேண்டுமென்று விரும்புவான். அவ்விருப்பத்தின் பலன் ஒன்று தான்; பகைமை பெருகும். தோற்றவன் பழி வாங்கச் சபதஞ் செய்து கொண்டு, அதைச் சாதித்துக் கொள்ள ஏற்ற சமயத்திற்காகக் காத்திருப்பான். இவ்விதம் பழி வாங்கும் எண்ணம் தகப்பனிடம் இருந்து மகனுக்கு இறங்கும். இந்தியா தேசம் இந்த புஜபல வழிபாட்டில் இறங்காதிருக்க விரும்புகிறேன். சத்யாக்ரகத்தை அநுஷ்டிப்பதில் முதலில் ஏமாற்றமடைய வேண்டிவரலாம். சில காலம் வரை யாதொரு நன்மையுந் தோன்றாமல் இருக்கலாம். ஆனால் சத்யாக்ரகமே முடிவில் ஜயமடையும். புஜபலத்தை நம்பினவன் செக்கு மாடுபோல் சுற்றிச் சுற்றி வருவான்; அப்படி வருவது சலனமே

யன்றி முன்னேற்றமன்று. ஆனால் சத்யாக்ரகியோ எப்பொழுதும் முன்னேறியே செல்வான்.

நான் மேலே எழுதியிருப்பவைகளை ஆழ்ந்து வாசிப்பவர்கள் ஒன்றுக்கொன்று முரண்பட்டவைகளா யிருப்பதாகக் கருதலாம். ஒரு பக்கத்தில் அரசாங்கத்தை ஜனங்களுக்கு யுத்தப் பயிற்சி தரும்படி வேண்டுகிறேன். மற்றொரு பக்கத்தில் சத்யாக்ரகமே சிறந்ததெனப் போற்றுகிறேன். சத்யாக்ரகத்தில் நம்பிக்கையில்லாதவர்களுக்குத்தான் யுத்தப் பயிற்சி வேண்டியதவசியம். எப்பொழுதாவது இந்திய ஜனங்கள் அனைவரும் சத்யாக்ரகத்தை ஏற்றுக் கொள்வரென்று கனவிலும் நான் கருதவில்லை. ஆனால் பலவீனர்களைக் காப்பாற்ருதிருப்பது முற்றிலும் ஆண்மையற்றவர் செய்கையாகும்; எங்கும் அதை வெறுக்க வேண்டிய தவசியம். கற்பழிக்க விரும்புந் துன்மார்க்கனிடமிருந்து நம் சகோதரியைக் காப்பாற்ற நம்முயிரைத் தியாகஞ் செய்யவும், அவனிடமுள்ள மிருக குணத்தை அன்பினால் வெல்லவும், வேண்டும். அப்படிச் செய்ய ஆன்மபலமில்லா விட்டால், புஜபலத்தினலாவது காப்பாற்ற வேண்டும். சத்யாக்ரகியும் புஜபல மனிதனும் யுத்த வீரர்களே. புஜபல மனிதன் ஆயுதமிழந்தவுடன் தோற்றதாக ஒப்புக்கொள்கிருன். ஆனல் சத்தியாக்ரகிக்குத் தோல்வி என்ருல் என்ன என்பதே தெரியாது. சத்தியாக்ரகி தனக்கு வேண்டிய சக்திக்காக, அழியுந் தன்மையுள்ள தன் தேகத்தையும் அதன் ஆயுதங்களையும் நம்பாமல், வெல்ல முடியாத, அழிவற்ற தன் ஆன்மாவையே நம்பியிருக்கிருன். புஜபல மனிதனே தன்னுள்ளிருக்கும் ஆன்மாவை மறந்து விடுகிருன்; மறக்கா விட்டால் பயந்து ஓடமாட்டான். தன் தேகத்தைக் காப்பாற்ற எண்ணி லோபியைப் போல சகலத்தையும் இழக்கிருன்; அவனுக்கு எப்படி இறப்பதென்பது தெரியாது. ஆனல் ஆயுதபாணியான யுத்த வீரன் யமனை எப்பொழுதும் தன் தோழனை

[illegible]வே வைத்திருக்கிறான். அதனால் அவனும் ஒரு காலத்தில் சத்யாக்ரகியாகக் கூடும் என்ற நம்பிக்கை உண்டு. புண்ய பூமியாகிய இப்பரத கண்டமும் புஜபலத்தைப் போற்றாது, ஆன்ம பலத்தையே என்றும் போற்றுமென்று நம்ப இடமுண்டு. பலவான் செய்வதே நீதி என்ற வாக்கியம் இந்தியாவில் ஒருக்காலும் ஒப்புக்கொள்ளப்பட மாட்டாதென நம்புவோமாக. சத்தியமே வெல்லும் என்பதே பாரத தேவியின் மந்திரமாகும்.

## 7

சத்யாக்ரகம் என்றால் என்ன? அது அடிக்கடி வர்ணிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் எப்படிச் சூரியனை ஆயிரம் நாவுடைய ஆதிசேஷனும் முழுதும் வர்ணிக்க முடியாதோ, அப்படியே சத்யாக்ரகத்தையும் போதிய அளவு வர்ணிக்க முடியாது. எப்படிச் சூரியனை எப்பொழுதும் பார்த்துக் கொண்டிருப்பினும் சொற்பமாகவே அதைப்பற்றி அறியக்கூடியதாய் இருக்கின்றதோ அப்படியே சத்யாக்ரகச் சூரியனையும் எப்பொழுதும் பார்ப்பது போல் தோன்றினும் வெகு சொற்பமாகவே அதைப் பற்றி அறியக் கூடியதா யிருக்கின்றது.

சத்யாக்ரகத்தை அனுஷ்டிக்கத் தக்க விஷயங்கள் சுதேசியம், ஆசாரச் சீர்திருத்தம், ராஜீயச் சீர்திருத்தம், ஆகியவைகளாகும். இவைகள் எவ்வளவு தூரம் சத்யாக்ரகத்தை அடிப்படையாகக் கொண்டிருக்கின்றனவோ, அவ்வளவு தூரந்தான் அவைகளால் சாஸ்வதமான நன்மை உண்டாகும். சத்யாக்ரக வழி புதிது; ஆகையால் அதைக் கண்டு பிடிப்பது எளிதன்று. சிலரே அவ்வழியில் நடக்கத் துணிவர். அதனாலே தான் ஜனங்கள் அவ்வழியில் நடக்க மிக அஞ்சுகின்றனர். ஆயினும், எவ்வளவு மெதுவாகவேனும், ஜனங்கள் அவ்வழியில் நடக்க முன் வருகின்றனர் என்பது தெளிவாகத் தெரிகின்றது.

சத்யாக்ரகம் என்பதற்குச் சாத்வீகச் சட்ட மறுப்பைத் தவிர வேறு பொருள் அறியாதவன் சத்யாக்ரகத்தின் தத்துவத்தையே அறிந்தவனல்லன். சத்தியாக்ரகத்தில் சாத்வீகச் சட்ட மறுப்பும் அடங்கும் என்பது உண்மைதான். ஆனால் எவன் சட்டத்திற்குப் பணியும் வித்தையில் முழுதுங் கற்றுத் தேர்ந்திருக்கிருனே, அவனே சட்டத்தை மறுத்தல் வித்தையையும் அறிவான். எவனுக்கு நன்ருய் சிருஷ்டிக்கத் தெரியுமோ, அவனுக்குத் தான் அழிக்கவும் தெரியும்.

> உண்மை வழியில் பலமுடையவரே நடக்க முடியும்,
> கோழைகளால் முடியாது."

என்பது புலவர் மொழி.

சுதேசியமும் சத்தியாக்ரகமே. சுதேசியத்தைத் தாங்கள் அனுஷ்டிக்கவாவது அல்லது பிறரை அனுஷ்டிக்கச் செய்யவாவது கோழைகளால் முடியாத காரியம். இந்து முஸ்லிம் இருவரில், ஒருவர் கத்தியால் குத்துவதை மற்றவர் மன உறுதி குலேயாது பொறுத்துக் கொண்டிருப்பது கோழையின் காரியமாக மாட்டாது. இருவரும் பொறுமையோடிருப்பின் சுயராஜ்யம் அந்தக் கணமே கிடைத்து விடும். நாம் சத்யாக்ரக வழியில் நடப்பதைத் தடுப்பதற்கு ஒருவரும் இல்லே. இந்தப் பொருளில் சுதேசியமும் இந்து முஸ்லீம் ஒற்றுமையும் மத சம்மந்தமானதாகையால் இவ்விரண்டையும் அனுஷ்டிப்பதில் இந்தியா மத சம்பந்தமான ஓர் காரியத்தைச் செய்ததுமாகும். ஆகையால் புது வருஷத்திற்காக நாம் செய்து கொள்ளும் தேவ பிரார்த்தனே இதுவே :— கடவுளே ! இந்தியாவை உண்மை நெறியில் நடத்துவீராக. அவ்விதஞ் செய்து, சுதேசிய மதத்தைப் போதிக்கவும், இந்தியாவிலுள்ள சகல மதஸ்தரையும் ஒற்றுமையாக்கவும் செய்வீராக.

# 8

சத்யாக்ரகத்திற்கும் சாத்வீக எதிர்ப்பிற்கும் மிக்க வித்தியாசம் உண்டு. சாத்வீக எதிர்ப்பு பலமற்றவர்களுடைய ஆயுதம்; அதன்படி ஒருவன் தன் லட்சியத்தை அடைய பலாத்காரத்தை உபயோகிக்கலாம். ஆனால் சத்யாக்ரகம் பலவானிலும் பலவானுடைய ஆயுதம்; அதன்படி ஒருவன் எவ்வித பலாத்காரமும் உபயோகிக்கக் கூடாது.

நான் தென் ஆப்ரிக்காவில் இருக்கும் பொழுது அங்குள்ள இந்தியர்கள் எட்டு வருஷங்களாக உபயோகித்து வந்த சக்தியைக் குறிப்பதற்கும், தென் ஆப்ரிக்கா, இங்கிலாந்து ஆகிய தேசங்களில் அப்பொழுது சாத்வீக எதிர்ப்புஎன்றபெயரால் நடந்து கொண்டிருந்த இயக்கத்தினின்று அச் சக்தியை வேறு பிரித்துக் கூறுவதற்குமாக 'சத்யாக்ரகம்' என்ற மொழியை சிருஷ்டித்தேன்.

அதன் தாதுப் பொருள் உண்மையைக் கடைப் பிடித்தல் என்பது. அதாவது உண்மை பலமாகும். நான் அதை அன்பு பலம் என்றும் ஆன்ம பலமென்றும் கூறியிருக்கிறேன். எதிரியின் மீது பலாத்காரத்தை உபயோகித்தல் என்பது சத்யத்தை நாடுதல் என்பதில் அடங்காது என்றும், பொறுமையாலும், அநுதாபத்தாலுமே எதிரியை அவனுடைய பிழையினின்றும் விலக்க வேண்டும் என்றும் நான் ஆரம்பத்தில் அறிந்தேன். ஏனெனில் ஒருவனுக்கு மெய்யெனத் தோன்றுவது மற்றொருவனுக்குப் பொய்யெனத் தோன்றலாம். மேலும் பொறுமைக்குத் துன்பத்தைச் சகித்தல் என்பது பொருள். ஆகவே எதிரிக்குத் துன்பஞ் செய்வதன் மூலமாயல்லாமல் தனக்கே துன்பத்தை விளைவித்துக் கொள்வதன் மூலமாய் சத்தியத்தை நிலை நாட்டுதல் என்பதே சத்யாக்ரகத்தின் பொருளாகும்.

ஆனால் அரசியல் விஷயத்தில், அநீதியான சட்டங்களை எதிர்ப்பதிலேயே ஜனநாயகப் போர் பெரும்பாலும் அடங்கி யிருக்கின்றது. மனுக்கள் முதலியவை கொடுத்தும் சட்டம் இயற்றுபவர் தம் பிழையைத் திருத்திக் கொள்ளா விட்டாலும், நாமும் பிழையைப் பொறுத்துக் கொள்ள விரும்பாவிட்டாலும் நாம் அவரைப் பணியச் செய்வதற்குரிய வழி இதுவே. ஒன்று அவரைப் பலாத்காரத்தால் கட்டாயப்படுத்த வேண்டும். அல்லது சட்டத்தை மீறி அதற்குள்ள தண்டனையைப் பெற்று துன்பத்தை அநுபவித்தல் வேண்டும். அதனால் தான் ஜனங்களுக்கு சத்யாக்ரகம் என்பது அநேகமாய் சாத்விகச் சட்ட மறுப்புப் போல் தோன்றுகிறது. இங்கே சாத்விகத்திற்கு துஷ்கிருத்யம் அல்லது பலாத்காரம் அற்றது என்பது பொருளாகும்.

சாதாரணமாக சட்டத்தை மீறி நடப்பவன் சட்டத்தைத் திருட்டுத்தனமாய் மீறி, மீறுவதால் வரும் தண்டனையை அடையாதிருக்க முயல்கிறான். ஆனால் சாத்விகமாய் எதிர்ப்பவன் அவ்விதம் செய்யான். அவன் எப்பொழுதும் தன் தேசத்தின் சட்டங்களை மீறாது அவைகளின் படியே நடப்பதற்கு தண்டனைக்கு பயம் காரணமாகாது. ஜன சமூகத்திற்கு அச் சட்டங்கள் நன்மை தருமென்று அவன் கருதுவதே காரணமாகும். சில சட்டங்கள் அநீதியானவை என்றும், அவைகளைப் பணிதல் அகௌரவம் என்றும் கருதக் கூடிய சில சந்தர்ப்பங்கள் வரலாம். அப்பொழுது அவன் அச் சட்டங்களை பகிரங்கமாகவும், சாந்தமாகவும் மீறி நடந்து அதற்கேற்பட்ட தண்டனையை பொறுமையுடன் அநுபவிப்பான். அவன் சட்டமியற்றுவோரின் காரியத்தைக் கண்டிக்க விரும்பினால், எந்தச் சட்டங்களை மீறுவதால் ஒழுக்கக் குறைவு ஏற்படாதோ அந்தச் சட்டங்களை, நீதியானதா அல்லது அநீதியானதா என்று பாராமல் மீறி அதன் மூலமாய்

அரசாங்கத்தோடு ஒத்துழையாமலும் இருக்கலாம். சத்யாக்ரகம் அதிகமான அழகும் ஆற்றலும் பொருந்திய தென்பதும், குழந்தைகளும் எளிதில் அறிந்து கொள்ளுமாறு போதிக்கக் கூடிய தென்பதும் என் அபிப்பிராயம். தென் ஆப்ரிக்காவில் சாதாரணமாய் ஒப்பந்தக் கூலிகளெனப்படும் ஆண் பெண் குழந்தைகள் ஆயிரக்கணக்கானவர்க்கு அதைப் போதித்திருக்கிறேன். அதனால் அதிசயமான நன்மையே விளைந்திருக்கிறது.

## 9

சத்யாக்ரகத்தில் சாத்வீகச் சட்டமறுப்பாகிய அம்சத்தை ஒருவர் ஒப்புக் கொள்ளாதிருக்கலாம். ஆனால் சத்தியத்தையும் அன்பையும் கொண்ட கொள்கையொன்றை ஒருவரும் மறுக்கமாட்டார். சத்தியத்தோடு அஹிம்சையையும் நாம் அநுஷ்டானத்தில் கொண்டு வந்துவிட்டால் உலக முழுதும் நம் பாதத்தில் பணியும். அரசியல் வாழ்வில் சத்தியத்தையும் சாந்தத்தையும் அனுஷ்டிக்கச் செய்வதே சத்யாக்ரகத்தின் நோக்கமாகும்.

## 10

சத்யாக்ரகத்தை அனுஷ்டிக்கும் பொழுது சில வேளைகளில் பலாத்காரத்தால் எதிர்த்தலும் நியாயமாகாதோ, உதாரணமாக, ஒரு சகோதரியின் கற்பை ஒரு போக்கிரி கெடுக்க முயன்றால் அப்பொழுது அதைத்தடுக்க பலாத்காரத்தை உபயோகப் படுத்தக் கூடாதோ என்று என்னைப் பலர் கேட்கின்றனர். ஆனால் என் அபிப்பிராயத்தில், யாதொரு கோபமும் மனக்கலக்கமு மின்றி ஆத்திரப்படாமல் அச் சகோதரிக்கும் போக்கிரிக்கும் இடையில் நின்று உயிர் துறக்கச் சித்தமாயிருப்பதுவே அவளுடைய கற்பைச் சரிவரக் காக்கும்வழியாகும். எதிரிக்குப் புதிதாகத் தோன்றும் இப் புதிய பாதுகாப்பு முறையால்,

அவனுடைய ஆசையுந் தணிந்து விடும், அவனும் ஒரு நிராபராதியான பெண்ணின் கற்பையழிக்க விரும்பாமல் வெட்கமேலிட்டு ஓடிவிடுவான். அப்படி அவன் ஓடாவிட்டால் அப்பெண் தன் சகோதரனுடைய தைரியமான கார்யத்தைப் பார்த்து, தற்சமயம் மிருகத்தன்மை யடைந்த மனிதனுடைய காம இச்சையைத் தடுத்துத் தன் கற்பைக் காத்துக் கொள்ளத் தன் மனதை உறுதி செய்து கொள்வாள். தவிர அத் துன்மார்க்கன் புஜவலியால் அப்பெண்ணின் கற்பை யழித்து விட்டால், அதனால் உண்டாகும் அவமானம் அவனுடையதேயாகும், அவளுடையதாகாது. கற்பைக் காப்பதில் உயிர் துறந்த பெண்ணும் அவளுடைய சகோதரனும் கடைசி நாளில் கடவுளின் அருளுக்குப் பாத்திரமாவார்கள். மற்றவர்கள் நான் சொல்வதை முழுவதும் நம்புவார்கள் என்று நான் நிச்சயஞ் சொல்ல முடியாது. உலகிலுள்ள மனிதர் முன்போலவே நடந்து கொண்டிருப்பர் என்பதை நான் அறிவேன். சகல மதங்களும் எல்லாவற்றிலும் உயர்ந்த லட்சியத்தையே வற்புறுத்தியிருந்தாலும், முற்றிலும் அதன்படி நடக்க எல்லோர்க்கும் சாத்தியப் படாதென்பதை யுணர்ந்து, அதிலிருந்து சற்றேறவிலகி நடக்க இடங்கொடுத்திருக்கின்றன.

"தேகத்திற்கு அகங்காரம் ஆதாரம் ஆவதுபோல், சமயத்திற்கு கருணை அல்லது அன்பு ஆதாரமாகும். ஆகையால் உயிருள்ளவரையும் கருணையை விட்டுவிடலாகாது." என்று கவி துளசிதாசர் கூறுகின்றார். இது சாஸ்திர சம்பந்தமான உண்மை என்று எனக்குத் தோன்றுகிறது. இரண்டும் இரண்டும் நான்கு என்பதை நம்புவதைப் போலவே இதையும் நான் நம்புகிறேன். அன்பின் சக்தியும் ஆன்மா அல்லது உண்மையின் சக்தியும் ஒன்றே. ஒவ்வொன்றிலும் அதன் உண்மையை அறிந்துகொண்டே இருக்கிறோம். அந்தச் சக்தி யின்றேல் உலகமே அழிந்து விடும்.

ஆனால் இதற்குச் சரித்திரத்தில் ஆதாரமுண்டா? இதற்குப் பதிலுரைக்கு முன், சரித்திரம் என்றால் என்ன என்று தெரிந்து கொள்ள வேண்டியதவசியம். குஜராத்தி பாஷையில் சரித்திரம் என்பதற்கு "அவ்விதம் நிகழ்ந்தது" என்பது பொருள். சரித்திரத்தின் பொருள் இதுவானால் அநேகமான ஆதாரங் கொடுக்க முடியும். ஆனால் சரித்திரம் என்பதற்கு அரசர்களுடைய சரிதை என்று பொருள் கொண்டால், ஆன்ம சக்தி அல்லது சாத்வீக எதிர்ப்பிற்கு அத்தகைய சரித்திரத்தில் ஆதாரங் கிடைப்பதரிது. ஈயச் சுரங்கத்தில் வெள்ளிக் கட்டி காண முடியுமோ? சாதாரணமாய் நாம் வாசிக்கும் சரித்திரம் உலகில் நடந்த யுத்தங்களின் குறிப்பேயன்றி வேறன்று. அதனால் ஆங்கிலேயர்களுக்குள் "சரித்திரம், அதாவது சண்டைகள் இல்லாத தேசமே இன்புறுந் தேசம்" என்று ஒரு பழமொழி வழங்குகின்றது. எவ்விதம் அரசர்கள் நடந்து கொண்டனர், எவ்விதம் அவர்கள் ஒருவரை ஒருவர் பகைத்துக் கொண்டனர், எவ்விதம் அவர்கள் ஒருவரையொருவர் கொலை புரிந்தனர் என்பது வெகு தெளிவாய்ச் சரித்திரத்தில் வரையப்பட்டிருக்கின்றது. உலகில் நடந்ததெல்லாம் இதுவேயானால், உலகம் வெகுநாட்களுக்கு முன்னதாகவே முடிவு பெற்றிருக்கும். உலக சரித்திரம் சண்டைகளோடு தொடங்கியிருந்தால், இன்று ஒருமனிதனைக்கூட காண்பது அரிதாகி விடும். இன்னும் எத்தனையோ மனிதர் உயிருடன் இருக்கின்றனர் என்னும் விஷயமானது உலகத்தின் ஆஸ்திவாரம் ஆயுதபலம் அன்று, உண்மை அல்லது அன்புச் சக்தியே என்பதை விளக்குகின்றது. ஆகையால் உலகில் எத்தனையோ போர்கள் நடந்தும் இன்னும் அது உயிருடனிருக்கின்றது என்பதுவே இந்த ஆன்ம சக்திக்குப் பெரிதும் மறுக்க முடியாததுமான சான்றாகும்.

நூற்றுக் கணக்கான ஜன சமூகங்கள் சமாதானமாகவே வாழ்ந்து வருகின்றன. இவ்விஷயத்தைச் சரித்திரம்

கவனிப்பதும் இல்லை; கவனிக்கவும் முடியாது. ஆன்ம சக்தி ஒழுங்காய் நடைபெற்று வரும் பொழுது ஏற்படும் இடையூறுகளின் குறிப்பே சரித்திரமாகும். இரண்டு சகோதரர்கள் சண்டையிட்டுக் கொள்கின்றனர். ஒருவன் பச்சாத்தாபப் பட்டு தன்னிடம் அயர்ந்திருந்த அன்பை எழுப்புகின்றான்; அதனால் இருவரும் மறுபடியும் சமாதானமாக வாழத் தொடங்குகின்றனர். இதை ஒருவரும் கவனிப்பதில்லை. ஆனால் இரு சகோதரர்களும் வக்கீல்களுடைய தூண்டுதலினால் அல்லது வேறு ஏதேனும் ஒரு காரணத்தை முன்னிட்டு ஆயுதமெடுத்துச் சண்டையிட்டுக் கொள்கின்றனர். அல்லது நியாய ஸ்தலத்தில் வழக்காடுகின்றனர். வழக்காடுதலும் மிருக பல உபயோகத்தில் ஒரு அம்சமே. அவ்விதம் சண்டையிட்டுக் கொண்டால் அவ்விஷயம் பத்திரிகைகளில் காணப்படுகின்றது; அயலார் அதைப் பற்றிப் பேசுகின்றனர்; சரித்திரத்திலும் அது இடம் பெறக் கூடும். குடும்பத்திற்கொத்தது ஜன சமூகங்களுக்கும் ஒத்ததேயாகும். குடும்பத்திற்கு ஒரு விதி, ஜன சமூகத்திற்கு ஒரு விதி, இருக்குமென்று நம்ப இடமில்லை. இயற்கையொழுக்கத்திற் கேற்படும் இடையூறுகளே சரித்திரத்தில் காணப்படுகின்றன. ஆன்ம சக்தி இயற்கையின் அம்சமாதலால் சரித்திரத்தில் காணப்படுவதில்லை.

சாத்வீக எதிர்ப்பு என்பது தானே துன்பத்தை ஏற்றுக் கொள்வதன் மூலமாய் தன் உரிமைகளைப் பாதுகாத்துக் கொள்ளும் முறையொன்றாகும். அது ஆயுதத்தால் எதிர்ப்பதற்கு மாறுபட்டது. என் மனச்சாட்சிக்கு விரோதமான காரியம் ஒன்றை நான் செய்ய மறுக்கும் பொழுது நான் ஆன்ம சக்தியை உபயோகிக்கின்றேன். உதாரணமாக, தற்சமயம் நடைபெறும் அரசாங்கம் என் சம்மந்தமாக ஒரு விதி ஏற்படுத்தி யிருக்கின்றது. அந்த விதியை ரத்து செய்யும்படி அரசாங்கத்தை பலாத்காரத்தால் கட்டாயப்படுத்தினால் நான் புஜபலத்தை உபயோ

மீறியவனுவேன். அந்த விதியை மீறி அதனுல் ஏற்படும் தண்டனையை ஏற்றுக் கொண்டால் நான் ஆன்ம பலத்தை உபயோகிப்பவனுவேன். இதற்குச் சுயநலத் தியாகம் வேண்டும்.

சுயநலத்தைத் தியாகஞ் செய்தல் பிறரைத் துன்புறுத்தலைவிட அளவற்ற மேன்மையுடையது என்பதை யாவரும் ஒப்புக் கொள்வர். மேலும் இத்தகைய சக்தியை அநீதியான வழக்கொன்றில் உபயோகித்தால், உபயோகிப்பவன் மட்டுமே துன்புறுவான். அவனுடைய குற்றத்தால் பிறர் துன்புறுர். பின்னர் பிழையென்று அறிந்த பல விஷயங்களை மனிதர் இதற்கு முன்பு செய்திருக்கின்றனர். தான் சொல்வது முற்றிலும் சரியானதென்ருவது, அல்லது ஏதோ ஒரு குறிப்பிட்ட விஷயந்தான் பிழையானதென்று நினைப்பதால் பிழையானதென்ருவது ஒருவரும் சொல்ல முடியாது. ஆனுல் ஒருவன் ஒரு விஷயத்தைப் பிழையென்று மனப்பூர்வமாய்த் தீர்மானித்திருக்கும்வரை, அது அவன் சம்பந்தப்பட்ட மட்டிலும் பிழையானதே. ஆகையால் தான் பிழையானதென்று அறிந்ததைச் செய்யாமல் அதனுல் எத்தகைய பயன் விளைந்தாலும் அதை ஏற்றுக் கொள்வது முறையே. இதுதான் ஆன்மபல உபயோகத்தின் ரகசியம்.

தன் ஆண்மையை உணர்ந்து கடவுளுக்கு மட்டும் அஞ்சுபவன் வேறெவருக்கும் அஞ்சான். ஆகையால் மனிதர்கள் ஏற்படுத்திய விதிகள் அவனைக் கட்டுப் படுத்தா. அரசாங்கத்தாரும் அவனை அவை கட்டுப்படுத்துமென்று எதிர்பார்ப்பதில்லை. “இன்ன இன்ன காரியம் நீ செய்ய வேண்டும்” என்று அவர்கள் சொல்வதில்லை. “இன்ன காரியம் நீ செய்யா விட்டால் நாங்கள் உன்னைத் தண்டிப்போம்” என்றுதான் அவர்கள் கூறுகின்றனர். சட்டத்தில் விதித்ததையெல்லாம் பணிய வேண்டியது நம் கடமை

யும் மதமும் ஆகுமென்று நினைத்துக் கொள்ளும்படி நாம் அவ்வளவு கீழ் நிலை எய்தி விட்டோம். அநீதியான விதிகளைப் பணிவது ஆண்மையன்று என்று மட்டும் நாம் உணர்ந்து விட்டால், ஒருவரும் நம்மை அடிமைகளாக்க முடியாது. இதுதான் சுயராஜ்யத்தின் ரகசியம்.

மிருகபலத்தை உபயோகிப்பது சாத்வீக எதிர்ப்பிற்கு முரண்பட்டது. ஏனெனில் நம்முடைய எதிரி நாம் சொல்லியுஞ் செய்யாத வொன்றை, நம்முடைய பலாத்காரத்தால் செய்யும்படி கட்டாயப் படுத்த விரும்புகிறோம் என்பது அதன் பொருள். அத்தகைய புஜ பல உபயோகம் நியாயமானதானல், நிச்சயமாய் அவனுக்கும் அவ்விதம் செய்வதற்கு உரிமையுண்டு. ஆகவே இருவரும் சமாதான முடிவிற்கு ஒரு நாளும் வர முடியாது. முன்னேற்றம் அடைந்து கொண்டிருப்பதாக நாம் எண்ணிக் கொண்டிருக்கலாம். மனச் சாட்சிக்கு விரோதமான விதிகளைப் பணிவதற்குக் கட்டுப் பட்டவர்கள் அல்லர் என்று நினைப்போர்க்கு சாத்வீக எதிர்ப்பைத் தவிர வேறு பரிகாரம் இல்லை. வேறு எதுவும் கேட்டையே தரும்.

சாத்வீக எதிர்ப்பு ஒப்பற்றது. ஆயுத பலத்திற்கு மேலானது. ஆகவே அதை எங்ஙனம் பலவீனர்களுடைய ஆயுதமாகக் கருதக் கூடும்? சாத்வீகமாய் எதிர்ப்பவனிடம் காணப்படும் மனோ தைர்யம் புஜபல மனிதனிடம் காண முடியாது. கோழையானவன் தான் வெறுக்கும் விதியொன்றை என்றைக்காவது மீறி நடக்க முடியும் என்று நம்புகிறீர்களா?

சாத்வீகமாய் எதிர்ப்பவன் தன்னை பீரங்கி வாயில் வைத்துப் பொடியாக ஊதினாலும், தன் மனச்சாட்சிக்கு விரோதமான எந்த விதியையும் பணிய முடியாதென்று சொல்லி விடுவான். பீரங்கிக்குப் பின்னால் நின்று கொண்டு பிறரைக் கொல்வதற்கா அல்லது சிரித்த முகத்

ஆடன் பீரங்கியை நோக்கிச் செல்வதற்கா, எதற்கு மனோ தைர்யம் வேண்டும்? யமனை என்றும் தன் உயிர்த் தோழனாக வைத்திருப்பவனா அல்லது பிறர் உயிரைப் போக்க அதிகாரம் பெற்றவனா, எவன் உண்மையான வீரன்? மனோ தைர்யமும் ஆண்மையும் இல்லாதவன் ஒருக்காலும் சாத்வீக எதிர்ப்பை உபயோகிக்க முடியாது.

ஆனால் இஃதொன்று மட்டுஞ் சொல்வேன். தேகபலம் இல்லாதவனும் சாத்வீகமாய் எதிர்க்க முடியும். ஆயிரம் பேரும் எதிர்க்கலாம்; ஒருவனும் எதிர்க்கலாம். அதை ஆடவர், பெண்டிர் இருபாலாரும் கையாளலாம். அதற்கு யுத்தப் பயிற்சி தேவையில்லை. தேகப் பயிற்சியுந் தேவையில்லை. அதற்கு மனத்தை அடக்குவதே தேவை. மனத்தை அடக்கிவிட்டால், வனராஜனைப் போல் மனிதன் சுதந்தர புருஷனாய் விடுவான். அவன் பார்வை யொன்றே பகைவனை வாட்டிவிடும்.

சாத்வீக எதிர்ப்பு நாற்புறத்திலும் கூர்மையுள்ள வாளாகும். அதை எவ்விதத்திலும் உபயோகிக்கலாம். அது உபயோகிப்பவனையும் எதிரியையும் ஆசீர்வதிக்கும்; இருதிறத்தாருக்கும் பயன் தரும். ஒரு துளி ரத்தம் சிந்தாமல், கணக்கிலடங்காத நன்மையைத் தரும். அது துருப் பிடிப்பதுமில்லை; அதைத் திருடவும் முடியாது. சாத்வீக எதிர்ப்பினர் ஒருபொழுதும் சோர்வுறார். சாத்வீக எதிர்ப்பு என்னும் வாளிற்கு உறை வேண்டியதில்லை. இத்தகைய ஆயுதத்தை பலஹீனர்களுடைய ஆயுதமென்று கூறுதல் நகைப்பிற் கிடமானதே.

தேகத்தைத் தன் வசமாக்காதவன் சாத்வீகமாய் எதிர்ப்பது கஷ்டமான காரியம். சுகானுபவத்தால் பலஹீனமுற்ற தேகத்திலுள்ள மனமும் பலஹீனமானதாகவே யிருக்கும். மனோ பலமில்லை என்றால் ஆன்ம பலமும் இல்லை.

சாத்வீகமாய் எதிர்ப்பது சுலபமான காரியந்தான். ஆனால் அது போலவே கஷ்டமுமான காரியமாகும். 14-வயதுப் பையன் சாத்வீகமாய் எதிர்ப்பதையும் பார்த்திருக்கிறேன். அதுபோலவே நோயாளிகள் எதிர்ப்பதையும் பார்த்திருக்கிறேன். ஆனால் தேக பலமுடையவர்கள் சாத்வீக எதிர்ப்பைக் கைக்கொள்ள முடியாமலிருப்பதையும் பார்த்திருக்கிறேன். மிக்க அநுபவத்தின் பேரில் எனக்குத் தோன்றுவது யாதெனில், சாத்வீக எதிர்ப்பைக் கையாள விரும்புவோர் பூர்ண பிரம்மசரியத்தை அநுசரிக்க வேண்டும், வறுமையை ஏற்றுக் கொள்ள வேண்டும், உண்மையை விட்டு விலகக் கூடாது, அஞ்சாமையை விர்த்தி செய்துகொள்ள வேண்டும் என்பதே. கஷ்டமென்று எண்ணி இவைகளை அனுஷ்டிக்காமல் இருக்க வேண்டாம். தானாக வரும் எந்தக் கஷ்டத்தையும் துன்பத்தையும் தாங்கிக் கொள்ளப் போதுமான தைர்யத்தைக் கடவுள் மனிதனுக்கு அளித்தே யிருக்கின்றார்.

## 11

சத்யாக்ரகம் என்பதன் பதப்பொருள் சத்தியத்தைக் கடைப் பிடித்தல் என்பதாகும். அதனால் அது சத்திய சக்தியாகும். அதை நான் அன்பு சக்தி என்றும் ஆன்ம சக்தி என்றும் கூறுகிறேன். சத்யாக்ரகத்தை அனுஷ்டிக்க ஆரம்பித்த பொழுது, உண்மையை நாடுவோன் எதிரிக்குத் தீமை செய்யக் கூடாது என்பதையும், எதிரியைப் பொறுமையாலும் அநுதாபத்தாலுமே திருத்த வேண்டும் என்பதையும் அறிந்தேன். ஏனெனில் ஒருவனுக்குச் சரியாகத் தோன்றுவது மற்றவனுக்குத் தவறாகத் தோன்றக் கூடும். பொறுமை என்பது தானே துன்பத்தை ஏற்றுக் கொள்ளுதல் என்று பொருள் படும். அதனால் சத்யாக்கிரகம் என்பது எதிரிக்குத் துன்பம் செய்யாமல் தான் துன்பத்தை ஏற்றுக் கொள்வதன் மூலம் சத்தியத்தை நிலைநாட்டுவதாகும்.

## 12

அணுவளவு கூட மாசில்லாத ஆன்ம சக்தியைப் பரிபூரணமாக அனுஷ்டித்தால் அந்த நிமிஷமே வெற்றி கிடைக்கும். ஆனால் அந்த விதமாக அனுஷ்டிப்பதற்கு நீண்ட நாள் ஆன்மப் பயிற்சி அவசியமாகும். பரிபூரணமாகச் சத்யாக்ரகத்தை அனுஷ்டிக்க விரும்புகிறவன் சகல நற்குணங்களையும் பரிபூரணமாகப் பெற்றிருத்தல் வேண்டும். இந்த விதமாக நோக்கினால் சத்யாக்கிரகமானது மனிதன் பெறக்கூடிய கல்வியில் தலை சிறந்ததாகும். ஆனால் நாம் திடீரென்று அத்தகைய மனிதர்கள் ஆகிவிட முடியாது. ஆயினும் எவ்வளவுக் கெவ்வளவு சத்யாக்ரக உணர்ச்சியைப் பெருக்கிக் கொள்கிறோமோ அவ்வளவுக் கவ்வளவு அதிகமாக நல்லவர்கள் ஆவோம். ஆதலால் சத்யாக்ரகத்தின் உபயோகத்தை யாரும் மறுக்க முடியாது. அந்த சக்தியை உலக முழுவதும் ஏற்றுக் கொள்ளுமானால், சமூகத்தில் புரட்சிகரமான மாறுதல்கள் உண்டாகும். மேனாட்டாரை நசுக்கிக் கொண்டிருப்பதும் கீழ்நாட்டாரை நசுக்கக் காத்துக் கொண்டிருப்பதும் நாளுக்கு நாள் அதிகமாக வளர்ந்து வருவதுமான ராணுவ ஆட்சியும் கொடுங்கோல் ஆட்சியும் ஒழிந்து போகும்.

## 13

ஜனங்கள் செய்யக்கூடிய சத்யாக்ரகம் அரசாங்கத்தின் அநியாயமான சட்டங்களை எதிர்ப்பதின் மூலமே நடைபெறும். விண்ணப்பம் மூலம் அரசாங்கத்தைத் திருத்த முடியாவிட்டால் அதன் அநியாயமான சட்டங்களுக்குப் பணிய விரும்பாதவர்கள் செய்யக் கூடியவை இரண்டே. ஒன்று அரசாங்கத்தை பலாத்காரத்தைக் கொண்டு எதிர்ப்பது; மற்றொன்று அதன் சட்டங்களை மீறி அதனால் கிடைக்கும் தண்டனைகளை ஏற்று அனுபவிப்பது. ஆதலால் ஜனங்கள் செய்யும் சத்யாக்ரகமானது சாத்விக எதிர்ப்பாகவே இருக்கும்.

# அஹிம்சா தர்மம்

## 1

நம்மிடம் ஆண்மைக்குரிய குணங்கள் குறைந்த காலத்திலே தான் நாம் அஹிம்சா தர்மத்தை அதிகமாய் அநுஷ்டிக்க ஆரம்பித்தோம் என்று சொல்வதற்குச் சரித்திர பூர்வமான ஆதார மொன்று மில்லை. சென்ற 1500 வருஷங்களாக இந்திய ஜாதியினராகிய நாம் தேக பலத்திலும் தைர்யத்திலும் சிறந்திருந்தோம் என்பது யாவரும் அறிந்த விஷயம். ஆனால் உள் நாட்டுக் கலகத்தால் வேறுபட்டுப் பல பிரிவினராய், தேச பக்திக்குப் பதிலாய் சுயநலப் பிரியங் குடிகொண்டவர்களாய் விட்டோ மென்பது உண்மையே. அதாவது தெய்வ பக்தி குறைந்தவர்களாகி விட்டோம்.

ஆண்மை குறைந்தவர்களென்று ஜைனர்களை எவ்வளவு தூரம் கூற முடியுமென்பது எனக்கு விளங்க வில்லை. நான் அவர்களுக்காகப் பரிந்து பேச வரவில்லை. பிறவியில் நான் வைஷ்ணவன். குழந்தைப் பருவத்தில் எனக்கு அஹிம்சா தர்மம் போதிக்கப் பட்டது. உலகிலுள்ள மற்ற மத சாஸ்திரங்களிலிருந்து பெற்றிருப்பது போல் ஜைன மத நூல்களிலிருந்தும் நான் மிக்க நன்மையே பெற்றிருக்கிறேன். பிறவியில் ஜைனரான ராஜா சந்த் கவி என்ற தத்துவ சாஸ்திரியுடன் வாழ்ந்ததனால் அடைந்த நன்மைக்கு நான் அவருக்கு என்றும் கடமைப் பட்டவனாக இருக்கிறேன். ஆகவே அஹிம்சா தர்மத்தைப் பற்றிய

னை தபிப்பிராயங்கள் உலகிலுள்ள பல மதங்களின் ஆராய்ச்சியின் விளைவா யிருந்த போதிலும், இனிமேலும் அவ்வபிப்பிராயங்களுக்கு அந்த நூல்கள் ஆதாரங்களல்ல. அக் கொள்கைகள் என் வாழ்வின் ஒரு அம்சமாய் விட் டன. படித்த நூல்கள் வேறு பொருள் உடையன என்று இனி ஒரு காலத்தில் நான் திடீரென்று கண்டு கொண்டா லும், நான் இப்பொழுது சொல்லப் போகிற அஹிம்சா தர் மத்தை ஒரு பொழுதும் கைவிடப் போவதில்லை.

அஹிம்சா தர்மத்தை உண்மையாய்ச் சிறிதும் வழு வின்றி அநுஷ்டிப்பவன் காலில் உலகம் முழுமையும் பணி யும் என்று நமது சாஸ்திரங்கள் போதிக்கின்றன. அப் படி அவன் கையாண்டால், பாம்புகளும் இதர விஷ ஜந் துக்களும் அவனுக்கு யாதொரு கேடும் விளைவிப்பதில்லை. மேல் நாட்டில் அஸிஸி என்னும் ஊரில் வாழ்ந்த ஸெயின்ட் பிரான்ஸிஸ் என்னும் ஞானியின் அநுபவமும் அவ்விதமா கவே இருந்ததாகச் சொல்லப் படுகிறது.

எதிர் மறையாக நோக்கும் பொழுது, அஹிம்சை என் பது மனோ வாக்குக் காயங்களால் எந்த உயிர்ப் பிராணிக் கும் ஹிம்சை செய்யா திருத்தல் என்று பொருள்படும். ஆகவே கேடு செய்தவனுடைய தேகத்திற்குத் துன்பஞ் செய்யா திருப்பதோடு, அவனிடம் துவேஷங் காட்டி அதன் மூலமாய் அவனுடைய மனத்திற்கும் துன்பஞ் செய்யா திருக்க வேண்டும். இப்படிச் சொல்வதால், துவே ஷங் காரணமாக வில்லாத என் இதர செயல்களால் அவ னுக்கு வரும் துன்பத்தையும் தடுக்க வேண்டு மென்ப தில்லை. உதாரணமாக ஒருவன் ஒரு குழந்தையை அடிக் கப் போகும் பொழுது, நான் அக்குழந்தையை அவனிட மிருந்து விலக்குவதால் குற்றமில்லை. அஹிம்சா தர்மத்தை நான் சரிவர அநுஷ்டிப்பதானால் அத்துன்மார்க்கனிட மிருந்து குழந்தையை விலக்க வேண்டியது அவசியமே

யாகும். ஆகையால் தென்னாப்பிரிக்காவில் சத்தியாக்கிரகிகள் சர்க்கார் தங்களுக்குச் செய்ய விரும்பிய தீங்கை எதிர்த்தது மிகச் சரியே. சர்க்காரிடம் அவர்களுக்கு யாதொரு துவேஷமும் கிடையாது. துவேஷங் கிடையாது என்பதற்கு சர்க்காருக்கு உதவி வேண்டிய பொழுது அவர்கள் உதவி செய்ததே தக்க சான்றாகும். அவர்கள் எதிர்த்ததெல்லாம், சர்க்கார் சாவு விளைத்தாலும் ஏற்றுக் கொண்டு அவர்களுடைய சட்டங்களை மீறுவதிலேயே அடங்கும். அஹிம்சா தர்மத்திற்கு வேண்டியதெல்லாம் கேடு செய்தவனைக் கருதி ஒருவனுக்கு வேண்டுமென்று துன்பஞ் செய்வதற்குப் பதிலாக, வேண்டுமென்று தானே துன்பத்தைப் பொறுத்துக் கொள்ளுதலே யாகும்.

உடன்பாட்டு முறையாக நோக்கும் பொழுது, அஹிம்சை என்பது பரந்த அன்பு என்று பொருள்படும். நான் அஹிம்சா தர்மத்தை அனுஷ்டிப்பவனானல், என் பகைவனை நேசிக்க வேண்டும். தீங்கிழைக்கும் என் தந்தை அல்லது மகனிடம் நான் எவ்விதம் நடந்து கொள்வேனோ அவ்விதமே என் பகைவனிடமும் நடந்து கொள்ள வேண்டும். இவ்வித அஹிம்சா முறையில் உண்மையும், அஞ்சாமையும் அடங்கும். தான் நேசிக்கும் யாரையும் ஒருவன் ஏமாற்றுவது போல, அஞ்சவாவது அல்லது அச்சுறுத்தவாவது செய்வது மில்லை. தானங்களி லெல்லாம் தலை சிறந்தது உயிர்த் தானமாகும். உயிர் கொடுப்பவனுக்கு பகைவனும் கேடு நினையான். கௌரவமாக சமாதானமாவதற்கு வழி யுண்டாகி விடும். பயத்திற்கு ஆளாயிருப்பவன் எவனும் உயிர்ப் பிச்சை கொடுக்க முடியாது. ஆகையால் முதலில் அச்சத்தை ஒழிக்க வேண்டும். கோழையா யிருந்து கொண்டு அஹிம்சா தர்மத்தை அநுஷ்டிக்க முடியாது. அஹிம்சா தர்மத்தை அநுஷ்டிக்க அளவற்ற மனோ தைரியம் வேண்டியது அவசியம். அது போர் வீரனுடைய குணங்களி லெல்லாம் சிறந்தது.

கார்டன் என்னும் தளகர்த்தரை அவருடைய பேர் பெற்ற சிலை யொன்றில் ஒரு தடிமட்டும் கையில் வைத்துக் கொண்டிருப்பதாகக் காட்டி யிருக்கிறது. ஆகையால் தடியையும் எறிந்து விட்டு அஹிம்சா தர்மத்தை அநுஷ்டிப்பதில் சுலபமாய் இறங்கலாம். ஆனால் தன்னைப் பாதுகாத்துக் கொள்ள ஒரு தடியாவது வைத்துக் கொள்ளும் போர் வீரன் அவ்வளவு மட்டுக்கும் வீரத் தன்மை குறைந்தவனே. குண்டு மழை மத்தியில் அசையாது நின்று உயிர் துறக்கத் தெரிந்தவனே உண்மையான போர் வீரன். துர்வாஸ முனிவர் அவரால் ஆன கேடனைத்தும் விளைத்தும் அவர்க்கு யாதொரு தீங்குஞ் செய்யாது தம் கொள்கையையும் விடாது காத்த அம்பரீஷர் என்பவர் அத்தகைய போர் வீரர் ஆவார். பிரஞ்சு யுத்த வீரர் தங்கள் மீது பீரங்கி வைத்துச் சுட்டும், அதைக் கவனியாது அல்லாவின் திருநாமத்தை உச்சரித்துக் கொண்டு அப்பீரங்கிகளின் மேல் சாடிய மோரியரின் வீரமும் அத்தகையதே. ஆனால் அவர்களுடைய வீரம் இன்னது செய்வதென்று அறியாத மூர்க்கத்தாலுண்டானது. அம்பரீஷருடையதோ அன்பு காரணமாய் உண்டானது. ஆயினும் மோரியர் இறக்கத் துணிந்த தங்கள் வீரத்தால் பிரஞ்சு பீரங்கிக்காரரை வென்றனர். பிரஞ்சுக்காரர் சந்தோஷம் கொண்டு, தொப்பிகளை வீசி எறிந்து, ஓடிப்போய் தங்கள் பகைவரை நண்பராகக் கொண்டாடினர். ஆகையால் தென் ஆப்பிரிக்கா சத்தியாக்ரகிகளும் தேக சுகத்திற்காக மானத்தை விற்க எண்ணாது உயிரிழக்கத் தயாராய் இருந்தனர்.

அஹிம்சா முறையில் மானத்தை விற்பதென்பது ஒரு பொழுதும் கிடையாது. தன் ஆயுதங்களால் எவ்வளவு தூரம் காப்பாற்ற முடியுமோ, அவ்வளவு தூரம் மட்டும் காப்பாற்றத் தயாரா யிருக்கும் ஒருவனை விட அஹிம்சா தர்மத்தை அனுஷ்டிப்பவனே ஒரு திக்கற்ற பெண்ணை நிச்

சயமாய்க் காப்பாற்ற முடியும். சத்தியாக்ரகி காப்பாற்றும் பொழுது, அப் பெண்ணின் கற்பைக் கெடுக்க முயல்பவன் அவளைத் தொட வேண்டுமானல் சத்தியாக்ரகியைக் கொன்ற பின் தான் அவளைத் தொட முடியும். ஆயுத பலத்தால் காப்பாற்றும் பொழுது, ஆயுதத்தைக் கெடுத்த வுடனேயே தொடக் கூடும். மேலும் சத்தியாக்கிரகி அத்துன்மார்க்கனின் புஜ பலத்தைத் தன் ஆன்ம பலத்தால் வெல்ல நினைப்பதால், துன்மார்க்கனுடைய மனதிலும் நல்லுணர்ச்சி ஏற்படலாம். அப் பெண்ணும் தன் சொந்த மனே தைர்யத்தைக் கை விட்டால், சத்தியாக்கிரகியின் முயற்சியினலன்றி வேறெவ்விதத்திலும் தன் கற்பைக் காத்துக் கொள்ள ஏதுவில்லை.

நமக்கு இப்பொழுது ஆண்மை குறைந்திருந்தால் அப்படியிருப்பதற்குக் காரணம் நமக்குத் தீங்கிழைக்கத் தெரியாமை யன்று; ஆனல் நாம் இறக்க அஞ்சுவதேயாகும். தனக்குக் கேடு விளைவிக்க வருபவனைக் கொன்று தனக்கு வரும் ஆபத்தை வேறு யாராவது விலக்க வேண்டுமென்று நினைத்து சாக பயந்து ஓடுபவன் எவனும் உண்மையான ஜைனன் அல்லது பௌத்தன் அல்லது வேதியன் ஆகான். வியாபாரத்தில் ஒருவனை ஏமாற்றி மெள்ள மெள்ளக் கொல்லுவதும், கசாப்புக் கடைக்காரனை கொன்று சில பசுக்களைக் காப்பாற்றுவதும், தேசத்திற்கு நன்மை வருமென்று கருதி சில உத்தியோகஸ்தர்களைக் கொல்லுவதும் ஹிம்சையாகா தென்று நினைப்பவன் சத்தியாக்கிரகியாக மாட்டான். அவன் பகைமையினலும், கோழைத்தனத்தினலும், பயத்தினலுமே இப்படிச் செய்ய நினைக்கிருன். தன்னைச் சுடும் மனச்சாட்சியைச் சமாதானப்படுத்திக் கொள்வதற்காகவே பசுவினிடமும், தேசத்தினிடமும் தனக்குள்ள அன்பினலேயே அவ்விதம் செய்வதாக நினைத்துக் கொள்கிருன்.

அஹிம்சையின் உண்மையை நன்குணர்ந்தால் அது சகல தீமை நிவாரண ஒப்பற்ற மருந்து என்பது என் அபிப்பிராயம். அதை மிதமிஞ்சி அநுஷ்டித்து விட்டோமென்று ஒரு நாளும் சொல்ல முடியாது. தற்சமயம் நாம் அதை அநுஷ்டிக்கவே யில்லை. அஹிம்சையை அநுஷ்டிக்கும் பொழுது மற்ற நற்குணங்களை விட்டு விடலா மென்பதில்லை. சகல நற்குணங்களையும் அநுஷ்டித்துக் கொண்டிருந்தால் தான் அஹிம்சையைச் சிறிதேனும் அநுஷ்டிக்க முடியும். மகாவீரரும், புத்தரும் போர் வீரர்கள்; அவ்விதமே டால்ஸ்டாய் ஞானியும். ஆனால் அவர்கள் தங்கள் போர்த் தொழிலின் தன்மையை நன்றாயும் நுட்பமாயும் அறிந்தவர்கள். அதனால் அவர்கள் உண்மையானதும், ஆனந்தமானதும், கௌரவமானதும், பரிசுத்தமானதுமான வாழ்க்கையின் ரகசியத்தைக் கண்டு பிடித்தனர். நாமும் இவ்வாச்சாரியர்கள் போல் நடப்போமாக. நடந்தால் மீண்டும் நம்முடைய நாடு தேவர்கள் வசிக்கும் புண்ய பூமி யாகிவிடும்.

(மாடர்ன் ரிவியூ 1916 அக்டோபர்)

## 2

அஹிம்சை முறையைக் கையாள்வதாய்ச் சொல்பவன் தனக்குத் தீங்கிழைத்தவனிடம் கோபப்படா திருக்க வேண்டும். அவனுக்குத் தீங்குண்டாக வேண்டுமென்று விரும்பக் கூடாது; அவனுக்கு நன்மை யுண்டாக வேண்டுமென்றே விரும்ப வேண்டும். அவனைச் சபிக்கக் கூடாது. அவனுக்கு யாதொரு துன்பமுந் தரக்கூடாது. தனக்குக் கேடு செய்பவனால் உண்டாகும் தீங்கனைத்தையும் பொறுத்துக் கொள்ள வேண்டும். ஆகவே அஹிம்சை என்பது முற்றிலும் குற்றமற்ற தன்மையாகும். அஹிம்சையை முற்றிலும் அநுஷ்டிப்பவன் ஜீவராசிகள் அனைத்திடமும் துவேஷம் சிறிதுமின்றி யிருத்தல் வேண்டும். ஆகையால் அஹிம்சை முறை மனித ஜாதியே யன்றி விஷ

ஜந்துக்கள் உள்பட இதர சகல ஜீவ ஜந்துக்களையும் தழுவி நிற்கும். விஷ ஜந்துக்கள் நாம் அழிப்பதற்காகச் சிருஷ்டிக்கப் படவில்லை. சிருஷ்டி கர்த்தாவின் கருத்து மட்டும் நமக்குத் தெரிந்தால் சிருஷ்டியில் அவைகள் என்ன உபயோகந் தருகின்றன என்பது நமக்கு நன்கு விளங்கும். ஆகவே அஹிம்சை என்பது உயிருள்ள சகல பிராணிகளிடமும் அன்புடன் வாழ்தலாகும். இக்கொள்கையை இந்து சாஸ்திரங்களிலும், பைபிளிலும், குரானிலும் காணலாம்.

அஹிம்சை என்பது உத்தம நிலைமை. தன்னை அறியாமலேனும் இயற்கையான மக்கள் ஜாதி முழுதும் விரும்பும் லட்சியமாகும். குற்றங்களை அறவே விட்டொழித்தவுடன் மனிதன் தெய்வீகமாய் விடுவதில்லை. அப்பொழுது தான் உண்மையான மனிதன் ஆகிறான். நாம் தற்சமயம் ஒரு பாகம் மனிதராகவும் ஒரு பாகம் மிருகமாகவும் இருக்கிறோம். நாம் கெடுதலுக்குப் பதில் கெடுதல் செய்யும் பொழுதும் அப்படிச் செய்வதற்கு வேண்டிய கோபத்தை விருத்தி செய்து கொள்ளும் பொழுதும், நாம் மனித ஜாதியாய்ப் படைக்கப் பட்டதன் நோக்கத்தை நிறைவேற்றுவதாய் நம்முடைய அறியாமையாலும் அகங்காரத்தாலும் பெருமை பேசிக்கொள்கிறோம். பழிக்குப் பழி வாங்குவதே மனிதன் கடமையென நம்புவதாய் நடிக்கிறோம். ஆனால் சகல சாஸ்திரங்களிலும் பழிக்குப் பழி வாங்குதல் ஒரு பொழுதுங் கடமையன்று என்றும், சில விடங்களில் மட்டும் அநுமதிக்கப்படும் என்றுமே காண்கிறோம். கடமை யாவதெல்லாம் கட்டுப்பாடே. பதிலுக்குப் பதில் என்பதற்குப் பல நிபந்தனைகள் அவசியம். அடக்கம் அல்லது கட்டுப்பாடுதான் மனித ஜாதி அநுசரிக்க வேண்டிய முதல் விதியாகும். ஏனெனில் பூரண உத்தம நிலை பூரணமான அடக்கமின்றிக் கைகூடாது. ஆகவே துன்பம் அனுபவித்தலே மனித ஜாதியின் விசேஷ லட்சணமாகும்.

நாம் நம் லட்சியத்தையடைய முயல, முயல, அது நமக்குக் கொட்டாமல் விலகியே போய்க்கொண்டிருக்கிறது. எவ்வளவு முன்னேற்றமடைகின்றோமோ அவ்வளவுக்கு நம் குறைகளை அறிகின்றோம். அடைவதிலன்றி, முயல்வதிலேயே திருப்தி ஏற்படுகின்றது. பூரண முயற்சி பூரண வெற்றி தரும்.

ஆகையால் லட்சியத்திலிருந்து எவ்வளவு தூரத்தில் நான் இருப்பதாக முன்னிலும் அதிகமாய் அறிந்தபோதிலும் எனக்கு என் வாழ்வின் லட்சியம் பூரண அன்பேயாகும். நான் தவறும் பொழுதெல்லாம் அப்படித் தவறுவதாலேயே நான் அதிக முயற்சி கொள்ளவேண்டுமென்று உறுதி செய்துகொள்ளவேண்டும்.

* * *

எவ்வளவு கடினமான மனமும் அன்பின் அழலில் இளகியே தீரும். இவ் விஷயம் எனக்குத் தெரியுமாதலால், இந்தக் கொள்கையினின்று என்னை அசைக்க முடியாது. என் மனமேனும் இளகாவிட்டால் அன்பின் அழல் இருந்தும் அழலின் வெம்மை போதிய அளவு இல்லாமையே காரணமாகும்.

(யங் இந்தியா 1920 மார்ச்சு)

## 3

கோழைத்தனம், பலாத்காரம் இவ் விரண்டில் எதைக் கையாள்வ தென்றால், பலாத்காரத்தை உபயோகிக்கவே யோசனை கூறுவேன். 1908ம் வருஷத்தில் அநேகமாய் மரண அபாயம் நேரிடும் வண்ணம் நான் தாக்கப்பட்ட பொழுது, தான் இருந்திருந்தால் என்ன செய்திருக்க வேண்டும், என்னைக் கொல்லப்படும்படி விட்டுவிட்டு ஓடிப் போயிருக்கவேண்டுமா அல்லது தான் உபயோகிக்கக் கூடியதும் உபயோகிக்க விரும்பியதுமான தன் புஜ பலத்தைக்கொண்டு என்னைக் காப்பாற்றி யிருக்கவேண்டுமா

என்று என் மூத்த குமாரன் என்னைக் கேட்டபொழுது, பலாத்காரத்தை உபயோகித்தாவது என்னைக் காப்பாற்ற வேண்டியது அவனுடைய கடமை என்று நான் அவனுக்குச் சொன்னேன். அக் காரணங் கொண்டுதான், நான் போயர் யுத்தத்திலும், ஜுலுக் கலகத்திலும், சென்ற (1914-ம் வருஷத்து) ஐரோப்பிய யுத்தத்திலும் கலந்து கொண்டேன். அதே காரணத்தினால்தான் பலாத்கார முறைகளில் நம்பிக்கையுள்ளவர்களுக்கு யுத்தப் பயிற்சி கொடுக்க வேண்டுமென்றும் சொல்லுகிறேன். இந்தியா தன் மானம் அழிக்கப் படும்பொழுது தடுக்க முடியாமல் கோழைத்தனமாய்ப் பார்த்துக்கொண்டு இருப்பதற்குப் பதிலாகத் தன் மானத்தைக் காக்க ஆயுதத்தையாவது உபயோகிக்கவேண்டு மென்று விரும்புகிறேன்.

ஆனால் பலாத்காரத்தைவிட அஹிம்சையே அளவற்ற மேன்மையுடையதென்றும், தண்டிப்பதைவிட மன்னிப்பதே ஆண்மை பொருந்தியதென்றும் நம்புகிறேன். யுத்த வீரனுக்கு மன்னித்தல் ஒரு சிறந்த அணியாகும். ஆனால் தண்டிக்கத் தைர்யமுள்ளபொழுது தான் அஹிம்சை மன்னிப்பாகும். பலவீனன் பலாத்காரம் உபயோகிக்காமல் இருக்கிறான் என்று சொல்வதில் அர்த்தமேயில்லை. ஒரு பூனை தன்னைத் துண்டு துண்டாய்க் கிழிக்கப் பார்த்துக் கொண்டிருக்கும் எலி அதை மன்னிப்பதென்பது கிடையாது. ஆகையால் ஜெனரல் டயருக்கும் அவரைப்போன்ற துன்மார்க்கர்களுக்கும் தகுந்த தண்டனை விதிக்கவேண்டுமென்று கேட்பவர் எண்ணத்தை நான் மதிக்கிறேன். அவர்களால் கூடுமானால் அவரை அவர்கள் துண்டு துண்டாய்க் கிழித்தெறிவார்கள். ஆனால் இந்தியா திக்கற்றதென்று நான் நம்பவில்லை. 'நானும் திக்கற்றவன் என்று நம்பவில்லை. நான் விரும்புவதெல்லாம் இந்தியாவின் பலத்தையும் என் பலத்தையும் நற்காரியத்திற்கு உபயோகிக்க வேண்டுமென்பதே.

நான் சொல்வதை வேறுவிதமாய் நினைத்துக்கொள்ள வேண்டாம். பலமென்பது தேக வலிமையைப் பொருத்த தன்று. அசையாத நெஞ்சே காரணம். தேக வலிமையில் ஜுலூ ஜாதியான் ஆங்கிலேயனைவிட பலவானே. ஆனால் அவன் ஆங்கிலேயப் பையனொருவனைக் கண்டால் ஓடுவான். ஏனெனில் அவனுக்குப் பையன் கையிலுள்ள துப்பாக்கிக்குப் பயம். அவன் இறக்க அஞ்சுவதால் வாய்த்த உடம்பிருந்தும் கோழையா யிருக்கிறான். முப்பது கோடி இந்தியரை லட்சம் ஆங்கிலேயர் பயமுறுத்தத் தேவையில்லை என்பதை நாம் ஒரு கணத்தில் உணர்ந்து கொள்ளலாம். ஆகவே மன்னிக்கவேண்டுமானால் நம்மிடம் பலமிருக்கிறதென்று உணர்ந்துகொள்ளவேண்டும். அவ்விதம் உணர்ந்து மன்னித்தோமானால், நம்மிடம் ஏராளமான பலம் ஏற்பட்டுவிடும். அதனால் டயரோ அல்லது ஜான்ஸனோ எவரும் இந்தியரை இழிவாய் நடத்தத் துணியார். தற்சமயம் நான் சொல்வது வாசிப்போர் மனதில் பதியாவிட்டாலும் எனக்குக் கவலையில்லை. தற்சமயம் நசுக்கப்படும் நிலைமையில் நாம் கோபப்படாமலோ அல்லது பழிவாங்க நினையாமலோ இருக்க முடியாது. ஆனால் தண்டிக்கும் உரிமையை வேண்டாமென்று விட்டுவிடுவதால் இந்தியாவுக்கு அதிகமான நன்மையே விளையுமென்பதை நான் சொல்லாமல் இருக்கக்கூடாது. நாம் செய்வதற்கு மேலான வேலை வேறு இருக்கின்றது. நாம் உலகத்திற்கு உரைக்க வேண்டிய மேலான இதோபதேசம் வேறு இருக்கின்றது.

நான் வீண் மனோராஜ்யம் செய்பவன் அன்று. நான் உயர் லட்சியத்தை உலக நடையில் கொண்டுவர விரும்புபவன். அஹிம்சா தர்மம் ரிஷிகளுக்கும் சந்யாசிகளுக்கும் மட்டும் ஏற்பட்டதல்ல. அது சாதாரண ஜனங்களுக்கும் ஏற்பட்டதுதான். ஹிம்சை என்பது மிருக ஜாதியின் தர்மமாய் இருப்பதுபோல் அஹிம்சை என்பது மனித

ஜாதியின் தர்மமாகும். மிருகத்தினிடத்தில் ஆன்மா அயர்ந்திருக்கின்றது. அதனால் அது ஸ்தூல பலத்தைத் தவிர வேறு தர்மத்தை அறியாது. மனித ஜாதியின் கௌரவத்திற்கேற்றது ஆன்ம பலத்தைத் தர்மமாகக் கொண்டு ஒழுகவேண்டியதே.

அதனால்தான் இந்தியர் பழைய தியாக தர்மத்தைக் கைக்கொள்ளவேண்டுமென்று சொல்லத் துணிந்தேன். ஏனெனில் சத்யாக்ரகமும் அதன் அம்சங்களாகிய ஒத்துழையாமையும், சாத்வீக எதிர்ப்பும் தியாக தர்மத்தின் புதுப் பெயர்களாகும். ஹிம்சை நிறைந்த இவ் வுலகில் அஹிம்சா தர்மத்தைக் கண்டுபிடித்த ரிஷிகளே நியூட்டனை விடச் சிறந்த ஞானவான்கள்; வெல்லிங்டனைவிடப் பெரிய போர் வீரர்கள். ஆயுதங்களை உபயோகிக்கத் தங்களுக்குத் தெரிந்திருந்தும், அவைகளின் உபயோகமற்ற தன்மையை உணர்ந்து பலாத்காரத்தாலன்றி அஹிம்சையாலேயே க்ஷேமம் உண்டாகும் எனத் துன்புற்று வருந்தும் இவ்வுலகிற்குப் போதித்தனர்.

அஹிம்சை என்பது மனமுணர்ந்து துன்பத்தைப் பொறுத்தல். தீங்கிழைப்பவன் சொல்லுக்குத் தாழ்ந்து கீழ்ப்படிதல் அதன் பொருளன்று. அவனை எதிர்த்து வெல்லத் தன் ஆன்மபலம் முழுவதையும் உபயோகிப்பதே அதன் பொருளாகும். இந்த தர்மத்தின்படி நடந்தால் தன் மானத்தையும், மதத்தையும் ஆன்மாவையும் காக்க, ஒரு அநியாய அரசாங்கத்தின் வலிமை முழுவதையும் எதிர்த்து, அதைப் பணியவோ, அல்லது திருந்தவோ செய்யும்படி செய்ய ஒரே ஒரு மனிதனாலும் கூடும்.

"நாம், பலவீனர்களாயிருக்கிறோம், அதனால் அஹிம்சையை அநுஷ்டிப்போம்" என்று சொல்லி அதை அநுஷ்டிக்கக் கூடாதென்று இந்தியரை வேண்டிக் கொள்ளுகிறேன். இந்தியர் தங்களுடைய பலத்தை

பாரதத்தை அஹிம்சையை அநுஷ்டிக்கவேண்டுமென்று விரும்புகிறேன். தங்களுடைய பலத்தை உணர ஆயுதப் பயிற்சி வேண்டிய அவசியமில்லை. நாம் ஒரு மாமிசப் பிண்டத்தைத் தவிர வேறொன்றுமில்லை என்று நினைப்பதால் தான் யுத்தப் பயிற்சி வேண்டியதாய்த் தோன்று கிறது. அழிவற்றதும், தேகம் எவ்வளவு பலவீனமாயிருந்தாலும் வெல்லக் கூடியதும், உலகிலுள்ள சகல சேனைகளும் திரண்டு வந்தாலும் மதிக்காது எதிர்க்கக் கூடியது மான ஆன்மா தனக்குண்டென்று இந்தியா உணருமாறு விரும்புகின்றேன். இலங்கையில் வாழ்ந்த இராவண னுடைய ஏராளமான சேனைகளைக் கேவலம் ஒரு மனித னாகிய ராமன் தம் குரங்குப் படைகளோடு எதிர்த்ததன் பொருள் என்ன? புஜ பலத்தை ஆன்மவலியால் வென்ற னர் என்பதல்லவோ அதன் பொருள்? ஆயினும் எந்தக் கொள்கையையும் கிரியாம்சையில் கொண்டுவர விரும்புவ னாதலால் அரசியல் விஷயத்திலும் ஆன்ம வாழ்விற்கிடமுண் டென்று இந்தியா உணருமட்டும் நான் காத்திருக்கவில்லை. இந்தியா ஆங்கிலேயருடைய பீரங்கிகளையும் ஆகாய விமா னங்களையும் கண்டு பயந்து என் செய்வோமென்று வலி யற்று ஒடுங்கிக் கிடக்கின்றது. ஆகையால் தன் பலக் குறைவு காரணமாகவே இந்தியா இப்பொழுது ஒத்துழை யாமையைக் கையாள்கின்றது. ஆயினும் பலன் ஒன்றே. அதாவது ஒத்துழையாமையைப் போதுமான ஜனங்கள் கைக்கொள்வார்களானால் தன்னை நசுக்கிக் கொண்டிருக் கும் ஆங்கிலேயர் செய்யும் அநீதி யென்னும் பெரும் பாரத்தினின்று இந்தியா தன்னை விடுவித்துக்கொள்ளும்.

ஒத்துழையாமை வேறு, அயர்லாந்தில் நடக்கும் ஸின் பீன் கொள்கை வேறு. எனெனில் ஸின்பீன் கொள்கை யில் பலாத்காரம் விலக்கப்படவில்லை. ஒத்துழையாமையில் பலாத்காரம் என்பதே கிடையாது. பலாத்காரத்தையும் அதையும் ஒரே சமயத்தில் கையாள முடியாத விதமாய்

அது ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. ஆனால் பலாத்காரக் கொள்கையை யுடையவர்களும் இந்த பலாத்காரமற்ற ஒத்துழையாமையைப் பரீட்சித்துப் பார்க்குமாறு கேட்டுக் கொள்கிறேன். அது தவறுமாயின் பலவீனம் அதற்குக் காரணமாகாது. அதை அநுஷ்டிப்பவர் இல்லாத காரணத்தினால்தான் அது தவறக்கூடும். அப்பொழுதுதான் உண்மையான ஆபத்துக்காலம். இனி மேலும் நாட்டின் அவமானத்தைப் பொறுத்துக்கொண்டிருக்கமுடியாதென்றுணரும் உயர் மனம் உடையவர்கள் தங்கள் கோபத்தைத் தீர்த்துக்கொள்ள விரும்புவார்கள். அவர்கள் அதற்காக ஹிம்சையில் இறங்குவார்கள். ஆனால் நான் அறிந்த மட்டில் அவர்கள் அப்படிச் செய்வதால் தங்களையும் தங்கள் நாட்டையும் விடுவிக்காமல் இறந்து படுவது திண்ணம். ஹிம்சை முறையை இந்தியா மேற்கொள்ளுமாயின், தற்சமயத்திற்கு வெற்றி பெறுவதாய்த் தோன்றலாம். அப்பொழுது இந்தியாவை நான் என் தாய் நாடென மகிழ்வடையவோ, பெருமை பேசிக் கொள்ளவோ முடியாது. இந்தியா மீது எனக்குள்ள அன்பிற்குக் காரணம் என் சக்திகளெல்லாம் அவளாலேயே நான் பெற்றேன் என்பதே. அவள் உலகிற்கோர் நற்செய்தி கூற விருக்கிறாள் என்பது என் மனப்பூர்வமான நம்பிக்கை. அவள் ஐரோப்பாவை அறியாது பின்பற்றக் கூடாது. இந்தியா பலாத்காரக் கொள்கையைக் கைக்கொள்ளுங் காலமே என் சோதனைக் காலமாகும். அப்பொழுது நான் என் கொள்கையில் தவற மாட்டேன் என்று நம்புகிறேன். என் மதத்திற்குத் தேச வரம்பு கிடையாது. எனக்கு அதில் பரிபூரண நம்பிக்கை இருந்து அவ்விதம் நடப்பேனாயின், இந்தியாவிடம் எனக்குள்ள அன்பையும் அது தாண்டிச் செல்லும். இந்து மதத்தின் மூலாதாரக் கொள்கையென்று நான் நம்பும் அஹிம்சா

சரீரத்தின் மூலமாய் இந்தியாவிற்குத் தொண்டு செய்ய வென்றோ என் வாழ் நாளை அர்ப்பணஞ்செய்து விட்டேன்.

(பால இந்தியா 1920 ஆகஸ்ட்)

## 4

பிறர்க்குத் தீங்கிழைப்பவன் பிறரிடம் பொறுமை யை யடைவான். ஆகையால் அவன் இவ்வுலகில் வாழ் வதற்குத் தகுந்தவனன்று. ஏனெனில் உலகம் அவனைப் பொறுக்கிறது; ஆகவே அவன் எப்பொழுதும் உலகத்திற்குப் பயந்தே வாழ வேண்டும். நாம் எல்லோரும் அன்பெனும் சங்கிலியால் பிணிக்கப் பட்டிருக்கிறோம். தான் உயிர் வாழ் வதற்கு அவசியமாக மற்றெல்லா வற்றையும் தன்னிடம் இழுக்கும் கொள்ளக் கூடியதொரு சக்தி இவ்வுலகில் ஒவ் வொன்றினிடமும் அமைந்து கிடைக்கின்றது. இவ்வுலக அமைப்பில் அணுக்களை யெல்லாம் ஒன்று சேர்த்துப் பிணிக்கக் கூடியதோர் சக்தி யின்றேல், உலகம் பொடி யாய் விடும்; நாமும் உயிர் வாழ்தல் இல்லை யென்று பௌதிக சாஸ்திரிகள் கூறுகின்றனர். சேர்த்துப் பிணிக் கும் சக்தி யொன்று எவ்விதம் சடப்பொருளில் இருக்கின் றதோ, அதற்கு அதிகமாகவே சரப்பொருளிலும் இருக்க வேண்டும். அப்படிச் சரப் பொருளிலுள்ள அந்தப் பிணிக்குஞ் சக்தியே அன்பெனப்படும். தந்தை மகனிட மும், சகோதரன் சகோதரியிடமும், சிநேகிதரிடமும் அதைக் காண்கின்றோம். ஆனால் உயிருள்ள சகல ஜீவராசி களிடமும் அந்தச் சக்தியை உபயோகிக்கக் கற்றுக் கொள்ள வேண்டி யிருக்கிறது. அதை உபயோகித்தால் தான் கடவுளை அறிய முடியும். எங்கே அன்பு இருக்கின் றதோ அங்கே தான் உயிர் இருக்கின்றது; பகைமையின் பயன் அழிவே.

## 5

அஹிம்ஸையில் நம்பிக்கை யுள்ளவன் எதைக் காப் பாற்ற வேண்டுமாயினும் நேராகவோ அல்லது வேறு

கவோ பலாத்காரம் அல்லது புஜபலம் எதுவும் உபயோகிக்காமல் இருக்கக் கடமைப் பட்டவன். ஆனால் அஹிம்சையை ஒப்புக் கொள்ளாத மனிதர்களுக்கும் ஸ்தாபனங்களுக்கும் உதவி செய்யக் கூடாதென்பதில்லை. இந்தியா சுயராஜ்யம் அடைந்த பின்னும் சேனையும் போலீசும் இருக்கவே செய்யும். அதற்காக இந்தியா சுயராஜ்யமடைய நான் யாதொரு உதவியுஞ் செய்யக் கூடாதென்பது சரியன்று. அது போலவே, என் மகன் அஹிம்சையில் நம்பிக்கை யில்லாதவன் என்று சொல்லி அவனுடைய நியாயமான வழக்கிலும் அவனுக்கு உதவி செய்யக் கூடாதென்பதும் பிசகே. அப்படி அஹிம்சையை நம்பாதவர்களுக்கு உதவி செய்யக் கூடாதென்றால், அஹிம்சையை நம்புபவனெவனும் வியாபாரஞ் செய்ய முடியாது. அது மட்டுமோ, யாதொரு தொழிலுமே செய்யாதிருக்க வேண்டும் என்று எண்ணுபவர்களும் உண்டு.

ஆனால் அத்தகைய தன்று நான் அனுஷ்டிக்கும் அஹிம்சா தர்மம். நானொரு யாதொரு ஹிம்சையும் செய்யாதிருப்பதும், எத்தனை மனிதர்களை என் சேவையாலும் விவகாரத்தாலும் என் கொள்கையை நம்பி நடக்கச் செய்ய முடியுமோ அத்தனை மனிதர்களை அவ்விதம் நடக்கச் செய்வதுமே என் கடமை. ஆனால் யாரேனும் ஒருவருடைய வழக்கு நியாயமானதா யிருந்தாலும், அவர் அஹிம்சையை முற்றிலும் நம்பாதவர் என்று சொல்லி, அவருக்கு உதவி செய்ய நான் மறுத்தால் அஹிம்சா தர்மத்தினின்று நான் விலகியவனவேன். மகமதியருடைய வழக்கு நியாயமானதென்று தெரிந்திருந்தும், அவர்களுடைய மதத்தின் மேன்மையை அழிக்கச் சதியோசனை செய்பவரை முற்றிலும் அஹிம்சா முறையில் எதிர்க்க நான் அவர்களுக்கு உதவி செய்யா விட்டால் நானே பலாத்காரத்தை வளர்த்தவனவேன். இருதிறத்தாரும் ஹிம்சையை நம்பினாலும், ஏதாவது ஒரு பக்கத்தில் நியாயம் என்பது இருக்கத்தான் செய்

கின்றது. களவு கொடுத்தவன் தான் இழந்த பொருளை
பலாத்காரத்தால் மீட்டுக் கொள்ள முயற்சித்துக் கொண்
டிருந்தாலும் அவன் பக்கம் நியாயம் இருக்கவே செய்கி
றது. அப்பொருளை அடைவதற்கு பலாத்காரத்திற்குப்
பதில் சத்தியாக்கிரக முறையை அதாவது ஆன்ம சக்தி
யாகிய அன்பை உபயோகிக்கும்படி அவனை நான் தூண்
டக்கூடுமானால் அது சத்தியாக்கிரகத்திற்கு ஒரு வெற்றி
யேயாகும்.

இத்தனை நிபந்தனைகளையும் சொன்ன பின், என்னை
ஒருவர் அஹிம்சா தர்மத்தை அனுஷ்டிப்பவனாகக் கரு
தாமல் இருக்கலாம். நான் அவருக்குச் சொல்லக் கூடிய
தெல்லாம், வாழ்வென்பது மிகச் சிக்கலானதோர் விஷய
மென்பதும், உண்மையிலும் அஹிம்சையிலும் புத்தி பூர்வ
மாய் ஆராய்ந்து முடிவுக்கு வரக்கூடாத பல கேள்விகள்
அடிக்கடி எழுகின்றன என்பதுமே. உண்மையையும்,
அதை நிலைநாட்டுவதற்குண்டான ஒரே நியாயமான வழி
யாகிய சத்யாக்ரகத்தையும் ஒருவன் பொறுமையோடு
கடைப்பிடிப்பதாலும், மௌனமாய்ப் பிரார்த்தனை செய்வதா
லுமட்டுமே கண்டு கொள்ள முடியும்.

(யங் இந்தியா 1921 ஜூன்)

## 6

அஹிம்சை சம்பந்தமாக நிரூபணம் இல்லாமலே ஒப்
புக் கொள்ளக் கூடிய ஐந்து விதிகளாவன :—

(1) அஹிம்சை என்பது மனிதனால் எவ்வளவு இய
லுமோ அவ்வளவு தன்னைத் தூய்மை செய்து கொள்வ
தாம்.

(2) அஹிம்சையை மேற்கொள்பவனிடம் பிறருக்கு
த்தீமை செய்யக் கூடிய சக்தி எவ்வளவுக் கெவ்வளவு
அதிகமாக இருக்கிறதோ அவ்வளவுக் கவ்வளவே அவனி

டம் அஹிம்சையை அனுஷ்டிப்பதற்கு வேண்டிய சக்தி உண்டாகும்.

(3) அஹிம்சையானது ஹிம்சையை விட உயர்ந்தது என்னும் விதிக்கு விலக்குக் கிடையாது. அஹிம்சையைக் கையாள்பவனிடமுள்ள சக்தி அவன் ஹிம்சையைக் கையாண்டால் எவ்வளவு இருக்குமோ அதைவிட எப்பொழுதும் அதிகமாகவே இருக்கும்.

(4) அஹிம்சையைக் கையாளும் பொழுது தோல்வி என்னும் பேச்சுக்கு இடமே கிடையாது. ஹிம்சையைக் கையாண்டால் நிச்சயமாகத் தோல்வியே உண்டாகும்.

(5) அஹிம்சையைக் கையாண்டால் இறுதியில் கிடைப்பது வெற்றியே. ஆனால் அஹிம்சை விஷயத்தில் வெற்றி என்னும் பதம் உபயோகிக்கலாமோ? தோல்வி உணர்ச்சி யில்லாத இடத்தில் வெற்றி உணர்ச்சி ஏது?

## 7

அறிந்தோ அறியாமலோ நாம் நம்முடைய தினசரி வாழ்க்கையில் அஹிம்சையைப் பிறரிடம் அனுஷ்டித்து வருகிறோம். நல்ல முறையில் அமைந்துள்ள சமூகங்கள் எல்லாம் அஹிம்சா தர்மத்தையே அடிப்படையாகக் கொண்டிருக்கின்றன. அழிவின் மத்தியிலேயே உயிரும் காணப்படுவதால் அழிவு தர்மத்தை விட உயர்ந்த தர்மம் ஒன்று இருக்க வேண்டும். அந்த விதமான தர்மம் இருந்தால்தான் சமூகம் சரியாக வேலை செய்யும். வாழ்வும் பயனுடையதா யிருக்கும். அதுவே மனித வாழ்வின் தர்மமா யிருக்குமானால், அதை நாம் நம்முடைய தினசரி வாழ்க்கையில் அனுஷ்டிக்க வேண்டியது கடமையாகும். எதிரி தோன்றும் பொழுதெல்லாம் அவனை அன்பால் வென்று விட வேண்டும் என்னும் விதியையே நான் அனுஷ்டித்து வருகிறேன். அப்படி அனுஷ்டித்து வரும்

மனிதனுடைய கஷ்டங்கள் எல்லாம் தீர்ந்து விட்டதாகச் சொல்ல முடியாது. ஆயினும் அஹிம்சா தர்மத்தையும் இந்த அன்பு தர்மமே கஷ்டங்களைத் தீர்க்க உதவுகின்றன என்பதைக் கண்டுகொண்டு வருகிறேன்.

## 8

அஹிம்சையை அனுஷ்டிப்பதாகக் கூறுபவன் தனக்குத் தீமை செய்பவரிடம் கோபம் கொள்ளலாகாது. அவனுக்குத் தீமை செய்ய எண்ணாமல் நன்மை செய்யவே எண்ண வேண்டும். அவனைச் சபிக்கவும் கூடாது, அவனுக்குத் தீமை செய்யவும் கூடாது. தனக்குத் தீமை செய்பவன் செய்யும் துன்பங்களை எல்லாம் பொறுத்துக் கொள்ள வேண்டும். இவ்வாறு அஹிம்சை என்பது பரிபூரணமான சால்பாகும். எந்த ஜீவராசியிடமும் எவ்வித த்வேஷமும் இல்லாதிருப்பதே பரிபூரணமான அஹிம்சையாகும். அதனால் அஹிம்சை என்பது விஷ ஜந்துக்கள் உட்பட சகல பிராணிகளையும் ரட்சிப்பதாகும். அவைகள் எல்லாம் நம்மிடமுள்ள அழிக்கும் ஆசையை நிறைவேற்றுவதற்காகச் சிருஷ்டிக்கப்படவில்லை. அவைகளுடைய கருத்தை மட்டும் அறியக்கூடுமானால், அவை தம் சிருஷ்டி நோக்கத்தை எவ்விதம் நிறைவேற்றுகின்றன என்பதை அறிந்துகொள்வோம். ஆதலால் அஹிம்சை என்பது சகல ஜீவராசிகளுக்கும் நன்மை தேடுவதேயாகும். அதுவே பரிசுத்தமான அன்பாகும். அதையே ஹிந்து சாஸ்திரங்களும் கிறிஸ்தவ பைபிளும் முஸ்லிம் குர்ஆனும் கூறுகின்றன.

## 9

அஹிம்சையானது மனதில் குடிகொள்ள வேண்டுமானால் அதற்குரிய கஷ்டமான பயிற்சியை மேற்கொள்ளுதல் அவசியமாகும். எப்படிப் போர்வீரன் தனக்குப்

பிரியமில்லாவிட்டாலும் அவசியம் என்று கருதி காரியபாட்டுப் பயிற்சி செய்துகொள்ளுகிறேனே அப்படியே அஹிம்சையை அநுஷ்டிக்க விரும்புகிறவனும் காரியபாட்டுப் பயிற்சி செய்துகொள்ளவேண்டும். மனம் ஒப்பித்துக்கொள்ளாத பயிற்சியானது வெறும் வேஷமாகவும் செய்பவனுக்கும் பிறர்க்கும் தீமை செய்வதாகவும் இருக்கும் என்பதை ஒப்புக்கொள்கிறேன். மனம் மொழி மெய் மூன்றும் ஒத்து இயங்கும்போதுதான் பரிபூரணநிலையை அடையமுடியும். ஆயினும் அந்த நிலையை அடைய முயல்வதில் இடைவிடாமல் போராட்டம் நடத்திக்கொண்டேயிருக்கவேண்டும். உதாரணமாக, எனக்குக் கோபம் வரவே செய்கிறது. ஆனால் அந்தச் சமயத்தில் எல்லாம் நான் அதை அடக்கிவிடுகிறேன். வெற்றியோ தோல்வியோ எப்பொழுதும் நான் அஹிம்சா தர்மத்தை அநுஷ்டிக்கவே பாடுபட்டு வருகிறேன். அப்படிப் போராடுவது நாளுக்கு நாள் அதிகமான ஆற்றலை அளித்துவருகிறது.

## 10

ஒருவன் உடலுக்கோ பொருளுக்கோ தீங்கு செய்தால் அவனுக்குத் தீங்கு செய்யாமல் ஆண்மையுடன் எதிர்த்து நிற்பதே அஹிம்சை. அதுதான் வெற்றியின் சிகரம். ஆனால் அத்தகைய பொறுமை ஆற்றல் உடையவர்க்கே சாத்தியம். ஆதலால் அத்தகைய ஆற்றலை பெறும் வரை தீமை செய்பவனை ஹிம்சையைக்கொண்டு எதிர்க்கவே வேண்டும்.

போலீஸ் சேவகன் தன்னுடைய கடமையை நிறைவேற்றவந்தால், அவனுடைய செயல் சட்டவிரோதமாகத் தோன்றினாலும் அவனை எதிர்க்கலாகாது. வாரண்டில்லாமல் கைது செய்யவந்தாலும் எதிர்க்கக்கூடாது. சட்ட நிர்வாகத்தை ஜனங்கள் மேற்கொண்டுவிடாமல் சட்டங்களுக்குக் கட்டுப்பட்டே நடக்கவேண்டும்.

ஆனால் போலீஸ் சேவகன் கைது செய்ய வராமல் அநியாயம் செய்யவே வந்தால் அவன் தன்னுடைய அதிகாரத்திற்குப் புறம்பாக நடக்க ஆரம்பிப்பவன் ஆகின்றான். ஆதலால் அவனைத் திருடனைக் கருதி, திருடவொட்டாமல் தடுப்பதற்கு அவசியமான பலாத்காரத்தை உபயோகிக்க ஒவ்வொருவருக்கும் யாராலும் பறிக்கமுடியாத உரிமை உண்டு.

ஆயினும் பலாத்காரத்தை அளவுக்கு மிஞ்சி உபயோகிப்பது கோழைத்தனமும் பைத்தியக்காரத்தனமுமாகும். வீரம் உடையவன் திருடனைப் பிடித்துக்கொன்றுவிடாமல் போலீஸாரிடம் ஒப்புவிப்பான். அவனைவிட அதிக வீரம் உடையவன் போதுமான பலத்தை உபயோகித்துத் திருடனைத் துரத்திவிட மட்டுமே செய்வான். அனைவரிலும் அதிகமான வீரம் உடையவன் திருடனுக்கு அறிவில்லை என்பதை உணர்ந்து அவனுக்கு விஷயத்தை விளக்குவான். அப்பொழுது அடிபட்டாலும் இறக்க நேர்ந்தாலும் அஞ்சவும் மாட்டான், கேடு செய்யவுமாட்டான். ஆதலால் எவ்வளவு கஷ்டம் வந்தாலும் கோழைத்தனத்தை விட்டு அஹிம்சையோடு நடக்கக் கற்றுக்கொள்ளவேண்டும்.

## 11

எதிர்க்க பலமில்லாமலும் இறக்கத் துணிவில்லாமலும் இருப்பவனுக்கு அஹிம்சா தர்மத்தைக் கற்றுக்கொடுக்க முடியாது. அஹிம்சையை அறியவேண்டுமானல், முதலில் எதிரி தன்னைக் கொன்றுவிடக்கூடிய ஆற்றல் உடையவனாயிருந்தாலும், அவனை பலாத்காரம் கொண்டு எதிர்க்கவும் இறக்கவும் கற்றுக்கொடுக்கவேண்டும். அதைக் கற்றுக்கொடுக்காவிட்டால் அவனுடைய கோழைத்தனம் உறுதிப்பட்டுவிடும். அஹிம்சையை மனத்தால் எண்ணக்கூடமுடியாதவனாய் விடுவான். அஹிம்சா தர்மத்தைச் சரிவர உணராததால் அநேகர் அபாயம் வரும்பொழுது எதிர்ப்

பது தவறு, அஞ்சி ஓடுவதே சரி என்று எண்ணுகிறார்... இந்த ஆண்மையற்ற எண்ணம் தவறு. மனிதன் சுத... மாய் வாழ்வது சகோதரனைக் கொல்வதாலன்று, ... தானல் கொல்லப்படத் தயாராயிருப்பதாலேயே. ... காரணத்துக்காயினும் எதிரிக்குச் செய்யும் தீங்கும் ... யும் மனித ஜாதிக்குச் செய்யும் துரோகமேயாகும். ... அஹிம்சா தர்மத்தைப்பற்றிய இந்த உண்மையை ... கேற்ற ஆற்றல் இல்லாதவர்க்குக் கற்றுக்கொடுக்க மு... யாது. அவர்களுக்கு எதிரியைப் பலாத்காரம் மூ... எதிர்த்துத் தம்மைப் பாதுகாத்துக்கொள்ளும் முறை... கற்றுக்கொடு... ...ண்டும்.

## 12

அஹிம்சையை பலவீனர்களுக்குக் கற்றுக்கொ... பது எப்படி என்று கேட்கலாம். நாம் அஹிம்சை... அனுஷ்டிப்பதன் மூலமாகவே பிறர்க்குக் கற்றுக்கொ... முடியும். அஹிம்சையின் பலத்தையும் வெற்றியை... சந்தேகமற நேரில் கண்டுகொள்ளும் பொழுது, ... வீனர்கள் அஹிம்சையைக் கைக்கொள்ள தைரியம் ... வார்கள்; பலவான்கள் ஆயுத பலம் பயனில்லை என்... உணர்ந்து அஹிம்சையே தலைசிறந்த ஆற்றல் என்ப... பணிவுடன் ஒப்புக்கொள்வார்கள். ஆகவே தன்... பலியிடத் தயாராக இல்லாதவன் கௌரவமாக நட... கொள்வதற்கான ஒரு வழி பலாத்காரம் மூலம் தற்கா... செய்துகொள்வதே யாகும்.

## 13

எந்தக் காலத்திலிருந்து சரித்திரம் எழுதப்பட்டு... கிறதோ அது முதல் இதுவரை மனிதனனவன் அஹி... லட்சியத்தை நோக்கி இடைவிடாமல் முன்னேறி வரு... தைக் காணலாம். ஆதியிலிருந்த நமது மூதாதையர்க... நரமாம்சம் உண்பவர்களாக இருந்தார்கள். அதன்பின் அ...

[illegible] பிடிக்காமல் வேட்டையாடி உண்ண ஆரம்பித்தார்கள். அப்படி வேட்டையாடி அலைந்து வாழ்க்கை [illegible] பிடிக்காமற்போகவே விவசாயம் செய்ய [illegible]காக நிலம் என்னும் அன்னையைச் சார்ந்து [illegible] ஆரம்பித்தார்கள். இந்த விதமாகக் காடுகளில் [illegible] வாழ்வைத் துறந்து கிராமங்களிலும், நகரங்களிலும் வாழும் நாகரிக வாழ்வை மேற்கொள்ள [illegible]தினராக இருந்தவர்கள் சமூகத்தினராக [illegible] செய்தார்கள். இவைகள் எல்லாம் ஹிம்சை [illegible] அஹிம்சை அதிகமாகவும் செய்வதின் அறி[illegible] ஆகும். இந்தவிதமாக நடைபெறுவிட்டால் [illegible] மிருகஜாதிகள் அழிந்துபோய்விட்டதுபோல மனித [illegible] இதற்குமுன் அழிந்துபோயிருக்கும்.

அவதார புருஷர்களும் தீர்க்கதரிசிகளும்கூட அநேக [illegible] அஹிம்சா தர்மத்தையே போதித்தார்கள். [illegible] ஒருவர்கூட ஹிம்சையைப் போதிப்பதாகத் [illegible]. அப்படித்தானே நிகழ்ந்திருக்க முடியும்? [illegible]யைக் கற்றுக்கொடுக்கவேண்டிய அவசியமே [illegible]. மனிதன் மிருக அம்சத்தில் ஹிம்சை செய்பவனே. [illegible] அம்சத்தில் தான் அஹிம்சை செய்பவன்; [illegible] வாழ்வு வாழ ஆரம்பிக்கும் பொழுது ஹிம்சையை [illegible]விருக்க முடியாது. அப்படி ஹிம்சையை விட்டு [illegible] அஹிம்சையை அனுஷ்டிக்க ஆரம்பிக்காவிட்டால் [illegible] நோக்கி விரைந்து செல்வான். அதனால் தான் அவதார புருஷர்களும் தீர்க்கதரிசிகளும் அஹிம்சையின் [illegible]ங்களாகிய சத்தியம், சகோதரத்துவம், சமத்து[illegible] போன்ற சால்புக் குணங்களைப் போதித்து வந்திருக்கிறார்கள்.

இப்படி மனித ஜாதி அஹிம்சையை நோக்கி முன் [illegible] வருவதை நம்புவதாயிருந்தால் இன்னும் அதிகமாக

முன்னேற முயலுதல் கடனாகும். உலகில் எதுவும் இயங்காமல் தேங்குவதில்லை. ஏற்றம் இல்லையென்றால் இறக்கம் உண்டு. எவரும் இந்த நியதிக்கு விலக்காக இருக்க இயலாது.

## 14

அஹிம்சா எதிர்ப்பு ஹிம்சை எதிர்ப்பை விட அதிக பலம் பொருந்தியது. அது இடைவிடாது நிகழும், ஆனால் அதில் முக்கால்வாசி புறத்தே புலப்படாமலும் கால் வாசியே புலப்பட்டும் இருக்கும். அது புலப்படும் பொழுது பயன் விளையாதது போலவே தோன்றும். ஆனால் உண்மையில் அதுவே இறுதியில் அளவிறந்த பயனை அளிப்பதாகும். ஹிம்சை முழுவதும் புலப்படும், ஆனால் அதன் பயன் எப்பொழுதும் நிலையாததாகவே இருக்கும். ஹிட்லரும் ஸ்டாலினும் ஹிம்சையின் பயன்களை உடனேயே காட்ட முடியும். ஆனால் அந்தப் பயன்கள் செங்கிஸ்கானுடைய கொலைகளால் ஏற்பட்ட பயன்களைப் போலவே அதிக நாள் நில்லாமல் அழிந்து போகும். ஆனால் புத்தருடைய அஹிம்சையின் பயன்களோ இன்னும் நிலைத்திருக்கின்றன; நாளுக்கு நாள் அதிகமாக வளர்ந்தும் வருகின்றன. அஹிம்சையானது பயிலப்பயில அதிகமான பலன்களைத் தந்து கொண்டிருக்கும். இறுதியில் உலகம் " அற்புதம், அற்புதம் " என்று வாயைப் பிளந்து கொண்டு நிற்கும். அற்புதங்கள் எல்லாம் கண்ணுக்குப் புலப்படாத சக்திகள் சப்தமின்றி இடைவிடாமல் வேலை செய்வதாலேயே நிகழுகின்றன. அத்தகைய சக்திகளில் அஹிம்சையே அதிகமாகப் புலப்படாததும் அதிகமாகப் பலன் அளிப்பதுமாகும்.

## 15

அஹிம்சையை அனுஷ்டிப்பதற்கு தனி மனிதர்களைத் தயார் செய்வது எளிது, ஆனால் பொது ஜனங்களைத் தயார்

செய்வது எப்படி என்று கேட்கிறார்கள். அத்தகைய பயிற்சியைப் பொதுஜனங்கள் போதனையின் மூலம் பெற முடியாது. அஹிம்சையைப் போதிக்க முடியாது; பயிலத்தான் வேண்டும். ஹிம்சை முறையைப் புறச் சின்னங்கள் மூலம் போதிக்க முடியும். குறி பார்த்துச் சுடக் கற்றுக் கொடுக்கலாம், அதைப் பயின்று அழிவுவித்தையில் தேர்ந்தவன் என்று பட்டமும் பெறலாம். அஹிம்சை முறைக்கு அந்த மாதிரிப் புற ஆயுதம் ஒன்றும் கிடையாது. ஆதலால் அஹிம்சாவாதியின் பேச்சுமட்டுமன்று, செயலுங் கூடப் பயன் தராதது போலவே தோன்றும். அஹிம்சையில் முக்கால்வாசி வெளியே புலப்படாததாகவே இருக்கும். ஆனால் அதன் பயனோ புலப்படாத அளவு அதிகமாயிருக்கும். அது புலப்பட ஆரம்பிக்கும் பொழுது அற்புதமாக இருக்கும். ஆதலால் அஹிம்சையானது முதலில் ஜனங்களுடைய மனத்தை அவர்களுக்கும் தெரியாமலே கவரும். இறுதியிலேயே அவர்கள் அதை அறிவு பூர்வமாக தெரிந்து கொள்வார்கள். அப்பொழுது தான் அவர்களுடைய அஹிம்சை யாவரும் அறியக்கூடிய பெரும் வெற்றியாகத் தோன்றும்.

## 16

ஆகாயத்திலிருந்து கொண்டு மரணத்தைப் பொழிபவன் யாரைக் கொன்றோம், எத்தனைபேரைக் கொன்றோம் என்பதை ஒரு நாளும் அறிய முடியாது. அதனால் அவனுக்கும் கொல்லப்படுபவர்களுக்கும் யாதொரு தொடர்பு மில்லை, அப்படி யிருக்க ஆகாய விமானப் போரை அஹிம்சையைக் கொண்டு எதிர்ப்பது எப்படி என்று கேட்கிறார்கள். மனிதனுடைய கையே மரணம் உண்டாக்கும் வெடிகுண்டை எறிகின்றது; மனிதனுடைய இருதயமே கையை எறியும்படி செய்கின்றது. குண்டு எறியும் முறையின் தத்துவத்துக்கு அஸ்திவாரம் போதுமான அளவு குண்டுகளை எறிந்தால் எதிரியைக் கொடுங்கோலனுக்குப்

பணிய வைத்து விட முடியும் என்னும் நம்பிக்கையோ யாகும். ஆனால் ஜனங்கள் கொடுங்கோலன் இஷ்டப் போல் நடக்க மாட்டோம், அவனுடைய முறைகளைக் கையாண்டு அவனை எதிர்க்கவு மாட்டோம் என்று முடிவு செய்து விட்டால், அப்புறம் கொடுங்கோலன் குண்டு எறி வதால் பிரயோஜனமில்லை என்று கண்டு கொள்வான். அவனுடைய குண்டுக்குப் போதுமான இரை கொடுத் தால், வேண்டாம்வேண்டாம் என்று அவன் கூறும் காலம் வந்து விடவே செய்யும். உலகிலுள்ள சுண்டெலிகள் எல்லாம் மகாநாடு கூடி இனி பூனையைக் கண்டு அஞ்சுவ தில்லை, அதன் வாயினுள் எல்லோரும் புகுந்து விடுவோம் என்று தீர்மானிக்குமானால், சுண்டெலிகள் சாகமாட்டா. என்னுடைய மனைவியை என் சொற்படி நடக்குமாறு நிர்ப்பந்திக்க ஆரம்பித்த பொழுது அவளிடமிருந்தே நான் அஹிம்சா தர்மத்தைக் கற்றுக் கொண்டேன். அவள் என் இஷ்டப்படி நடக்க முடியாது என்று உறுதியாக எதிர்த் ததும், அதற்காக நான் இழைத்த துன்பங்களை மௌன மாக ஏற்று வந்ததும் என்னை இறுதியில் நாணும்படி செய்து, அவளை ஆளப்பிறந்தவன் என்று எண்ணிக் கொண்டிருந்த என் முட்டாள்தனத்தைக் குணப்படுத் தின. இறுதியில் அவளே எனக்கு அஹிம்சை போதிக்கும் ஆசிரியை ஆனாள். அவள் தன்னுடைய இஷ்டத்துக்கு மாறாக அனுஷ்டித்து வந்த முறையைத் தான் நான் பிறகு சத்யாக்ரகம் என்ற பெயரால் தென் ஆப்பிரிக்கா வில் அனுஷ்டிக்கலானேன்.

## 17

பலவீனர்கள் ஒரு நாளும் பிறர் உதவியை நம்பி வாழக் கூடாது. அந்த உதவி அவர்களை முன்னிலும் அதிகமாக பலவீனமே ஆக்கும். அஹிம்சா முறையில் எதிர்க்கச் சக்தியில்லையானால் அவர்கள் ஹிம்சை முறையில் தங்களைப்

பாதுகாத்துக் கொள்ளும் வித்தையைக் கற்றுக கொள்ள வேண்டும். அதற்கு பலமான உடல் தேவையில்லை. உறுதியான மனோ தைரியமே தேவை. 25 வருஷங்கட்கு முன்னர், ஆப்பிரிக்காவிலுள்ள நீக்கிரோக்கள் தாங்கள் பலத்த உடலுள்ளவர்களா யிருந்த போதிலும் வெள்ளைச் சிறுவனைக் கண்டு கூட பயந்து ஓடிக்கொண்டிருந்தார்கள். வெள்ளைக்கார க் குழந்தைகளோ நீக்ரோக்களைக் கண்டு பயப்படாதிருக்குமாறு பிள்ளைப் பிராயத்திலிருந்தே பழக்கப்பட்டு வந்தார்கள். ஆதலால் தற்காப்பு முறையைக் கற்றுக் கொள்ள விரும்புவோர் துன்பத்துக்கும சாவுக்கும் பயப்படாதிருக்க முதலில் கற்றுக் கொள்ள வேண்டும். கோழைத்தனம் நம்முடைய தேசீய அகராதியில் காணப்படலாகாது.

## 18

பாதாதிகேசம் வரை ஆயுதம் பூண்ட ஆயிரம் போர் வீரர்கள் அடங்கிய பட்டாளத்தை பத்து போர் வீரர்கள் எதிர்ப்பார்களானால், அவர்களிடம் அதற்குத்தேவையான பலம் இல்லாததால், அவர்கள் அநேகமாக அஹிம்சையை மேற்கொண்டதாகவே கூறுவேன். ஒரு சிறுமி தன்னைத் தாக்க வருபவனை நகத்தால் கீறவும் பல்லால் கடிக்கவும் செய்தால், அவள் ஹிம்சை செய்ய வேண்டும் என்று முன் கூட்டியே நிர்மாணித்துக் கொள்ளாமலே அப்படிச் செய்வதால் அவளையும் அநேகமாக அஹிம்சையை அநுஷ்டித்தவளாகவே கூறுவேன். அவள் செய்த ஹிம்சை பூனையைத் தாக்கும் சுண்டெலியின் ஹிம்சையேயாகும். சாவு நிச்சயம் என்று பரிபூரணமாகத் தெரிந்திருந்தும், தன்னால் கொஞ்சமும் சமாளிக்க முடியாத பெரிய சக்தியா யிருந்தும், அதற்குப் பணிய மறுப்பதே அஹிம்சையின் பிரதான அம்சமாகும். அதனாலேயே பொடியாய்ப் போவோம் என்று தெரிந்திருந்தும் ஜெர்மன்

சேனை வெள்ளத்தை எதிர்த்து நின்ற போலந்து தேசத்தாரை அநேகமாக அஹிம்சையை அனுஷ்டித்தவர்களாகக் கருதுகின்றேன்.

## 19

நான் போதிக்கும் அஹிம்சை பலவான்களுடைய அஹிம்சையேயாயினும், பலவீனர்களும் அஹிம்சா இயக்கத்தில் கலந்து கொள்ளலாம். அதனால் அவர்கள் முன்னிலும் அதிக பலவீனர்களாக ஆகிவிட மாட்டார்கள், அதிக பலவான்களாகவே ஆவார்கள். ஜனங்கள் இப்பொழுது முன்னிலும் அதிகமான மனோ தைரியம் அடைந்திருக்கிறார்கள். அஹிம்சாப் போராட்டம் வேண்டும் என்றால் அதிகமான நிர்மாண வேலை நடக்க வேண்டியது அவசியம். அதனால் நாட்டில் தாமஸ குணமோ சோம்பலோ அறியாமையோ இருக்க முடியாது. தேசீய வாழ்வு புத்துயிர் பெறவே செய்யும்.

## 20

உலக முழுவதும் ஆயுதம் தரித்து வந்தாலும் அதை ஆன்ம சக்தியானது எதிர்த்து வென்று விட முடியும். இந்த சக்தியை பலவீனமான உடலுள்ளவனும் பெற முடியும். தேகபலமுள்ள போக்கிரிகள் பலவீனமான தங்கள் தாயாரிடம் ஒன்றும் பேசாமல் பணிந்து போவதைப் பார்க்கவில்லையா? அன்பானது மகனிடமுள்ள மிருகத்தை வென்று விடுகிறது. தாய்க்கும் மகனுக்குமிடையில் காணப்படும் இந்த தர்மம் எல்லோருக்கும் பொருத்தமானதேயாகும். அன்பு பரஸ்பரம் நிகழ வேண்டும் என்பதுமில்லை. அன்பு செய்வதற்குரிய பரிசு அன்பே தான். பிழையை விட்டுவிட இணங்காத குழந்தைகளை எத்தனையோ தாய்மார் தங்கள் அன்பின் சக்தியால் நல்லவர்களாகச் செய்திருக்கிறார்கள்.

## 21

பொது ஜனங்கள் எளிதில் கோபமும் துவேஷமும் கொண்டு விடுகிறார்கள்; அற்ப விஷயங்களுக்காகக் கூட சண்டை செய்ய ஆரம்பித்து விடுகிறார்கள்; அப்படியிருக்க அவர்கள் அஹிம்சையை அனுஷ்டிப்பது எப்படி என்று கேட்கிறார்கள். அது உண்மைதான். ஆனால் அவர்களும் பொது ஜன நலத்துக்காக அஹிம்சையை அனுஷ்டிக்க முடியுமென்றே எண்ணுகின்றேன். உப்பு சத்தியாக்கிரக காலத்தில் உப்பு சேகரித்த ஆயிரக் கணக்கான பெண்கள் எல்லோரும் யாரிடமேனும் துவேஷம் கொண்டிருந்தார்கள் என்று நினைக்கிறீர்களா? அவர்கள் காங்கிரஸோ காந்தியோ சில காரியங்களைச் செய்யும்படிச் சொல்லியிருக்கிறார்கள் என்று தெரிந்ததும் அவர்களை நம்பி அந்தக் காரியங்களைச் செய்தார்கள். அஹிம்சையைப் பரிபூரணமாகச் சாம்பாரான் ஜில்லாவாசிகள் அனுஷ்டித்தார்கள். அந்த ஆயிரக் கணக்கான கிராமவாசிகள் சர்க்காரிடமோ முதலாளிகளிடமோ எள்ளளவு துவேஷமாவது கொண்டார்களா? அநேகர் பூமி உருண்டை என்பதை நம்புகிறார்கள். ஆனால் அவர்களுக்கு அதன் காரணம் தெரியாது. அது போலவேதான் அந்த கிராமவாசிகளும் அஹிம்சையின் தத்துவங்களை அறியா விட்டாலும் அதை நம்பி அனுஷ்டித்தார்கள். ஆனல் அவர்களுக்குத் தலைவர்களிட மிருந்த நம்பிக்கை உண்மையானது. வெற்றிக்கு அது போதுமானதா யிருந்தது. தலைவர்கள் விஷயமோ வேறு, அவர்கள் அஹிம்சையின் தத்துவங்களை நன்றாக அறிவதோடு அதன் சகல அம்சங்களையும் அனுஷ்டிக்கவும் வேண்டும்.

## 22

அஹிம்சா முறையை அனுஷ்டிப்பதற்குச் செய்யக் கூடிய சிறந்த முன்னேற்பாடு நிர்மாணத் திட்டத்தை உறுதியுடன் நிறைவேற்றுவதே என்று திரும்பத் திரும்பச்

சொல்லி வருகிறேன். நிர்மாணத் திட்டத்தை நிறைவேற்றாமலே சமயம் வரும்பொழுது அஹிம்சாப் போரில் இறங்கி விடலாம் என்று எண்ணுவோர் படுதோல்வியே அடைவர். அவர்கள் கொழுத்துப் பருத்து ஆயுதந் தரித்த போர் வீரனை எதிர்க்கும் படியான நிராயுத பாணியை யொப்பார்கள். நிர்மாணத் திட்டத்தில் நம்பிக்கை யில்லாதவர்க்கு பட்டினியால் வாடும் கோடிக் கணக்கான ஏழை மக்களிடம் சகோதர உணர்ச்சி யிராது. அந்த உணர்ச்சி யில்லாதவன் அஹிம்சாப் போர் செய்ய முடியாது. எவ்வளவுக் கெவ்வளவு அதிகமாக இந்த உணர்ச்சி வளர்ந்து வருகிறதோ அவ்வளவுக்கவ்வளவு அதிகமாக என்னுடைய அஹிம்சை வளர்ந்து வருகிறது. இன்னும் அந்த உணர்ச்சி என்னிடம் பரிபூரணமாக உண்டாகாததால் அஹிம்சையும் என்னிடம் இன்னும் பரிபூரணமாக உண்டாக வில்லை.

## 23

இந்தியாவானது அஹிம்சா முறையில் உண்மையான ஜனநாயகத்தை அமைக்க முயன்று கொண்டிருக்கிறது. நம்முடைய ஆயுதங்கள் ராட்டினம்,கிராமக் கைத்தொழில்கள், தீண்டாமை விலக்கு, மதுவிலக்கு போன்ற சத்யாக்கிரக விஷயங்களேயாகும். இவையெல்லாம் பொதுஜன முயற்சியும், பொது ஜனக் கல்வியுமாகும். இந்த முயற்சியிலிருந்தே வரிகொடாமை உட்பட சகல சத்தியாக்கிரக இயக்கங்களையும் ஆரம்பிக்கக் கூடிய சக்தி உண்டாகும்.

## 24

சத்யாக்ரகத்தில் பலாத்காரத்துக்கும் துவேஷத்துக்கும் கொஞ்சம் கூட இடம் கிடையாது. ஆதலால் நான் ஆங்கிலேயரிடம் துவேஷம் கொள்ளவும் முடியாது. துவேஷம் கொள்ளவு மாட்டேன். அதுபோலவே, நான் அவர்களு

டைய ஆட்சியை பற்றுக் கொள்ளவு மாட்டேன். அவர்கள் இந்தியாவின் மீது அக்கிரமமாகச் சுமத்தி வரும் பிரிட்டிஷ் முறைகளையும் பிரிட்டிஷ் ஸ்தாபனங்களையும் உயிர் போகும் வரை எதிர்ப்பேன். ஆனால் அஹிம்சா முறையிலேயே அவர்களுடைய முயற்சியை எதிர்ப்பேன். ஆங்கில ஆட்சியை அஹிம்சா முறையில் எதிர்க்க இந்தியா தேசத்துக்குப் போதுமான ஆற்றல் இருக்கிறது என்று பரிபூரணமாக நம்புகிறேன். இதுவரை நடந்த போராட்டம் தோல்வியடைந்து விடவில்லை.

நாம் எதிர்பார்த்த அளவிலும் விரும்பிய அளவிலும் இல்லா விட்டாலும் வெற்றி கண்டேயிருக்கிறது. சத்யாக்ரகம் ஒரு நாளும் தோற்காது என்றும் சத்தியத்தை நிலை நாட்ட ஒரே ஒரு பரிபூரணமான சத்யாக்ரகியிருந்தாலும் போதும் என்றும் நான் திரும்பத் திரும்பச் சொல்லி வந்திருக்கிறேன். நாம் அனைவரும் பரிபூரணமான சத்யாக்ரகிகளாக ஆக முயல்வோமாக. அந்த முயற்சிக்கு நம்மில் மிக மிகத் தாழ்ந்தவர் அடைய முடியாத எந்த விசேஷ குணமோ ஆற்றலோ தேவையில்லை. ஏனெனில் சத்யாக்ரகம் என்பது ஆன்மாவின் ஒரு அம்சமேயாதலால் அது எல்லோருடைய அகத்திலும் மறைந்து கிடக்கவே செய்கின்றது. சுயராஜ்யத்தைப் போல அதுவும் நம்முடைய பிறப்புரிமையேயாகும்.

# ஒத்துழையாமை

## 1

மனிதனுக்குச் சிருஷ்டி செய்வதற்குள்ள சக்தி கொடுக்கப் படாததால், உயிருள்ள எந்தக் கேவலமான ஜெந்துவையும் அழிக்க அவனுக்கு உரிமை கிடையாது. உயிருள்ளவை அனைத்தையும் சிருஷ்டித் தவருக்கே அவைகளை அழிக்கும் உரிமை உண்டு. அஹிம்சையின் பொருள் தீங்கு செய்யாமை மட்டும் அன்று; தீங்கு செய்தவனுக்கும் நன்மையே செய்தலுமாகும். ஆனால் தீமை செய்வதற்காக ஒருவனுக்கு உதவி செய்வதும் தீமை செய்வதைத் தடுக்காமல் சகித்துக் கொண்டிருப்பதும் அதன் பொருளன்று. அஹிம்சையின் கிரியாம்சம் அன்பு; ஆதலால் தீமை செய்பவனை விட்டு விலகுவதால் அவனுக்கு விசனம் அல்லது துன்பம் எது ஏற்பட்டாலும் கவனியாமல் அப்படி விலகுவதன் மூலமாக அவனை எதிர்க்க வேண்டியது நம்முடைய கடமையாகும். ஆகவே என் மகன் துன்மார்க்கனாய் நடந்தால் அவன் அப்படி நடப்பதற்கு அவனுக்கு உணவு முதலியன கொடுத்து ஆதரிப்பதன் மூலமாய் நான் உதவி செய்யக் கூடாது. எனக்கு அவனிடம் அன்பிருந்தால் அவன் இறக்க நேரிடினும் அவனை ஆதரிக்க மறுப்பது என் கடமையாகும். அவன் பச்சாதாபப்பட்டுத் திருந்தினால் அவனை என்னுடன் மறுபடியும் சேர்த்துக் கொள்ள வேண்டியதும் அவ்வன்பின் காரண

மாகவே என் கடமையாகும். ஆனால் அவனை நல்லவனாகும்படி புஜபலத்தால் கட்டாயப் படுத்தக் கூடாது.

ஒத்துழையாமை என்பது ஓர் செயலுமற்றுச் சும்மா இருக்கும் நிலைமை யன்று; பலாத்காரத்தை விடப் பன் மடங்கு செயல் மிகுந்த நிலைமை யாகும். சாத்வீக எதிர்ப்பென்பது அது குறிக்கும் விஷயத்திற்குப் பொருந்தாத பெயர். நான் கூறும் ஒத்துழையாமை அஹிம்சா லட்சண முள்ளது. ஆகையால் அதில் தண்டனை, பழி வாங்குதல், துவேஷம், பகைமை முதலிய எதுவும் கிடையாது. ஆகையால் * ஜெனரல் டயரிடம் வேலை பார்ப்பதும் நிரபராதிகளைக் கொல்வதில் அவனுக்கு உதவி செய்வதும் பாபமாகும். ஆனால் அவன் வியாதியால் கஷ்டப்பட்டால் சிகிச்சை செய்து அவனைப் பேணுவதை அன்பு செய்தல் அல்லது மன்னித்தலாகக் கருதுவேன். இதற்கு ஒத்துழைப்பு என்னும் பதத்தை உபயோகிக்க முடியாது. குற்ற நடையினின்று இந்த அரசாங்கத்தை விலக்குவதற்காக அதோடு ஆயிரந் தடவை ஒத்துழைப்பேன். ஆனால் அது குற்ற நடையிலேயே தொடர்ந்து நடப்பதற்காக அதோடு நான் ஒரு நிமிஷங்கூட ஒத்துழைக்க மாட்டேன். அத்தகைய அரசாங்கத்திடம் நான் பட்டம் பெற்றாலும், வேலை பார்த்தாலும், அதன் நியாய மன்றங்களையும் பள்ளிக்கூடங்களையும் ஆதரித்தாலும் நான் குற்றஞ் செய்தவன் ஆவேன். ஜாலியன் வாலாவில் நிரபராதிகளைக் கொன்று இரத்தக் கறையுற்ற கைகளினால் ஏராளமான பணம் பெறுவதை விட யாசகனுடைய பிட்சா பாத்திரமே எனக்கு மேலானதாகும். என் எழு கோடி மகமதிய சகோதரர்களின் மதாபிப்பிராயத்திற்கு வேண்டுமென்று பங்கம் விளைத்த

* ஜெனரல் டயர்—1919ஆம் வருஷத்தில் பஞ்சாப் மாகாணத்தில் அமிர்தசரஸ் நகரத்தில் நடந்த "ஜாலியன் வாலாப் படுகொலை"யின் கர்த்தா.

வர்களின் தேனினிய சொல்லைவிடச் சிறைத் தண்டனையே எனக்கு மிகச் சிறந்த தாகும்.

(பால இந்தியா 25-8-1920)

## 2

துன்பத்தால் புனிதப்படாமல் எந்த தேசமும் சிறப்படைந்ததில்லை. தாய் தன் குழந்தை உயிர் வாழ்வதற்காகத் துன்பம் அநுபவிக்கிறாள். தான்யம் முளைக்க வேண்டுமானால் அதன் விதை இறந்தொழிய வேண்டும். மரணத்தினின்றும் உயிர் உண்டாகின்றது. அது போல இந்தியா மட்டும் துன்பத்தால் புனிதமாவதென்னும் ஆதி கால தர்மத்தை அநுசரியாமல், தன் அடிமை வாழ்வைவிட்டு நீங்க முடியுமா?

எனக்குப் புத்தி கூறுவோர் சொல்வது சரியாயிருக்குமாயின் இந்தியா கஷ்ட மநுபவியாமல் உயர்நிலை அடையலாம். ஏனெனில் அவர்களுடைய விசார மெல்லாம் 1919ல் ஏப்ரல்மீ த்தில் நடந்த சம்பவங்கள் மறுபடியும் நடக்கக் கூடா தென்பதே. அவர்கள் ஒத்துழையாமைக்கு அஞ்சுவதன் காரணம் பலர் துன்புற வேண்டி வருமென்பதே. இவ்விதம் ஹாம்டன் யோசித் திருந்தால் அவர் கப்பல் வரியைக் கொடுக்க மறுத்திருக்க மாட்டார். அது போலவே வாட் டெய்லரும் கலகஞ் செய்திருக்க மாட்டார். துன்பத்தைக் கவனியாமல் தமக்குச் சரி யென்று தோன்றினதையே செய்தவர்களுடைய சரிதைகளால் ஆங்கில, பிரஞ்சு சரித்திரங்கள் நிறைந்திருக்கின்றன. பாமர ஜனங்கள் துன்பத்தை அநுபவிக்கவேண்டி யிருக்காதா என்பதை அவர்கள் யோசிக்கவே இல்லை. அவர்கள் சரித்திரம் அவ்விதம் இருக்க நாம் மட்டும் ஏன் வேறுவிதமாய் நடக்க விரும்பவேண்டும்? வேண்டுமானால், நாம் நமக்கு முன்னிருந்தவர்களின் பிழைகளை அறிந்து நடக்க முடியும். ஆனால் நம் மனித வாழ்விற்கே இன்றியமையாத துன்ப

தர்மத்தை மட்டும் விட்டுவிட முடியாது. கூடுமானல், நாம் பலாத்காரத்தையொழித்து அதனல் முன்னேற்றத்தை அதி விரைவில் பெற முயல்வதும், துன்ப முறைகளில் அதிக சுத்தத்தைப் புகுத்துவதும் முன்னிலும் அதிக நலமாய் நடப்பதற்கான வழிகளாகும். நமக்கு மனமிருந்தால், நாம் தீமை செய்பவரை ஸின்பீனர்கள் செய்வது போல் பலாத்காரத்தால் பணியச் செய்யாமலும், 1919-ம் வருஷம் "ஹர்த்தால்" ஏற்படுத்துவதற்காக நம்மில் சிலர் செய்தது போல் நம் முறைகளையே கையாளும்படி மற்றவர்களைக் கட்டாயஞ் செய்யாமலும் இருக்கக் கூடும். முன்னேற்றம் துன்புறுவோன் படும் துன்பத்தின் அளவேயாகும். குற்றஞ் செய்யா திருந்தும் துன்பம் வரின், அப்பொழுதுதான் முன்னேற்றமும் அதிகமாகும். அதனல் தான், துயருறும் இவ்வுலகை விடுவிக்க இயேசு கிறிஸ்து நாதரின் தியாகம் போதுமானதாய் இருந்தது. தாம் எடுத்து முடிக்கக் கருதிய நற்காரியத்தால் பிறர் இஷ்டப் பட்டோ அல்லது இஷ்டப் படாமலோ, அநுபவிக்க நேருந் துன்பத்தை அவர் பொருட்படுத்தவே இல்லை. அது போலவே உண்மையை நிலைநாட்ட அரிச்சந்திரனுடைய துன்பங்களும் போதுமானவைகளாய் இருந்தன. தாம் ராஜ்யத்தைத் துறந்து செல்வதால் தம் குடிகள் தங்கள் விருப்பத்திற்கு மாறுகத் துன்புற நேரிடும் என்பதை அவர் அறிந்தே யிருப்பார். ஆனல் உண்மை வழியில் நடப்பதைத் தவிர வேறு நிவர்த்தி யில்லாமையால் அவர் அதைக் கவனிக்கவில்லை.

* * *

துன்ப தர்மத்தின்படி ஒத்துழையாமையின் பொருள் என்ன? நம் விருப்பத்திற்கு மாறுக அரசாளும் அரசாங்கத்திற்கு உதவி செய்ய மறுப்பதால் ஏற்படும் நஷ்டங்களையும் அசௌகர்யங்களையும் நாமாகவே வேண்டுமென்று பொறுத்துக் கொள்ள வேண்டும். அநீதியான அரசாங்கத்

தின் கீழ் அதிகாரத்துடனும் செல்வத் துடனும் வாழ்தல் குற்றமென்று தோரோ என்னும் அமெரிக்கா நாட்டு மகான் கூறியிருக்கின்ருர். ஒத்துழையா திருப்பதால் தற் சமயம் நாம் தவறுகள் இழைக்கலாம்; விலக்கக்கூடிய துன்பங்களும் நிகழலாம். ஆனல் தேசத்தினர் முழுதும் ஆண்மை அழிதலைவிட ஒத்துழையாமையால் ஏற்படும் இத்துன்பங்கள் பொறுக்கக்கூடியவைகளே.

தீமை செய்பவன் ஒருவன் தானகவே தன் குற் றத்தை உணர்ந்து நியாயம் வழங்கும் வரை நாம் காத் திருக்க லாகாது. நாமாவது மற்றவர்களாவது துன்பம் அநுபவிக்க வேண்டி வருமென்று பயந்து நாம் அவன் குற்றஞ் செய்வதில் கலந்து கொள்ளக்கூடாது. ஆனல் நேராகவோ அல்லது வேருகவோ அவனுக்கு உதவி மறுப் பதன் மூலமாய்த் தீமையை எதிர்க்க வேண்டும்.

பிதா அநீதி செய்தால் பிதாவினுடன் வாழாமல் விலக வேண்டியது பிள்ளைகளுடைய கடமை. பள்ளிக்கூட அதிகாரி பள்ளிக்கூடத்தைத் துன்மார்க்க முறை யில் நடத்தினல், மாணவர்கள் அதை விட்டு விட வேண்டும். நகரச் சங்கத் தலைவர் கெட்டவ ராகவே யிருந்து வந்தால், அவர் செய்யுங் குற்றத்தில் தாங்களும் கலந்துகொள்ளா திருப்பதற்காக அச்சங்கத்தை விட்டு அங்கத்தினர் விலக வேண்டும். அது போலவே அரசாங்கம் பொறுக்க முடியாத அநீதி செய்தால், முழு வதுமோ கொஞ்சமோ, எப்படியும் தீங்கிழைப்பதி னின்றும் அரசனைத் தடுப்பதற்குப் போதுமான மட்டும் குடிகள் உதவி மறுக்க வேண்டும். மேற் கூறிய ஒவ்வொரு நிலைமையிலும் துன்பத்தின் அம்சம் உண்டு. மனத்துன்ப மாயு மிருக்கலாம், தேகத் துன்பமாயு மிருக்கலாம். அத் தகைய துன்பமின்றி சுதந்திரம் அடைய முடியாது.

(யங் இந்தியா 16-6-1920)

# 3

ஸர் நாராயண சந்திரவர்க்கரும் சிலரும் ஜனங்கள் ஒத்துழையாமை இயக்கத்தில் சேரவேண்டாமென்று சொல்லி விடுத்திருக்கும் கடிதத்தை வெகு கவனமாய் வாசித்துப் பார்த்தேன். அதில் ஒத்துழையாமை பிசகென்பதற்குச் சரியான காரணங்கள் காட்டியிருப்பார்கள் என்று எதிர்பார்த்தேன். ஆனால் அவர்கள் மதங்களையும் சரித்திரங்களையும் தங்களை அறியாமலே திரித்துக் கூறியிருப்பதைத் தவிர வேறொன்றுங் காணவில்லை என்று மிக விசனிக்கிறேன். "ஒத்துழையாமை நம் தாய்நாட்டின் சமயக் கொள்கைகளுக்கும் ஆசாரங்களுக்கும் விரோதமா யிருப்பதுடன், மனித ஜாதியைக் காத்து மேன்மையுறச் செய்த சகல சமயங்களால் வெறுக்கப்பட்டும் இருக்கின்றது" என்று அக்கடிதம் கூறுகின்றது.

ஒத்துழையாமை யாகிய ஹிதோப தேசத்தையே பகவத்கீதை போதிக்கின்றது யெனச் சொல்லத் துணிகின்றேன்.. நியாயத்தை நிலைநாட்ட அநியாயஸ்தர்களாகிய கௌரவர்களோடு சண்டை செய்யும்படி பகவான் அர்ச்சுனனுக்குக் கட்டளை யிடுகின்றார். துளசிதாசர் நல்லவர்கள் தீயவர்களைப் பிரிந்திருக்க வேண்டுமென உபதேசிக்கின்றார். "ஆர்மஜத்" துக்கும் "அஹிரிமா" னுக்கும் சதாகாலமும் சண்டை நிகழ்ந்து கொண் டிருப்பதையே பாரஸிகருடைய வேதமாகிய "ஜென்ட் அவஸ்தா" என்பது கூறுகின்றது. இயேசு கிறிஸ்துவை நன்கு அறியாதவர்களே பைபிளில் ஒத்துழையாமை விலக்கப்பட்டிருப்பதாகக் கூறுவர். அவர் சத்தியாக்கிரகிகளில் அரசர் போல்வார். அவர் பரிசேயர்களை இடைவிடாது எதிர்த்தார். உண்மையி னிமித்தம் பெற்றோரை விட்டுப் பிள்ளைகளைப் பிரிப்பதற்கு அவர் சற்றும் பின்வாங்கவில்லை. மகமது நபி என்ன செய்தார்? உயிர்ச்சேதம்

வராதெனத் தெரியும்வரை மெக்காவில் வாழ்ந்து, பின் தாமும் தம் சீஷர்களும் மெக்காவில் இருந்தால் வீணுய் இறக்க நேருமெனத் தெரிந்ததும் மெக்காவைவிட்டு மதனு நகருக்குப்போய், பின் தம் எதிரிகளோடு போர் தொடுக்கச் சக்தி ஏற்பட்டவுடன் மெக்காவுக்குத் திரும்பி வந்தார். எப்படி நியாயமான மனிதரோடும் மன்னரோடும் ஒத்துழைப்பது கடனே, அப்படியே அநியாயமான மனிதரோடும் மன்னரோடும் ஒத்துழையா திருப்பதும் கடனுகுமென்று சகல சமயங்களும் கூறுகின்றன. தீமை செய்பவனுக்கு ஆண்மையின்றி அடங்கி இருத்தலினும், அவனை அழிக்க பலாத்காரத்தைக் கையாளுதல் சிறந்ததென்று கூட அநேக சமய சாஸ்திரங்கள் கூறுவதாய்த் தோன்றுகிறது. மேற்கூறிய கடிதத்தில் சொல்லப்படும் இந்துமத ஐதீகமும் ஒத்துழையாமை தர்மத்தை மிகத் தெளிவாய் நிரூபிக்கின்றது. பிரகலாதாழ்வார் தம் பிதாவினின்றும், மீராபாய் தம் கணவனின்றும், பீபிஷான் தம் சகோதரனினின்றும் பிரிந்தனர்.

"ஒத்துழையாமையை உபயோகித்த பொழுது நன்மை உண்டானதாக உலக சரித்திரங்களிலும் காணவில்லை" என்றும் அக்கடிதம் கூறுகின்றது. சமீபகாலத்தில் போத்தா என்னும் தளகர்த்தர் மில்னர் பிரபுவின் சீர்திருத்தச் சட்டசபைகளை பகிஷ்கரித்து, அதனுல் தம் தேசத்திற்கு நல்ல அரசியல் முறைபெற்றது ஒத்துழையாமையின் வெற்றிக்கோர் உதாரணமாகும். ருஷியதேசத்து துக்கோபார் என்னும் ஜாதியினரும் ஒத்துழையாமையைக் கையாண்டதால் தாங்கள் மிகச்சிறு தொகையினரா யிருந்தும் உலகனைத்தும் தங்களிடம் அநுதாபங் காட்டவும், அதனுல் கானடாதேசம் தங்களுக்குத் தங்குமிடம் தரவும்செய்து, அங்கே இப்பொழுது சுகமாய் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். இந்தியாவிலும் அரசர் கொடுமையால் அதிகமாய் வருந்திய குடிகள் அவ் வரசர்களோடு உள்ள சம்பந்

[illegible], அதனால் அவர்களைத் தம் விருப்பத்தின் படி நடக்கச் செய்ததுண்டு. உலக சரித்திரத்தில் ஒழுங்காய் அநுஷ்டிக்கப்படும் ஒத்துழையாமை ஒருபொழுதேனும் அபஜய மடைந்ததாக நான் அறியேன்.

இதுவரை பலாத்காரமற்ற ஒத்துழையாமைக்குச் சரித்திர பூர்வமான திருஷ்டாந்தங்கள் பல கூறினேன். பலாத்காரத்துடன் கூடிய ஒத்துழையாமைக்குச் சரித்திர பூர்வமான திருஷ்டாந்தங்களைக் கூறி வாசிப்பவரின் அறிவிற்கு இழிவுகூற விரும்பவில்லை. ஆனால் பலாத்காரத்துடன் கூடிய ஒத்துழையாமை எத்தனை முறை வென்றிருக்குமோ அத்தனை முறை தோற்று மிருக்கின்றதென்று கூற எனக்குச் சுதந்தர முண்டு. இவ்விஷயத்தை அறிந்த படியினால்தான் பலாத்காரமற்ற முறையை நாம் கையாள வேண்டுமென்று சொல்லுகிறேன். அதைத் திருப்திகரமாய் உபயோகித்தால், ஜயம் நிச்சயம்; தோல்வியில் கேடுமில்லை. ஒத்துழையாமையை அநுஷ்டிப்பவன் ஒருவனாயிருந்தாலும், அது அவனுக்குப் பலனே தரும், கேடு தராது. அவன் அடையும் பலன் மத சம்பந்தமான பலன். ராஜீய நன்மை யுண்டாக வேண்டுமானால் பலர் ஒத்துழையா திருக்கவேண்டும். ஆகையால் காரணத்தோடோ, காரண மின்றியோ பலாத்காரத்தில் மட்டும் இறங்காதிருந்தால் ஒத்துழையாமையால் யாதொரு கேடும் விளையாது. ஒத்துழையாமையை அநுஷ்டிப்பதில் ஆயிரம்முறை பலாத்காரம் நிகழ்ந்தாலுஞ் சரி, ஒருஜாதி ஆண்மை குன்றுவதைச் சும்மா பார்த்துக்கொண்டு இருக்க முடியாது.

(பால இந்தியா 4-8-1920)

## 4

தீயவனை விட்டு விலகியிருத்தல் அதாவது தீமை செய்வதில் அவனோடு கலந்து கொள்ளாமலும் அவனுக்கு உதவி செய்யாமலும் இருத்தல் ஒவ்வொரு இந்து மதஸ்த

னுடைய கடமையாகும் என்று நான் சொல்லத் துணிகின்றேன். பிரகலாதாழ்வார் தம் தந்தைசெய்யும் தீமையை விட்டு விலகி இருந்தார், சீதாபிராட்டியார் இராவணன் தமக்குச் செய்யவந்த நன்மைகளைத் தள்ளிவிட்டார். பரதாழ்வார் தம் தாய் கைகேயி செயல்களை இழித்துரைத்து அவள் தமக்குத் தேடிவைத்திருந்த ராஜ்ஜியத்தை வேண்டாமென்று தள்ளிவிட்டார். பைபிளைப்பற்றி நான் அவ்வளவு துணிந்து கூறமுடியாது. ஆனால் அதை நான் வாசித்துணர்ந்தமட்டில், இந்து சமய சாஸ்திரங்கள் கூறுவதையே அதுவும் கூறுகின்றது என்பது என் அபிப்பிராயம். இயேசு உதவி வேண்டியோ அல்லது உதவிசெய்யவோ பாபிகளுடன் கலந்து கொள்ளவில்லை. அவர்களுக்குத் தொண்டுபுரிந்து அவர்களைச் சன்மார்க்க நெறியில் நிறுத்தவே அவர்களோடு அவர் கலந்துகொண்டார். ஆனால் தம் மொழிகளைக் கேட்காத இடங்களைவிட்டு அறவே விலகியிருந்தார்.

(பால இந்தியா 19-1-1921)

## 5

மகாத்மா காந்தி ஒத்துழையாமையைப் பற்றிப் பல விடங்களில் கூறியுள்ள மொழிகளில் சில பின்வருமாறு:—

1. அரசாங்கம் ஜனங்களின் மனதைப் புண்படுத்துமேயானால், ஜனங்கள் அதை நீக்குவதற்கான வழி எது? பொறுக்கக்கூடிய குறைகளுக்கு மனுச் செய்துகொள்ளுதல் முதலியன மருந்தாகும். பொறுக்கக் கூடாதவைகளுக்கு மருந்து சாத்வீக எதிர்ப்பு ஒன்றுதான்.

2. அரசாங்கத்தை ஜன சமூகத்தின் விருப்பத்திற்கிணங்கி நடக்கச் செய்யவேண்டுமானால், ஜன சமூகத்தினிடம் சக்தி யிருந்தால்தான் மனுச் செய்து கொள்ளுதலும் பயன் தருவதாகும். அரசாங்கம் செய்யும் தீங்கு பொறுக்க முடியாததென்று மேலதிகாரியிடம் முறையிட்

டும் பயனின்றேல் என் செய்வது? நம் குறைகளை ஒழிப்பதற்கு நமக்கோர் சக்தி வேண்டியதவசியம். அரசாங்கம் செய்யும் தீங்கு நம் உயிர் நிலையைப் பாதிக்காதவரை, அவைகளை நீக்கிக் கொள்வதற்கு அதற்கென்று ஏற்பட்ட சாதாரண முறைகளைக் கையாளவேண்டும். கையாண்டும் பயன் உண்டாகாவிட்டால் அநேக சந்தர்ப்பங்களில் அத்தகைய தீங்கைப் பொறுத்துக்கொள்ளுதல் குடிகளுடைய கடமையாகும். ஆனால் ஒவ்வொருவனுக்கும், ஒவ்வொரு ஜன சமூகத்திற்கும் பொறுக்கமுடியாத தீமையை எதிர்க்க உரிமையுண்டு; அது அவர்கள் கடமையுமாகும். கத்தியெடுத்துக் கலகஞ்செய்வதில் எனக்கு நம்பிக்கையில்லை. அது நோயைவிடக் கேடுதரும் மருந்தாகும். அது பழிவாங்குதல், ஆத்திரம், கோபம் ஆகியவைகளின் அடையாளமாகும். பலாத்காரமுறை முடிவில் நன்மைதர முடியவே முடியாது, ஜெர்மனி தேசத்தை பலாத்காரத்தால் வென்ற நேச தேசத்தினர் ஜெர்மானியர்களை எப்படிப்பட்டவர்களென்று வர்ணித்தனரோ, அப்படிப் பட்டவர்களாகத் தாங்களும் ஆகி விடவில்லையா?

நமக்கு நல்ல முறையொன்று இருக்கின்றது. பலாத்கார முறைக்குப் போலல்லாமல், அதற்கு நிச்சயம் அடக்கமும் பொறுமையும் தளரா ஊக்கமும் வேண்டும். தீமை செய்வதற்கு உதவி மறுத்தல் என்பதே இம்முறை.

3. ராஜ விஸ்வாஸமென்பது என்றும் ஒரே படித்தாய் இருக்கக்கூடியதோர் கொள்கையன்று. அது பரஸ்பர இணக்கமாகும். குடிகளிடம் விஸ்வாஸமுள்ள அரசாங்கத்திற்குக் குடிகளும் விஸ்வாஸமாயிருப்பது இயற்கை. ஆனால் அரசாங்கம் குடிகளுக்கு விஸ்வாஸமாயிராவிட்டால், அதாவது குடிகளுக்கு அநீதியும் கொடுமையுஞ் செய்வதை ஒரு கோட்பாடாக வைத்துக்கொண்டால், அதனிடம் நாம் நமக்குள்ள விஸ்வாஸ மின்மையை

யாதொரு தடுமாற்றமுமின்றி அறிவிப்பதோடு, அதற்குச் செய்து வரும் சகல உதவிகளையும் மறுக்கவேண்டும்.

4. ஆகையால் நமக்குள்ள ஒரே மருந்து ஒத்துழையாமைதான். பலாத்காரத்தை அறவே ஒழித்து விட்டால் அதுதான் சகலவற்றிலும் அதிகப் பலன் தரக் கூடியதும் மிகச் சுத்தமானதுமான மருந்து. நம்முடைய ஒத்துழைப்பினால் நாம் பெரிதும் போற்றும் மதக் கொள்கைகளுக்குக் கேவலமும் கேடும் விளையும் பொழுது, ஒத்துழையாமையைக் கைக்கொள்ள வேண்டியது நம்முடைய கடமை.

5. பழிவாங்கும் கருத்துடன் அதைக் கையாண்டால், அது பயன் தராது. தன்னைச் சுத்தஞ் செய்து கொள்ளவும், தியாகஞ் செய்துகொள்ளவும் எண்ணி அதைக் கையாண்டால் நிச்சயம் வெற்றி தரும்.

6. அநேகமாய் சாதாரண ராஜீய இயக்கம் அரசாங்கத்திற்குக் கஷ்ட முண்டுபண்ணும் நோக்கத்துடனேயே துவக்கப்படும். ஆனால் சத்யாக்ரக இயக்கம் அந் நோக்கத்துடன் ஏற்படவில்லை. சத்யாக்ரகியின் நடவடிக்கைகளால் அரசாங்கத்திற்குக் கஷ்டங்கள் நேரிடலாம்; ஆனால் அவன் அவைகளைக் கவனிப்பதில்லை.

7. சத்யாக்ரகி பரிகாரந் தேடுவதற்குக் கஷ்டமுண்டு பண்ணுவதைக் கருதாமல் கஷ்டம் அநுபவிப்பதையே கருதுவான்.

8. ஒத்துழையாதாரில் பலருடைய ஒத்துழையாமைக்குக் காரணம் அன்பு அன்று; பொருளற்ற பகைமையே காரணம் என்பதை நான் ஒப்புக்கொள்ளுகிறேன். "பொருளற்ற" பகைமை என்று நான் சொல்வதற்குக் காரணம் ஒத்துழையாதாரில் பலர் பாராட்டும் பகைமைக்கு ஒத்துழையாமைத் திட்டத்தில் இடமேயில்லை என்பது தான். ஒருவனும் பகைமை காரணமாகத் தியாகஞ்

செய்வதில்லை. தான் திக்கற்ற நிலைமையில், பகைவனென்று ஒருவனைக் கருதி அவனுக்குத் தீமைசெய்ய முயல்கிறான். ஒத்துழையாமையில் அடைய விரும்பும் பயன் தண்டனை புரிவதன்று; நீதி பெறுவதே யாகும். பகைமையின் லட்சியம் நீதியன்று; பழிவாங்குதலும் அறியாமையால் எழும் கோபமுமே யாகும். அமிர்தஸரஸில் ஜனக்கூட்டத்தின் பகைமை நிரபராதிகளைக் குரூரமாய்க் கொல்வதிலேயே முடிந்தது. ஆனால் ஒத்துழையாதவனுடைய பகைமை அவனிடமே திரும்பிவந்து மூளை மழுங்கி அவனையும் புனிதமாக்கி யாரிடம் பகைமை பாராட்டினானோ அவனையும் திருந்தச் செய்யும். ஆகவே ஒத்துழையாதவனொருவன் முதலில் பகைவனாய் இருப்பினும் முடிவில் நண்பனாய் விடுவான்.

ஒத்துழையாதவர்கள் குற்றஞ் சிறிது மின்றிப் பூரண குணம் நிறைந்தவர்களாய் இருத்தல் வேண்டுமென்று சிலர் கருதுகின்றனர். ஆனால் நாம் பூரண குணமுடையவர்களாய் இருப்பின், ஒத்துழையாமையை அநுஷ்டிக்கக் சந்தர்ப்பமே ஏற்பட்டிருக்காது என்பதை அவர்கள் மறந்து விடுகின்றனர். ஏனெனில் அப்பொழுது தீமையோடு ஒத்துழைப்பு இருந்திருக்க மாட்டாது. ஒத்துழையாமை என்பது தன்னைத்தான் ஒருவன் புனிதமாக்கிக் குணசீலன் ஆவதற்குச் செய்யும் முயற்சியே யாகும்.

9. பகைமையை நீக்குவதற்குள்ள ஒரே வழி அதை ஒழுங்கான முறையில் சாதித்துக் கொள்வதே. இந்தியர் மனம் புண்படும்படி நிந்தனையை வளர்த்துக் கொண்டிருக்கும்வரை பகைமையை நீக்குவதென்பது ஒருவராலும் முடியாதகாரியம். ஒருபுறம் இந்தியரின்புண்ணிய உணர்ச்சிகளை நிந்தித்து ஒதுக்கிவிட்டு, மற்றொருபுறம் இந்தியரே, பகைமை பாராட்ட வேண்டாம் என்று கூறுவது பரிகாச வார்த்தையாகும். இந்தியா தனக்கு பலமும் துணையும் இல்லையென்று கருதுகின்றது; அதனால் தன்னை இகழும்

கொடுங்கோலனைப் பகைக்கின்றது. ஒத்துழையாமை இயக்கம் ஜனங்களைப் பலமுள்ளவர்களாகவும் பிறர் உதவி எதிர்பாராதவர்களாகவும் செய்யும் நோக்கமுடையது ; பகைமையை இரக்கமாக மாற்ற முயல்கின்றது.

பாரத தேவி பலமடைந்து பிறரை எதிர்பாராத நிலைமைக்கு வந்துவிட்டால், பின் அவள் தனக்குக் கொடுமை செய்தவர்களைப் பகைப்பதை நிறுத்திவிடுவாள். ஏனெனில் அக் குணங்களால் அவளுக்கு அவர்களை தண்டிக்கும் சக்தியும், அதனல் அவர்களை மன்னித்து நேசிக்கும் சக்தியும் ஏற்பட்டுவிடும். இன்று அவளுக்கு தண்டிக்கவும் சக்தியில்லை, மன்னிக்கவும் சக்தியில்லை. அதனல்அவள் வீணே பகைமை பாராட்டிக் கொண்டிருக்கிருள்.

10. மக்கள் ஒன்றுக்கொன்று விரோதமான இருவித சக்திகளுக்கு ஆளாயிருக்கின்றனர் என்றும் சதாகாலமும் ஏற்பதும் தவிர்ப்பதும் மனிதர்தொழில் என்றும் சகல சமயங்களும் கூறுகின்றன. நன்மையோடு ஒத்துழைப்பு எப்படி மனிதர் கடமையோ, அப்படியே தீமையோடு ஒத்துழையாமையும் மனிதர் கடமையாகும். * * * ஒத்துழையாமையானது விதைப்பதற்கு முன் செய்ய வேண்டிய களையெடுத்தலை ஒக்கும். விவசாயத்திற்கு விதைத்தல் எவ்வளவு அவசியமோ, அவ்வளவு களையெடுத்தலும் அவசியம். பயிர் உண்டாய்க்கொண்டிருக்கும் பொழுதுகூடக் களையெடுத்தல் அநேகமாய்த் தினந்தோறும் செய்யவேண்டியதோர் தொழில் என்பதை ஒவ்வொரு விவசாயியும் அறிவான்.

## 6

சாதாரணமாகச் சட்டத்தை மீறுகிறவன் கள்ளத்தனமாக மீறுகிருன். அதற்குரிய தண்டனையை அடையாமலிருக்க முயலவும் செய்கிருன். ஆனல் சாத்வீக எதிர்ப்பினனே அவ்விதம் செய்வதில்லை. அவன் எப்பொ

முழுதும் அரசாங்கத்தின் சட்டங்களுக்குப் பணிந்தே நடப்பான். அப்படி நடப்பதும் தண்டனை கிடைக்கும் என்னும் பயத்தாலன்று. சமூகத்தின் நலத்துக்கு அவை அவசியம் என்று கருதுவதாலேயே. ஆனால் அபூர்வமாகச் சில சந்தர்ப்பங்கள் நேரும். அப்பொழுது பணிந்து நடந்தால் மானபங்கம் உண்டாக்கக் கூடிய அளவு அநியாயமான சட்டங்கள் இயற்றப் படலாம். அந்தச் சட்டங்களை அவன் பகிரங்கமாகவும் சாத்வீகமாகவும் மீறி நடந்து அதனால் கிடைக்கும் தண்டனைகளை ஆரவாரமின்றி ஏற்றுக் கொள்கிறான். அத்துடன் அவன் அரசாங்கத்தின் செயலைக் கண்டிப்பதற்காக சன்மார்க்கத்திற்கு சம்பந்த மில்லாத சட்டங்களையும் மீறுவதன் மூலம் அரசாங்கத்தோடு ஒத்துழையாமையையும் மேற்கொள்ள உரிமையுண்டு.

## 7

நன்மையுடன் ஒத்துழைப்பதைப் போலவே தீமையுடன் ஒத்துழையா திருப்பதும் கடமையாகும். ஆனால் இதுவரை உலகில் ஒத்துழையாமை என்பது தீமை செய்பவனுக்குத் தீங்கு செய்வதன் மூலமே அனுஷ்டிக்கப்பட்டு வந்திருக்கிறது. ஆனால் பலாத்காரம் மூலம் செய்யப்படும் ஒத்துழையாமை தீமையை ஒழிப்பதற்குப் பதிலாகத் தீமையைப் பெருக்கவே செய்யும். தீமையைக் காத்து நிற்பது பலாத்காரமே யாதலால் தீமைக்கு அளித்து வந்த ஆதரவை அளிக்க மறுப்பதானால் பலாத்காரத்தை அறவே துறந்து விட வேண்டியது அவசியமாகும். அஹிம்சையை அனுஷ்டிப்பது என்பது தீமையுடன் ஒத்துழைக்க மறுப்பதால் ஏற்படும் தண்டனையைத் தானாக ஏற்று அனுபவிப்பதாகும்.

## 8

ஒத்துழையாமை என்பது கொடுங்கோலாய் விட்ட அரசாங்கத்துக்கு ஆதரவு தர மறுப்பதாகும். ஆனால் அர

சாங்கத்தை பலாத்காரம் கொண்டு எதிர்ப்பது அதில் சேராது. அதனுல் ஒத்துழையாமையை சாதாரண அறிவுள்ள குழந்தைகளும் பொது ஜனங்களும் யாதொரு தீங்குமின்றி அனுஷ்டிக்க முடியும். ஆனுல் சாத்வீகச் சட்டமறுப்பு செய்ய வேண்டுமானுல் அதற்கு எப்பொழுதுமே சட்டங்களே தண்டனே கிடைக்கும் என்ற பயம் காரணமாக வன்றி தாமாகவே மனமுவந்து அனுசரித்து நடக்கும் பழக்கம் கைவந்திருக்க வேண்டியது அவசியம். ஆதலால் சாத்வீகப் போரில் கடைசியாகவும் ஆரம்பத்தில் அத்தகைய பழக்கமுடைய சிலராலுமே கையாளப்பட வேண்டிய ஆயுதமாகும்.

## 9

ஒத்துழையாமை என்பது இந்தியர்களுடைய இரத்தத்திலேயே கலந்துள்ளது. அதனுலேயே நான் ஒத்துழையாமை என்றதும் கோடிக்கணக்கான இந்திய மக்கள் இதோ என்று வந்து சேர்ந்திருக்கிறுர்கள். ஒத்துழையாமை அவர்களுடன் பிறந்தது. ஒவ்வொரு மதத்திலும் காணப்படுவது. ஹிந்து மதமும் இஸ்லாம் மதமும் கூறுவது. அதனுல் தான் அடிமைகளாய் அயர்ந்து கிடந்த போதிலும் அவர்களே ஒத்துழையாமையானது அவர்களுடைய நீண்ட நாள் உறக்கத்திலிருந்து எழுப்பி யிருக்கிறது. ஒத்துழையாமை நமக்கு நம்பிக்கையும், பலமும், தைரியமும் அளித்திருக்கின்றது.

## 10

ஒத்துழையாமையின் பிரதம நோக்கம் தர்மநெறி தவறியும் கழிவிரக்கம் கொள்ளாமலும் நடந்து வரும் அரசாங்கத்துக்கு அளித்து வரும் ஆதரவை மறுப்பதன் மூலம் நம்மைத் தூய்மை செய்து கொள்வதாகும். இரண்டாவது நோக்கம் எல்லா விஷயங்களுக்கும் அரசாங்கத்தை எதிர் பார்த்து நிற்கும் சார்பு உணர்ச்சியை நீத்து நாமே நம்

முடைய காரியங்களை நடத்திக் கொள்ளும் திறமையைப் பெறுவதாகும். இந்த இரண்டு நோக்கங்களையும் நிறைவேற்றிக் கொள்ளும் விஷயத்தில் பிறருக்கோ பொருளுக்கோ தீங்கு செய்யாமலிருக்கக் கற்றுக் கொள்ளுவதும் ஒத்துழையாமையின் நோக்கங்களில் ஒன்றாகும்.

## 11

அரசாங்கமானது ஒத்துழையாமை இயக்கத்தை ஒரு புரட்சியாகக்கருதுமானால், அது பலாத்காரப் புரட்சியன்று. வளர்ச்சியாகிய புரட்சி, அஹிம்சாப் புரட்சி என்றே கூற வேண்டும். அதனால் ஏற்படும் புரட்சி சிந்தையிலும் ஆன்மாவிலுமே. ஒத்துழையாமை என்பது தூய்மை செய்து கொள்ளும் முறையே யாகும். அதனால் அது கருத்துக்களிலேயே புரட்சியை உண்டாக்கும். அதை அடக்குவது ஒத்துழைக்கும்படி நிர்ப்பந்திப்பதே யாகும். அதைக் கொன்றுவிடும்படி உத்திரவிட்டால் பலாத்காரத்தில் இறங்கும்படி ஜனங்களைக் கோபமூட்டிக் கிளப்பி விடுவதாகவே இருக்கும். ஆனால் கோபமூட்டினாலும் கிளப்பி விட்டாலும் நாம் அஹிம்சையினின்றும் பிறழாமல் இருப்போமானால் வெற்றி நமதே. பலாத்காரமானது பலாத்காரம் செய்பவனுக்குப் பணிந்து நடந்தாலும் அல்லது பதிலுக்கு அவனுக்கு பலாத்காரம் செய்தாலுமே செழித்து வளரும். ஆதலால் பரிபூரணமாக ஒத்துழையாமையை மேற்கொண்டு இந்தத் தீய அரசாங்கத்தைத் தொத்து நோயாளியை ஒதுக்கி வைப்பது போல நமக்கும் அதற்குமுள்ள தொடர்பை அறுத்து ஒதுக்கி வைத்து விட வேண்டும். அதைப்பற்றிப் பேசக்கூடக் கூடாது. அதன் தீய தன்மையை உணர்ந்து விட்டதால் அதற்கு ஒத்துழைப்பதன் மூலம் மரியாதை செய்வதை நிறுத்திவிட வேண்டும். இவை தான் நான் ஒவ்வொரு தொண்டருக்கும் கூறும் முக்கியமான யோசனை.

## 12

ஒத்துழையாமையை மேற்கொள்பவர்கள் பரிபூரண மான சான்றோர்களாக இருக்க வேண்டும் என்று எதிர் பார்க்கக் கூடாது. நாம் பரிபூரணம் அடைந்து விட்டால் அதன்பின் ஒத்துழையாமையை மேற்கொள்ள வேண்டிய அவசியமே கிடையாது. ஒத்துழையாமை என்பது தூய்மை செய்து கொள்வதற்கு அல்லது பரிபூரணமான சால்பு அடைவதற்கு செய்யும் முயற்சியேயாகும். அத்துடன் பெரும்பாலோர் விஷயம் அறியாமல் வெறும் நம்பிக்கை யின் பேரிலேயே இந்தத் தூய்மை மார்க்கத்தில் ஒழுகுகி றார்கள். சுயநலமுள்ள ஒத்துழையாமையாளர்கள் சுய நலமில்லாத தலைவனைப் பின்பற்றுவார்களானால் இறுதியில் அவர்களும் ஒத்துழையாமை என்பது சுயநலமின்மையே என்பதை உணர்ந்து நடக்க ஆரம்பித்து விடுவார்கள்.

## 13

நாம் பிறரை ஒத்துழைக்காதிருக்கும்படி நிர்ப்பந்தம் செய்தலாகாது. எல்லோரும் செய்கிறார்கள் என்றோ அல் லது நிர்ப்பந்தத்தாலோ ஒத்துழையாமையை மேற்கொள் பவர்கள் உண்மையான ஒத்துழையாமையாளர்கள் ஆக மாட்டார்கள். அத்தகையோர் நமக்கு உதவி யாகார், தடை யாகவே இருப்பர். அத்துடன் நாம் பிறரை நிர்ப்பந்தித் தால்நம்முடையகொடுங்கோன்மைஇந்த நாட்டில் அதிகாரி களாக யிருக்கும் ஒரு சில ஆங்கிலேயருடைய கொடுங் கோன்மையிலும் அளவிறந்த மடங்கு அதிகக்கொடுமையா யிருக்கும். ஆங்கிலேயருடைய கொடுங்கோன்மை, எதிர்ப் பைச் சமாளித்து உயிருடன் இருக்கப் போரிடும் ஒரு சிறு பான்மைக் கூட்டத்தாரின் கொடுங்கோன்மையாகும். ஆனால் நம்முடைய கொடுங்கோன்மையோ பெரும்பான் மைக் கூட்டத்தாரின் கொடுங்கோன்மையா யிருக்குமாத லால் அவர்களுடைய கோடுங்கோன்மையினும் அதிகத்தீய

தாகும். தெய்வ விரோதமாகவுமிருக்கும். ஆதலால் நாம் நிர்ப்பந்தம் செய்வது என்பதை அறவே நீக்கிவிட வேண்டும். நாம் ஒரு சிலராகவே இருந்தாலும், ஒத்துழையாமையை மனப்பூர்வமாக அனுஷ்டிப்பவர்களாக இருந்துவிட்டால், பிறரை நம்முடைய கருத்தை ஏற்றுக் கொள்ளும்படி மனமாற்றம் செய்யும் முயற்சியில் நாம் இறந்து விட நேர்ந்தாலும் பாதகமில்லை, நம்முடைய லட்சியத்தைச் சரியான முறையில் அவலம்பித்தவர்களாவோம். ஆனல் நாம் பிறரை நிர்ப்பந்தம் செய்து ஆள் சேர்த்தோமானல், நாம் நம்முடைய லட்சியத்துக்கும் கடவுளுக்கும் துரோகம் செய்தவர்களாவோம். ஒரு சமயம் வெற்றியடைவது போல் தோன்றினலும் இப்பொழுதுள்ள ஆங்கில பயங்கர ஆட்சியிலும் அதிகக் கொடுமையான பயங்கர ஆட்சியையே அமைத்து விட்டவர்களாவோம்.

## 14

நாம் சகிப்புத் தன்மையில்லாமல் பிறர் நமக்கு விரோதமாகக் கருத்துக்களை கூறுவதைத்தடுப்பதாலும் நம்முடைய இயக்கம் முன்னேருது. அப்படிச் செய்து விட்டால் நம்மை ஆதரிப்பவர்கள் யார், நம்மை எதிர்ப்பவர்கள் யார் என்பதை அறிய முடியாது. அதனல் நம்முடைய வெற்றிக்கு இன்றியமையாது வேண்டப்படுவது அபிப்பிராயம் கூறும் சுதந்திரத்தை எவ்வளவு வளர்க்க முடியுமோ அவ்வளவும் வளர்ப்பதாகும். நம்முடைய "எஜமானர்கள்" செயல்களிலிருந்து இந்தச் சிறிய பாடத்தையாவது கற்றுக் கொள்ள வேண்டாமா? அவர்களுடைய "குற்றச் சட்ட"ப் புத்தகம் அவர்களுக்குப் பிடிக்காத அபிப்பிராயம் கூறுபவர்களுக்குக் கொடுமையான தண்டனைகளைக் கூறுகின்றது. அதே போல் தம்முடைய அபிப்பிராயங்களைக் கூறியதற்காக நம்முடைய நாட்டு மக்களில் பெரியோர்களில் சிலரைக் கைது செய்துமிருக்கிருர்கள். நம்முடைய ஒத்துழையாமை இயக்கமானது அந்தவிதமான அடக்கு முறை

யைப் பகிரங்கமாக எதிர்த்துக் கண்டிப்பதாகும். இப்படி அபிப்பிராயத்தை அடக்கக் கூடாது என்று அரசாங்கத்தை எதிர்க்கும் அதே சமயத்தில் நாமே அபிப்பிராயங் கூறுவதைத் தடுப்பது என்பது சரியாகுமா?

## 15

ஒத்துழையாமை என்பது கட்டுப்பாடும் தியாகமும் உண்டாக்குவதற்கான ஒருமுறை. அதனால் நமக்கு விரோதமாக அபிப்பிராயம் கூறுகிறவர்களிடம் பொறுமையாயும் மரியாதையாயும் நடந்து கொள்ள வேண்டும். முற்றிலும் முரண்பாடான அபிப்பிராயங்களாயிருந்தாலும் பரஸ்பரம் சகிப்புத்தன்மையுடன் நடந்து கொள்ளக் கற்றுக் கொண்டாலன்றி ஒத்துழையாமையை மேற்கொள்வது என்பது ஒருநாளும் முடியாத காரியம். நான் எவ்வளவோ கஷ்டப்பட்டுச் சேகரித்துள்ள அனுபவத்தால் அறிந்து கொண்ட சிறந்த பாடம், கோபத்தை விரயம் செய்யாமல் அடக்கிக் கொள்வதே. உஷ்ணத்தை அடக்கினால் அது வேறுவிதமான சக்தியாக மாறி உதவுவது போல, கோபத்தை அடக்கினால் அதை உலகத்தையே வென்றுவிடும்படியானதோர் சக்தியாக மாற்றிவிடலாம்.

## 16

நம்முடைய இயக்கமானது அஹிம்சாப் போராட்டம், அதனால் நமக்குப் பணிவு இன்றியமையாததாகும். நம்முடைய இயக்கமானது உண்மைப் போராட்டம், அதனால் நாம் உண்மையாக நடக்கிறோம் என்ற உணர்ச்சி நமக்கு மனவுறுதி தரவேண்டும். நாம் எந்த மனிதரையும் அழிக்கும் நோக்கத்துடன் ஹிந்தி இயக்கத்தை ஆரம்பிக்கவில்லை. நாம் யாரையும் விரோதிகளாகக் கருதுவதில்லை. ஒருவரிடங் கூட நமக்குத் துவேஷம் கிடையாது. துன்பத்தை ஏற்று அனுபவிப்பதன் மூலம் மனமாற்றம் செய்வதே

நம்முடைய நோக்கம். எத்துணை கல்நெஞ்சுடைய சுய நலம் நிறைந்த ஆங்கிலேயரையும் மனமாறும்படி செய்து விட முடியும் என்றே நம்புகின்றேன்.

## 17

அஹிம்சா தர்மமே ஒத்துழையாமை இயக்கத்தின் ஜீவநாடியாகும். அதனால் மற்ற அம்சங்களில் தவறி விட்டாலும் அஹிம்சையாக மட்டும் நடப்போமானால் போரை நடத்திக் கொண்டு போக முடியும். ஆனால் அஹிம்சையி னின்றும் பிறழ்ந்து விட்டால் அடியோடு அடிபணிந்து விட வேண்டியதே. ஹிம்சைதான் அரசாங்கத்தின் அஸ்தி வாரம் என்பதை மறந்து விடலாகாது. ஹிம்சையே அதன் க்ஷேமமாயும் இறுதிப் புகலிடமாயும் இருப்பதால், ஜனங் கள் கையாளும் ஹிம்சை முழுவதையும் பயனில்லாமல் செய்ய வேண்டிய ஏற்பாடுகளைச் செய்திருப்பதால், நாம் ஹிம்சையில் இறங்கினால் அதனால் அதற்கு யாதொரு கேடும் உண்டாகமாட்டாது. ஆதலால் நாம் ஹிம்சையில் இறங்கினால் அரசாங்கத்துடன் பரிபூரணமாக ஒத்துழைப் பவர்களே ஆவோம். நாம் மேற்கொள்ளும் சகலவித ஹிம்சையும் நம்முடைய மடமை, அறிவின்மை, கையா லாகாத கோபம் என்பவற்றின் அடையாளமேயாகும். எவ் வளவு கோபம் மூட்டினாலும் அதை அடக்கிக் கொள் வதே போர்வீரனுடைய உண்மையான லட்சணமாகும். போர் வித்தையின் அரிச்சுவடியைப் படிப்பவன் கூட எதிரி தன்னைச் சிக்கவைக்கும் பொறிகளில் அகப்பட்டுக் கொள்ளாமல் பார்த்துக் கொள்ள வேண்டும் என்பதை அறிவான். அரசாங்கம் நமக்குக் கோபம் மூட்டும் ஒவ் வொரு காரியமும் அத்தகைய அபாயகரமான பொறியே யாகும். அந்தப் பொறியில் கை வைக்க நாம் உறுதியாக மறுத்து விட வேண்டும்.

## 18

ஒத்துழையாமை இயக்கம் நடக்கும் போது ஹிம்சை தோன்றுமானால், போக்கிரிகள் செய்தார்கள் என்று அவர்கள் மீது குற்றத்தைச் சுமத்தி விட்டு நாம் சும்மா இருந்து விட முடியாது. அவர்களுடைய செயல்களுக்கும் நாமே பொறுப்பாளிகள் என்பதை உணர வேண்டும். அப்படியில்லையெனில் நாம் சுயராஜ்யம் பெறத் தகுதியற்றவர்கள் என்று நிரூபித்தவர்கள் ஆவோம். நாம் போக்கிரிகளையும் அடக்கக் கூடிய சக்தியைப் பெற வேண்டும். அவர்களும் நாம் நடத்தி வரும் புனிதமான தேசீய இயக்கத்தில் தலையிடாதிருக்க வேண்டியதன் அவசியத்தை உணர்ந்து கொள்ள வேண்டும். நம்முடைய இயக்கம் தூய்மை செய்யும் இயக்கமாதலால் துஷ்டர்களும் பதிதர்களும் கூடத் தூய்மை பெற வேண்டியதே யாகும். இதை மறந்து விட வேண்டாம், இதுதான் நாம் செய்வதாகச் சொல்லும் காரியம். இதை நாம் அந்தரங்க சக்தியாகச் செய்யாதிருந்து விட்டால் எந்தச் சாத்தான் தன்மையுள்ள ஸ்தாபனத்தைக் கண்டனம் செய்கின்றோமோ அதைவிட அதிகச் சாத்தான் தன்மையுடையதோர் ஸ்தாபனத்தை அமைக்கும் குற்றவாளிகள் ஆவோம்.

## 19

ஒத்துழையாமை இயக்கத்தின் பிரதம நோக்கம் அரசாங்கத்தை ஸ்தம்பிக்கச் செய்வதன்று; நம்மைத் தூய்மை செய்து கொள்வதே. ஆனால் அதன் முதற்பயன் நம்முடைய தீய குணங்கள் பலவீனங்கள் காரணமாக வாழ்ந்து வரும் அரசாங்கத்தை ஸ்தம்பிக்கச் செய்வதாகவே இருக்கும்.

## 20

முதலாளி தொழிலாளி சச்சரவுகளை அரசியல் விஷயங்களுக்கு உபயோகித்துக் கொள்வதில்லை என்றே ஒத்து

ழையாமை இயக்கம் தீர்மானித்திருக்கிறது. இரு திறத்தாரையும் சமமாக எண்ணவே முயன்று வருகின்றது. அப்படிச் செய்யாமல் தொழிலாளியை முதலாளிக்கு விரோதமாக வேண்டுமென்று கிளப்பி விட்டால் நாம் முட்டாள்களும் ஆவோம்; அரசாங்கத்தின் வலையில் விழுந்தவர்களும் ஆவோம். அரசாங்கம் உடனே முதலாளிகளைத் தொழிலாளிகளுக்கு விரோதமாகவும், தொழிலாளிகளை முதலாளிகளுக்கு விரோதமாகவும் கிளப்பி விட்டுத் தங்கள் பிடியைப் பலப்படுத்திக் கொள்வார்கள்.

## 21

தொழிலாளர்களுடைய வேலை நிறுத்தங்கள் அரசியல் லட்சியங்களை அடையப் பயன்படும் என்பதை நான் மறுக்கவில்லை. ஆனால் அஹிம்சா பூர்வமாக நடத்தப்படும் ஒத்துழையாமை இயக்கத்தில் அவை சேரா. தொழிலாளிகள் தேசத்தின் நிலைமையை அறிந்து தேசத்தின் நலனுக்காக உழைக்கத் தயாராக இருந்தாலன்றி அவர்களை அரசியல் விஷயத்துக்கு உபயோகிப்பது அபாயகரமான காரியம் என்பதை உணர்ந்து கொள்ள அதி விசேஷமான அறிவு தேவையில்லை. ஆனால் தொழிலாளிகளிடம் இதைத் திடீரென்று எதிர்பார்த்துவிட முடியாது. அது அவர்களுக்குச் சாகாமல் உயிருடன் இருப்பதற்கு வேண்டிய அளவான வசதிகள் கிடைக்கும் பொழுதுதான் முடியும். ஆதலால் தொழிலாளர்கள் அரசியல் விஷயத்தில் செய்யக் கூடிய பெரிய உதவி தங்களுடைய நிலைமையை உயர்த்திக் கொள்வதும், அரசியல் விஷயங்களை நன்றாய் அறிந்து கொள்வதும், தங்களுடைய உரிமைகளை வற்புறுத்துவதும் தாங்கள் சிருஷ்டிக்கும் பொருள்களை முதலாளிகள் நியாயமான முறையில் உபயோகிக்கும்படிக் கோருவதுமேயாகும். ஆதலால் தொழிலாளர்கள் பெறவேண்டிய முதல் வளர்ச்சி முதலாளிகளுடன் சம பங்காளிகளாகத் தங்கள்

நிலைமையை உயர்த்திக் கொள்வதே. ஆதலால் இப்பொழுது வேலை நிறுத்தங்கள் எல்லாம் தொழிலாளர்களுடைய நிலைமையை உயர்த்துவதற்காகவும், பிறகு அவர்களிடம் தேசபக்தி உணர்ச்சி உண்டானதும் அவர்கள் செய்யும் பொருள்களின் விலையை ஒழுங்கு செய்வதற்காகவுமே நடைபெற வேண்டும்.

## 22

சாதாரணமான அரசியல் கிளர்ச்சிகள் அரசாங்கத்துக்குச் சங்கடமுண்டாக்கும் நோக்கத்துடனேயே ஆரம்பிக்கப் படுகின்றன. ஆனால் சத்யாக்கிரக இயக்கத்துக்கு அந்த விதமான நோக்கம் கிடையாது. ஆயினும் சத்யாக்கிரஹியின் செயல்களால் அரசாங்கத்துக்குச் சங்கடமுண்டாகுமானால் அதற்காக சத்யாக்ரகி தன்னுடைய இயக்கத்தை நிறுத்தி விடமாட்டான். சத்யாக்ரகம் என்பது குடும்பத்தில் அனுஷ்டிக்க வேண்டிய கொள்கையை அரசியல் விஷயத்திலும் அனுஷ்டிப்பதேயாகும். ஜனங்களுக்கு ஏற்படும் அரசியல் குறைகளுக்குப் பரிகாரம் தேட விரும்பினால் சத்யாக்கிரக இயக்கம் ஒன்று தான் நாட்டில் ஹிம்சையைப் பரவ வொட்டாமல் தடுக்க வல்லது என்பதே என்னுடைய அனுபவம் கூறும் முடிவு.

## 23

சத்தியாக்கிரகி சிறையை நாடுவதன் பிரதானமான நோக்கம் தன்னைத் தூய்மை செய்து கொள்வதே. அரசாங்கத்துக்குச் சங்கடம் உண்டாக்குவது பிரதான நோக்கமன்று. பிரசித்தி பெற்றவனாக இல்லாதிருந்தாலும் மாசற்ற நிரபராதியாயுள்ளவன் ஒருவனைச் சிறையில் அடைப்பதாலும் சிரச்சேதம் செய்வதாலும் அரசாங்கமானது எந்த விதத்திலும் சங்கடம் அடையாதிருந்தாலும் அப்படிச் சிறைப்படுத்துவதும் சிரச்சேதம் செய்வதும்

போதும் அரசாங்கத்துக்கு சாவுமணி அடிப்பதற்கு என்பது என்னுடைய அசையாத நம்பிக்கையாகும். எத்துணை இருண்ட இருளையும் நீக்க ஒரு விளக்குக்கு அதிகம் தேவையில்லை.

## 24

சமூக பகிஷ்காரம் என்பது ஒரு காலங் கண்ட முறை. ஜாதி முறை உடன் பிறந்தது. அதிகமான பயன் தரக் கூடிய விதத்தில் அனுஷ்டிக்கக் கூடிய பயங்கரமான தண்டனை முறையாகும். சமூகமானது ஒருவனைப் பிரஷ்டம் செய்து விட்டால் பிறகு அது அவனுக்கு உதவி செய்யக் கடமைப் பட்டதன்று என்னும் கருத்தே அதன் அஸ்திவாரம். பண்டைக் காலத்தில் ஒவ்வொரு கிராமமும் தனக்கு வேண்டிய காரியங்களைத் தானே பார்த்துக் கொண்டு வந்ததாலும் சமூகத்துக்கு விரோதமாக நடப்பது அபூர்வமாகவே இருந்ததாலும், அக்காலத்தில் இந்த முறை ஒழுங்காகவே உபயோகிக்கப் பட்டு வந்தது. ஆனால் இக்காலத்திலோ ஒத்துழையாமையை எல்லோரும் சரியானது என்று ஏற்றுக்கொள்ளவில்லை யாதலால், பெரும்பான்மையோர் கருத்துப்படி நடக்குமாறு சிறுபான்மையோரை நிர்ப்பந்திப்பதற்காக சமூக பகிஷ்காரத்தை உபயோகிப்பது மன்னிக்கமுடியாத ஹிம்சை முறையாகும். அம் முறையைக் கைவிடாதிருந்தால் அது நம்முடைய இயக்கத்தை நிச்சயம் அழித்துவிடும். சமூக பகிஷ்காரம் செய்யப்படுபவர்கள் அதைத் தண்டனையாகக் கருதாமல் கட்டுப்பாட்டுக்கு அவசியமாகக் கருதினால் மட்டுமே சமூக பகிஷ்காரத்தை உபயோகிக்கவும் செய்யலாம். அதனால் பயன் உண்டாகவும் செய்யும். அத்துடன் அஹிம்சா இயக்கத்தில் அதைச் சேர்த்துக் கொள்ள வேண்டுமானால் அது ஒரு பொழுதும் துன்பம் செய்வதாக இருக்கக் கூடாது. நாகரிகமாக நடைபெற வேண்டும். பகிஷ்கரிக்கப் படுபவருக்கு அசௌகரியம் உண்டானாலும் அவருக்

குத் துன்பம் உண்டாவதாகவே எண்ண வேண்டும். உதாரணமாக, வைத்திய உதவி பெற வொட்டாமல் தடுப்பது கொலை செய்ய முயற்சி செய்வதாகவே அற நூல்கள் கூறும். இறக்கும் தறுவாயிலிருப்பவனுக்கு வைத்திய உதவி செய்ய மறுப்பதற்கும் கொலை செய்வதற்கும் வித்தியாசம் இருப்பதாக எனக்குத் தோன்ற வில்லை. ஆயுதப் போர் முறை கூட பகைவனுக்கு வைத்திய உதவி தேவையானால் வழங்க வேண்டு மென்றே கூறுகின்றது. கிராமத்திலுள்ள ஒரே கிணற்றை உபயோகிக்க வொட்டாமல் தடுப்பது கிராமத்தை விட்டுப் போய் விடும்படி கூறுவதேயாகும். தங்கள் கருத்தை ஏற்றுக் கொள்ளாதவரை இந்த விதமாக நிர்ப்பந்திப்பதற்கு ஒத்துழையாமையாளருக்கு எவ்வித உரிமையும் கிடையாது. பொறுமை யின்மையும் சகிப்புத் தன்மை யின்மையும் நிச்சயமாக இந்தப் பெரிய இயக்கத்தைக் கொன்று விடும். ஜனங்களை நிர்ப்பந்தம் மூலம் நல்லவர்கள் ஆக்க நமக்கு உரிமை கிடையாது. நம்முடைய கருத்துக்கு மரியாதை செய்யுமாறு பலாத்காரம் மூலம் நிர்ப்பந்திக்க அதை விட உரிமை கிடையாது. அது நாம் வளர்க்க விரும்பும் ஜனநாயக உணர்ச்சிக்கு நேர் விரோதமாகும்.

## 25

அதனால் ஒத்துழையாமையாளர்கள் சமூக பகிஷ்கார வலையில் விழுந்து விடாமல் கவனமாக நடந்து கொள்ள வேண்டும். சமூக பகிஷ்கார முறையை அனுஷ்டிக்க வேண்டாம் என்று கூறுவதைக் கொண்டு, அப்படிப் பட்டவர்களுடன் சகவாசம் வைத்துக் கொள்ள வேண்டும் என்று கூறுவதாக எண்ணலாகாது. ஜீவாதாரமான விஷயங்களில் உறுதியானதும் தெளிவானதுமான பொது ஜன அபிப்பிராயத்தை எதிர்ப்பவன் சமூக சௌகரியங்களும் வசதிகளும் பெற முடியாது. அதனால் நாம் அவனுடைய வீட்டில் நடைபெறும் திருமண விருந்துகள்

போன்ற சிறப்புக்களுக்குப் போகவும் கூடாது, அவனிடமிருந்து நன்கொடைகள் பெறவும் கூடாது. ஆனால் அவனுக்கு வைத்திய உதவி போன்ற சமூக சேவை செய்ய மட்டும் மறுக்கக் கூடாது. இந்தச் சேவையானது ஒரு கடமையாகும். விருந்துகளுக்குப் போவது கடமையன்று, போவதோ போகாமலிருப்பதோ இஷ்டத்தையே பொறுத்தது. இதையுங்கூட அபூர்வமாகவும் கட்டாயமான சமயங்களிலும் அனுஷ்டிப்பதே அறிவுடைமையாகும். எந்தச் சமயம் உபயோகித்தாலும் இந்த ஆயுதத்தை உபயோகிப்பவனே அதனால் வரும் அபாயங்களை அனுபவிக்க வேண்டியவனாவான்.

## 26

சில மாணவர்கள் "தாரணா" என்னும் பண்டைய அநாகரிக வழக்கத்தை அனுஷ்டிக்க ஆரம்பித்திருக்கின்றனர். பணம் செலுத்தவோ கல்வி அதிகாரிகளைப் பார்க்கவோ சர்வகலாசாலைக்குச் சென்ற மாணவர்களை இவர்கள் போக வொட்டாமல் வழியில் படுத்துத் தடுத்திருக்கிறார்கள். பலாத்காரத்தை கொஞ்சமும் சாதுரிய மில்லாமல் உபயோகித்திருப்பதாலேயே அதை "அநாகரிகம்" என்று கூறுகிறேன். "தாரணா"வை அனுஷ்டிப்பவர் தாம் மிதிக்கப்படப் போவதில்லை என்று அறிந்தே அதை அனுஷ்டிப்பதால் அதை "அநாகரிகம்" என்று கூறுகின்றேன். அதை பலாத்காரம் என்று கூறுவது கஷ்டம் தான். ஆனால் அது அதைவிட தவறானதாகும். நாம் எதிரியைப் பலாத்காரத்தைக் கொண்டு தாக்கும் பொழுது அவன் திரும்ப நம்மைத் தாக்க அவனுக்கு இடம் கொடுக்கிறோம். ஆனால் எதிரி மிதிக்க மாட்டான் என்று அறிந்து கொண்டு, வேணுமானால் மிதித்துக் கொண்டு போ என்று கூறும் பொழுது அவனை மிகவும் கேவலமான நிலைமையில் வைத்து விடுகிறோம். மாணவர்கள் உற்சாக மிகுதியால் தாங்கள் செய்யும் காரியம் எவ்வளவு அநாகரிகமானது என்று சிந்தித்துப் பார்த்தார்களில்லை. ஆனால் மனச்சான்றுப்படி நடக்கவும் எத்துணைப் பெரிய கொடுங்கோன்மையையும் தனியாக நின்று எதிர்க்கவும் வேண்டியவர்கள் சிந்தியாமல் செயலாற்ற முடியாது.

# சாத்வீகச் சட்டமறுப்பு

## 1

சட்ட மறுப்பு சாத்வீகமாய் இருக்க வேண்டுமானல் பயமுறுத்தல், பலாத்காரம் யாதொன்றும் இருக்கக் கூடாது. சட்டத்துக்கு அடங்காமை அதில் கிடையாது. சாத்வீகமாய் எதிர்ப்பவன் சிறை வாசத்தைத் தானுகவே தேடிக் கொள்கிறுன். ஆகையால் அவனைக் கைது செய்யும் பொழுது, மற்றவர்கள் அதை ஆட்சேபித்து ஆர்ப்பாட்டங்கள் செய்வது தவறு. நாம் விரும்பியது கிடைத்த பொழுது எப்படி உண்மையாய் மகிழ்வோமோ அப்படியே எல்லோரும் மகிழ வேண்டும். எப்படி ஒத்துழையாமைக்கு அஹிம்சை ஜீவாதாரமோ அப்படியே சட்ட மறுப்புக்குச் சாத்வீகம் ஜீவாதாரமாக இருக்கின்றது. சாத்வீகமாய் மறுப்பவன் தானே தனக்குச் சட்டமாகின்றுன். சாத்வீக மறுப்பெனும் தர்மத்தைக் கையாள்வதற்கு மிக உயர்ந்த அறிவும் தைரியமும் வேண்டியதவசியம். அது அரசாங்கத்தின் அதிகாரத்தை முற்றிலும் மறுப்பது; ஆகையால் அரசாங்கம் சீர்திருந்த முடியாத நிலைமையில் இருக்கும் பொழுது தான், அதைக் கையாள நியாயமுண்டு.

(யங் இந்தியா 10-11-21)

## 2

அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி அங்கத்தினர்கள் ஒவ்வொருவரும் சாத்வீகச் சட்ட மறுப்பைப் பற்றி பேசிக் கொண்டிருந்தனர். ஆனல் உண்மையில் இதற்கு முன் அதை ஒரு பொழுதும் உபயோகித்து அறியாதபடி

யால் நமது தற்காலக் குறைகளையெல்லாம் நீக்குவதற்கு அதுவே ஒப்பற்ற மருந்தென்று தப்பிதமாய் எண்ணி, அதனிடம் மிக்க ஆர்வமுடையவர்களாக ஒவ்வொருவருங் காணப்பட்டனர். அதை அநுஷ்டிப்பதற்கு முன் செய்ய வேண்டிய அவசியமான ஏற்பாடுகளை யெல்லாம் நாம் செய்து முடிக்கக் கூடுமானால், அதை நிச்சயம் அத்தகைய ஒப்பற்ற மருந்தாகச் செய்துவிடக் கூடும். தனிப்பட்டவர்கள் ஒவ்வொருவரும் தங்கள் சாத்வீக மறுப்பால் ரத்தக் களரி யுண்டாவது நிச்சயம் என்று காணும்பொழுது தவிர, இதர காலங்களி லெல்லாம் அதை அநுஷ்டிக்கலாம். ஆனால் என்ன கேடு வருமானாலும் அதை அநுஷ்டியாமல் இருக்கக் கூடாதென்ற சந்தர்ப்பமும் ஏற்படக் கூடும். ரத்தக் களரி யுண்டாவது நிச்சயமென்று தோன்றினாலுங் கூட அரசாங்க விதிகள் அனைத்தையும் மறுத்துத் தீர வேண்டிய காலமொன்று எனக்கு வருமென்பதை நான் நன்கறிவேன். அத்தகைய காலத்தில் அதை அசட்டை செய்வது கடவுளை மறுப்பதாகும்; அப்பொழுது சாத்வீகச் சட்ட மறுப்பு உடனே திட்டமாய்ச் செய்து தீர வேண்டிய தோர் கடமையாகும்.

சமூக சாத்வீகச் சட்ட மறுப்பை அநுஷ்டிக்க வேண்டிய விதிகள் வேறு. அமைதியான நிலைமையில்தான் அதை அநுஷ்டிக்கலாம். அமைதியும் பலவீனத்தினாலோ அல்லது அறியாமையினாலோ ஏற்பட்டதாய் இருக்கக்கூடாது; பலத்தினாலும் அறிவினாலும் விளைந்ததாய் இருக்க வேண்டும்.

(யங் இந்தியா 4-8-21)

## 3

பூரண சாத்வீகச் சட்ட மறுப்பு பலாத்காரம் சிறிதுமில்லாத கலகமாகும். முற்றிலும் சாத்வீகமாய் எதிர்ப்பவன் அரசாங்கத்தின் அதிகாரத்தைப் பொருட்படுத்துவதே யில்லை. அரசாங்க விதிகளில் சன்மார்க்க நெறிக்குச்

சம்பந்தமில்லாத விதிகளும் சில உண்டு; அவைகளின்படி நடப்பது சன்மார்க்கத்திற்கு அவசியமும் அன்று, அவைகளின்படி நடவாமை சன்மார்க்கத்திற்கு விரோதமும் அன்று. அத்தகைய விதிகள் ஒவ்வொன்றையும் கவனியாது நடக்க சாத்வீகமாய் எதிர்ப்பவனுக்கு பாத்தியதை உண்டு. உதாரணமாக அவன் வரி கொடுக்க மறுப்பான்; பிறரிடத்தில் அநுமதிபெருமல் நுழையக்கூடாதென்ற விதியை மீறிப் போர்ச் சேவகரோடு பேசுவதற்கு அவர்களுடைய வாசஸ்தலத்தில் புகுவான்; 'மறியலை'ப் பற்றி அரசாங்கத்தார் ஏற்படுத்தும் நிபந்தனைகளை மீறி, மறியல் செய்யக் கூடாதென்ற இடத்தில் மறியல் செய்வான். இவ்விதம் நடப்பதில் ஒருபொழுதும் அவன் பலாத்காரத்தை உபயோகிக்க மாட்டான். தன் மீது உபயோகிக்கப் படும் பலாத்காரத்தை எதிர்க்கவும் மாட்டான். சிறைவாசத்தையும் மற்றத் துன்பங்களையும் வேண்டியே நிற்பான். தான் அநுபவிப்பதாகத் தோன்றும் தேக சுதந்திரத்தைத் தாங்க முடியாத பெரும் பாரமாக உணர்ந்தவுடன் இவ்விதம் நடப்பான். பிரஜையானவன் அரசாங்க விதிகளுக்குக் கீழ்ப்படிந்து நடக்கும்வரைதான் அரசாங்கம் அவனுக்குச் சுதந்திரம் அளிக்கின்றது. அரசாங்கத்தின் விதிகளுக்குக் கீழ்ப்படிந்து நடத்தல் பிரஜையானவன் தன் சுதந்திரத்திற்காகக் கொடுக்கும் விலையாகும். ஆகையால் அநீதியாய் நடக்கும் அரசாங்கத்திற்குக் கீழ்ப்படிந்து நடத்தல் சுதந்திரத்திற்காக அதர்ம வழியில் நடத்தலாகும். அரசாங்கத்தின் அநீதியை உணர்ந்த பிரஜையானவன் ஒருபொழுதும் அதன் சகிப்பினுல் வாழ்வதில் திருப்தியுறுன். ஆகையால் அவன் சன்மார்க்கத்தில் தவருது நடந்து தன்னைக் கைது செய்யும்படி அரசாங்கத்தைக் கட்டாயப் படுத்த முயல்வான். ஆனால் அவனுடைய கருத்தை உணராதவர்கள் அவன் தேசத்திற்குக் கேடு விளைப்பவன் எனக் கருதுவர்.

இத்தகைய சாத்வீக எதிர்ப்பு ஆன்மாவின் வேதனையை வெளிக் காட்டுவதற்குச் சிறந்த கருவியாகவும், தீய அரசாங்கத்தைத் தெளிவாய் எச்சரிப்பதாகவும் இருக்கின்றது. சீர்திருத்தத்தின் சகல சரித்திரமும் இஃதல்லவோ ?

இதுவரை வாழ்ந்து வந்த அரசாங்கத்தை ஒரு தொகுதியினர் மறுத்து விட்டால் அதாவது எதிர்த்தால், அநேகமாய் அவர்கள் தங்கள் சொந்த அரசாங்கத்தை ஸ்தாபித்தவர்களாவார்கள். "அநேகமாய்" என்று சொல்கிறேன்; ஏனெனில் அரசாங்கம் அவர்களை எதிர்த்தால் அவர்கள் பலாத்காரம் உபயோகிப்பதில்லை. அரசாங்கம் தங்கள் விருப்பத்தின்படி நடக்கும் வரை எதிர்த்து அதனால் சிறைப்படுவதும் சுடப்படுவதுமே அவர்களுடைய வேலை.

தென்னாப்பிரிக்காவில் மூவாயிரம் இந்தியர்கள் திரான்ஸ்வால் அரசாங்கத்திற்குப் போதுமான முன்னறிவிப்பின் பேரில், திரான்ஸ்வால் குடியேற்றச் சட்டத்தை மீறி 1914-ம் வருஷத்தில் திரான்ஸ்வால் எல்லையைக் கடந்து, தங்களைக் கைது செய்யும்படி அரசாங்கத்தைக் கட்டாயப்படுத்தினர். அரசாங்கம் அவர்களைப் பலாத்காரத்தில் இறங்கச் செய்யவோ, அல்லது கீழ்ப்படியும்படிக் கட்டாயப் படுத்தவோ முடியாமற் போனபொழுது அவர்களுடைய வேண்டுகோளுக் கிணங்கியது. சாத்வீக எதிர்ப்பினர் போர் வீரருடைய ஒழுங்கு முறைக்குக் கட்டுப்பட்டவரே. ஆனல் அவர்களுடைய ஒழுங்கு முறையில் பரபரப்பு, தடபுடல் ஒன்றுங் கிடையாது; ஆகையால் அது சாதாரணமான போர் வீரனுடைய ஒழுங்கு முறையை விடக் கடினமானது. பழி வாங்கும் எண்ண மின்மையால் சாத்வீகமாய் எதிர்க்கும் சேனைக்குக் கோபம் இருக்கக் கூடாது. ஆகையால் அச்சேனையில் மிகச் சிலர் இருந்தாலும் போதும். என்? தீமையை எதிர்த்து நன்மையை

ஸ்தாபிக்க முற்றிலும் சாத்வீகமாய் எதிர்ப்பவர் ஒருவர் இருந்தாலும் போதுமானதே.

(பால இந்தியா 10-11-21)

## 4

அரசாங்கத்தின் விதிகள் கஷ்டமாயிருந்தாலும் தங்கள் மனச்சாட்சிக்கோ அல்லது மதத்திற்கோ விரோதமில்லாமல் இருந்தால் பிரியத்தோடு அவைகளுக்குக் கீழ்ப்படிந்து நடக்கவும், அதுபோலவே அநியாயமான விதிகளைச் சாத்வீகமாய் எதிர்த்து அதனால் ஏற்படும் தண்டனைகளைப் பிரியத்தோடு சகித்துக் கொள்ளவும் யார் தயாராய் இருக்கிறார்களோ, அவர்கள் தாம் சாத்வீகச் சட்டமறுப்பைக் கையாளலாம். சட்டமறுப்பு சாத்வீகமாய் இருக்க வேண்டுமானால், முற்றிலும் பலாத்காரத்தை விலக்கிவிட வேண்டும். ஏனெனில் துன்பத்தைச் சகிப்பதால் அதாவது அன்பால் எதிரியை வெல்லுவதே அதன் தத்துவமாகும்.

(பால இந்தியா 3-11-21)

## 5

அரசாங்கமானது தான் ஏற்படுத்திய சட்டங்களைத் தன் கெட்ட காரியங்களுக்கு அநுகூலமாக உபயோகித்தால், அதைத் தண்டிக்கச் சட்டத்தில் இடமில்லை என்பது நிச்சயம். ஆகையால் அரசாங்கம் சட்டத்திற்கு அடங்காது நடந்தால் சாத்வீகச் சட்டமறுப்பு மேற்கொள்ளுதல் ஓர் புண்யக் கடமையாகும். மேலும் அரசாங்கத்தை அமைத்ததிலும், சட்டங்களைச் செய்ததிலும் சம்பந்தம் சிறிதுமில்லாதவர்களுக்கு அதைத் தவிர வேறுவழி கிடையாது. வேறொரு மார்க்கம் உண்டென்பது உண்மைதான்; ஆனால் அது ஆயுதந் தாங்கிக் கலகஞ் செய்தல். சாத்வீகச் சட்டமறுப்போ ரத்தஞ் சிந்தாமல் நிச்சயமாய்ப் பலன் தரக்கூடிய வழியாகும்.

அரசாங்கத்தின் அநீதியான, சட்டத்திற்கு விரோதமான உத்திரவுகளுக்குக் கீழ்ப்படிந்து நடந்து அதனால் அடக்கத்தையும் ஒழுங்கையும் நம்மிடம் விருத்தி செய்து கொள்ளும் பொழுதுதான், சாத்வீகச் சட்டமறுப்பில் இறங்கலாம். ஏனெனில் அப்பொழுது ஒருபக்கம் அரசாங்கத்தின் கொடுங்கோன்மையும் பகிரங்கமாய் விளங்கும். மற்றொரு பக்கம் பிரியத்தோடு பணிதலால் சாத்வீகச் சட்டமறுப்பிற்கு நம்மைத் தயார் செய்து கொண்டு விடுவோம். கூடிய மட்டும் வெகு சுருக்கமான இடத்திலேயே சாத்வீகச் சட்ட மறுப்பை ஆரம்பிக்க வேண்டும். நாகரீகமான ஜனங்களிடையில் ஜனங்களின் மதிப்பை இழந்து விட்டதொரு தீய அரசாங்கம் எப்படி நோயைப் போல் ஒரு அசாதாரணமான நிலைமையோ, அப்படியே சாத்வீகச் சட்ட மறுப்பும் ஒரு சாதாரணமான நிலைமையாகும். ஆகையால் எப்பொழுது பிரஜையானவன் அரசாங்க விதிகளைப் பிரியத்தோடு பணிந்து நடந்து தன்னை அடக்கிக் கொண்டானோ அப்பொழுது தான் அபூர்வமான சந்தர்ப்பங்களில், வேண்டுமென்று, ஆனால் சாத்வீகமாய் அவ்விதிகளை மீறவும், மீறுவதால் அற்படும் தண்டனைக்கு ஆளாகவும் அவனுக்கு உரிமை உண்டு.

(யங் இந்தியா 17-11-21)

## 6

சாத்வீகச் சட்ட மறுப்பு ஒவ்வொரு பிரஜையினுடைய உடன் பிறந்த உரிமையென்பதை ஒவ்வொருவரும் ஒப்புக் கொள்ளும்படி செய்ய நான் விரும்புகிறேன். மனிதனாய் இருக்க விரும்புவன் எவனும் அவ்வுரிமையைத் துறந்து விடத் துணியான். சாத்வீகச் சட்ட மறுப்பால் தேசத்தில் ஒரு நாளும் குழப்பம் ஏற்பட்டு விடாது. பலாத்கார எதிர்ப்பினால் தான் குழப்பம் உண்டாகும். பலாத்கார எதிர்ப்பை ஒவ்வொரு அரசாங்கமும் பலாதகாரத்தால் அடக்கி விடும். அவ்விதம் அடக்கா விட்டால் அவ்வரசாங்

கமே அழிந்து விடும். ஆனால் சாத்வீக எதிர்ப்பை அடக்குவது மனச் சாட்சியையே அடக்க முயல்வதாகும். சாத்வீக எதிர்ப்பினால் பலமும் ஒழுக்கமுமே உண்டாகும். சாத்வீகமாய் எதிர்ப்பவன் ஆயுதங்களை ஒருநாளும் உபயோகிக்க மாட்டான். ஆகையால் பொது ஜனங்களின் அபிப்பிராயத்தைக் கேட்டு நடக்கப் பிரியமுள்ள அரசாங்கத்திற்கு அவனால் அபாயம் நிச்சயம் உண்டாகும். ஏனெனில் எவ் விஷயத்தைக் குறித்து அவன் அரசாங்கத்தை எதிர்க்கிறானே, அது சம்பந்தமாகப் பொது ஜன அபிப்பிராயத்தைத் தன் சாத்வீக எதிர்ப்பால் தனக்கு அநுகூலமாக இருக்கச் செய்து அதன் மூலமாய் அவ்வரசாங்கத்தை அழித்து விடுகிறான். ஆகையால் அரசாங்கம் சட்டத்திற்கு அடங்காத பொழுது அதைச் சாத்வீகமாய் எதிர்க்க வேண்டியது ஒரு புண்யக் கடமையாகின்றது. அப்படிச் செய்யாமல் அத்தகைய அரசாங்கத்தோடு உறவு கொள்பவன் அதன் கெட்ட தன்மையில் கலந்து கொள்பவன் ஆவான்.

ஏதேனும் ஒரு குறிப்பிட்ட விதியைப் பற்றிச் சாத்வீக எதிர்ப்பைக் கையாளுதல் தப்பிதமாயிருக்கலாம். அல்லது அதைக் கையாளுவதில் தாமதம் செய்யும்படியாவது, அல்லது எச்சரிக்கையுடன் இருக்கும்படியாவது சொல்லலாம். ஆனால் சாத்வீகமாய் எதிர்க்கும் உரிமையை ஆட்சேபிக்க ஒருவராலும் முடியாது. சுய மதிப்பை விட்டு விடச் சம்மதிக்க முடியாது. ஆனால் அவ்வுரிமையை உபயோகிப்பதில் மனிதனால் செய்துக் கொள்ளக் கூடிய சகல பாதுகாப்பும் செய்துக் கொள்ள வேண்டும். பொது ஜனங்கள் பலாத்காரத்தை உபயோகிக்கவோ, அல்லது கட்டுக் கடங்காமல் நடக்கவோ செய்யாமல் இருக்கும்படி பார்த்துக் கொள்ள வேண்டும். அது உபயோகிக்கப்படும் இடத்தின் விஸ்தீரணமும், அதை உபயோகிக்கும் வழிகளும் அவசியத்தின் அளவே யிருத்தல் வேண்டும்.

(பால இந்தியா 5-1-22)

## 7

சாத்விகச் சட்ட மறுப்பு என்பது சன்மார்க்க சம்பந்தமில்லாத சட்டங்களைச் சாத்வீகமாக மீறுவதாகும். அமெரிக்க அறிஞர் தோரோ என்பவர் தாமிருந்த மாகாணத்தின் சட்டங்களை மீறிய தம்முடைய எதிர்ப்பைக் குறிப்பிடுவதற்காகச் சிருஷ்டித்த மொழியாகும். அவர் சாத்வீகச் சட்ட மறுப்புச் செய்ய வேண்டிய கடமையைக் குறித்து ஒரு சிறந்த நூல் செய்திருக்கிறார். ஆனால் அவர் பரிபூர்ணமாக அஹிம்சையை ஆதரிக்கவில்லை என்றே எண்ணுகிறேன். அத்துடன் அவர் வரி சம்பந்தமான சட்டங்களை மீறுவதை மட்டுமே கூறுகிறார். ஆனால் சாத்வீகச் சட்ட மறுப்பில் சன்மார்க்க சம்பந்தமில்லாத சகல சட்டங்களை மறுப்பதும் அடங்கும். அதாவது அஹிம்சா பூர்வமாகச் சட்டங்களுக்கு புறம்பானவைகச் செய்து கொள்ளுவதாகும். அப்படிச் சட்டங்களை மீறுபவன் அதற்காகச் சட்டம் கூறும் தண்டனையைச் சந்தோஷமாக ஏற்று அனுபவிப்பான்.

## 8

சாத்வீகச் சட்ட மறுப்பு என்பது எதிரியைத் தாக்கும் சட்ட மறுப்பு என்றும், தன்னைக் காக்கும் சட்ட மறுப்பு என்றும் இருவகைப் படும். அதன் வேறுபாட்டை அறிந்து கொள்ளுதல் அவசியம். எந்தச் சட்டங்களை மீறுவது சன்மார்க்க விரோதமாகாதோ அந்தச் சட்டங்களை அரசாங்கத்தை எதிர்ப்பதற்கு அறிகுறியாக அஹிம்சா முறையில் மீறுவது எதிரியைத் தாக்கும் சாத்வீகச் சட்ட மறுப்பாகும். உதாரணமாக வரி சம்பந்தமான சட்டங்களும் வசதிக்காக ஏற்படுத்தப் பட்ட சட்டங்களும் கஷ்டங்கள் உண்டாக்கா; அவைகளை மாற்றியமைக்க வேண்டிய அவசியம் கிடையாது. அத்தகைய

கள். அவர்களுக்கு அதனால் யாதொரு லாபமும் கிடையாது. ஆனால் ஆயிரக்கணக்கான இந்திய மக்கள் தங்கள் மீதும் தங்கள் மனைவி மக்கள் மீதும் விதிக்கப் பட்டிருந்த "தலைவரி"யை ரத்து செய்யும் நன்மையைப் பெறுவதற்காகவே சாத்வீகச் சட்ட மறுப்பை அனுஷ்டித்தார்கள். பொது ஜனச் சாத்வீகச் சட்ட மறுப்பைச் செய்பவர்கள் அதன் தத்துவத்தை அறிந்து கொண்டால் போதுமானது.

## 12

பரிபூரணமான சுதந்திரத்தைப் பெறுவதற்கு பொது ஜனச் சாத்வீகச் சட்ட மறுப்பே சரியான சாதனம் என்பதை எல்லோரும் ஒப்புக்கொள்கிறார்கள். அப்படியானால் பொது ஜனங்கள் அஹிம்சா முறையையும் கட்டுப் பாட்டையும் பரிபூரணமாக மேற் கொண்டாலன்றி பொது ஜனச் சட்ட மறுப்பை ஆரம்பிக்க முடியாது என்பதை அறிந்து கொள்ள வேண்டாமா? அதனால் அறிவுள்ளவர்கள் எல்லோரும் பலாத்காரச் செயல்களை அந்தரங்கமாகவோ பகிரங்கமாகவோ ஆதரிக்கக் கூடாது.

## 13

சத்தியாக்ரகி அனுசரிக்க வேண்டிய விதிகளாவன:—

(1) சத்யாக்ரகி கோபப்படலாகாது.

(2) எதிரியின் கோபத்தைச் சகித்துக் கொள்ள வேண்டும்.

(3) எதிரி தாக்கினாலும் அவனைத் தாக்கலாகாது.

(4) அதிகாரி கைதி செய்யவோ சொத்தை ஜப்தி செய்யவோ பறிமுதல் செய்து எடுத்துக்கொண்டு போகவோ வந்தால் தடை செய்யலாகாது.

(5) தர்மகர்த்தா நிலைமையிலுள்ள பொருள்களை உயிர் போவதாக யிருந்தாலும் கொடுக்க மறுத்து பொறுமையாகத் துன்பங்களை ஏற்றுக் கொள்ள வேண்டும்.

... எதிரி துன்பப் செ... அவனுக்குத் துன்பம் செய்யாதிருப்பது என்பதில் சபிப்பதும் ஆணையிடுவதும் கூடாது என்பதும் அடங்கும்.

5. ~~(7)~~ எதிரியிடம் அவமரியாதையாக நடக்கக்கூடாது.

6 ~~(8)~~ பிரிட்டிஷ் கொடியை வணங்கவும் கூடாது, அவமரியாதை செய்யவும் கூடாது.

7 ~~(9)~~ யாரேனும் அதிகாரியை அவமரியாதை செய்தாலும் தாக்கினாலும் தன்னுடைய உயிர்க்கு அபாயம் நேரிடுவதாயிருந்தாலும் அதைத் தடுக்கவேண்டும்.

11 ~~(10)~~ சிறையிலிருக்கும் பொழுது சிறை அதிகாரிகளிடம் மரியாதையாக நடந்து கொள்ளவும், சுயமரியாதைக்குப் பங்கம் செய்யாத சிறை விதிகளை அனுசரிக்கவும் வேண்டும். சத்யாக்ரகி அதிகாரிகளை வழக்கமான முறையில் வணங்கலாமே யன்றி தன்னைக் கேவலப்படுத்திக் கொள்ளும் முறையில் வணங்கவும் சர்க்காருக்கு ஜே என்பன போன்ற கோஷங்களைக் கூறவும் மறுத்துவிட வேண்டும், தன்னுடைய மதத்துக்கு விரோதமில்லாத உணவை சுத்தமாகச் சமைத்து சுத்தமாகப் பரிமாறினால் உண்ணலாமே யன்றி அசுத்தமான பாத்திரங்களிலும் அவமரியாதையாகவும் படைத்தால் உண்ண மறுத்துவிட வேண்டும்.

12 ~~(11)~~ சாதாரணக் கைதிக்கும் தனக்கும் யாதொரு வேறுபாடும் பாராட்டக்கூடாது; மற்றக் கைதிகளைவிட உயர்வாக எண்ணிக் கொள்ளவும் கூடாது; தன்னுடைய தேக ஆரோக்கியத்துக்கும் ஆன்ம நலத்துக்கும் இன்றியமையாத வசதிகளைத் தவிர வேறு எவ்வித வசதிகளையும் கேட்கலாகாது.

13 (12) சுய மரியாதைக்குப் பங்கம் உண்டாக்காத வசதிகள் எதையேனும் விரும்பி உண்ணாவிரதம் இருத்தலாகாது.

தாங்கிச் செய்யும் கலகத்திலும் அதிக அபாயகரமானது என்பதில் ஐயமில்லை. ஏனெனில் சாத்வீக எதிர்ப்பினர் எத்துணை அதிகமான துன்பங்களையும் ஏற்றுக்கொள்ளத் தயாராக இருந்தால் அந்தக் கலகத்தை ஒருபொழுதும் அடக்க முடியாது. குற்றமற்றவர்கள் துன்பத்தை நோற்பது தவருமல் பலன் தரும் என்பதில் பரிபூரணமான நம்பிக்கையையே அது அஸ்திவாரமாக உடையது. சாத்விகச் சட்டமறுப்பினர் ஆரவாரமின்றிச் சிறைக்குச் செல்லுவதன்மூலம் அமைதியான சூழ்நிலை அமையுமாறு செய்கின்றனர். தவறு செய்பவன் பலாத்கார எதிர்ப்பு இல்லாததால் தவறு செய்வதில் அலுத்துப் போகிருன். எதிர்ப்பு இல்லாத யிடத்தில் எவ்வித இன்பமும் இல்லாமற் போகின்றது. ஜனங்களுடைய பிரதிநிதிகள் இத்தகைய பெரும்போரைத் துவக்கு முன்னர் சாத்வீக எதிர்ப்பு ஜயம் பெறுவதற்கான நிபந்தனைகளை ஐயம் திரிபற அறிந்து கொள்ள வேண்டும். கையாளப்படும் பரிகாரங்கள் எவ்வளவுக் கெவ்வளவு சீக்கிரமாகப் பலன் தருமோ அவைகளை உபயோகிப்பதில் அவ்வளவுக் கவ்வளவு அதிகமான அபாயங்களும் உண்டாகும், அதிகமான திறமையும் தேவையாகும்.

# வரிகொடாமை

## 1

**வரிகொடாமை** இயக்கமானது வரி கொடாதவர்களுக்குப் பணத்தை மிச்சப் படுத்துவதற்காக ஏற்பட்டதன்று, அவர்களுடைய தியாகத்தின்மூலம் தேசத்தின் நலத்தைப் பெருக்குவதற்காகவே ஏற்பட்டதாகும். அவர்களும் தங்களைத் தூய்மை செய்து கொண்டாலன்றி இந்த முறையைக் கையாளும் பாக்கியத்தை அடைய முடியாது.

## 2

ஆகவே சாத்வீக வரிகொடாமை இயக்கமானது சரியான பயிற்சி பெற்ற பின்னரே கையாளக் கூடிய உரிமையாகும். எப்படி வழக்கமாகச் சட்டங்களை மீறி வருகிறவர்கள் சாத்வீகச் சட்டமறுப்புச் செய்வது கஷ்டமான காரியமோ, அப்படியே அற்ப காரணத்தை வைத்தும் வரி கொடாதிருக்கும் வழக்கத்தை உடையவர்களும் சாத்வீக வரிகொடாமை இயக்கத்தைக் கையாள்வது கஷ்டமானதாகும். உண்மையிலே சாத்வீக வரி மறுப்பானது ஒத்துழையாமை இயக்கத்தின் இறுதிக்கட்டமே யாகும். சாத்வீக எதிர்ப்பு சம்பந்தமான இதர வழிகளையெல்லாம் அனுஷ்டித்துப் பார்த்துப் பலன் காணாத பொழுதே வரி கொடாமை இயக்கத்தில் இறங்க வேண்டும். ஆதலால் ஆரம்பத்திலேயே வரிகொடாமையைப் பரந்த இடங்களிலோ பல யிடங்களிலோ கையாள்வது முட்டாள்தனத்தின் சிகரமேயாகும்.

# 3

வரிகொடாமை இயக்கத்தில் அஹிம்சையில் ஊறி யிராதவர்கள் வந்து சேர்ந்து விட்டால் என்ன செய்வது என்று கேட்கிறார்கள். அது உண்மைதான். அநேகர் பண லாபம் கருதி வந்து சேர்ந்து விடுகிறார்கள். ஆதலால் ஜனங்கள் வரிகொடாமலிருக்க ஒப்புக்கொண்ட உடனேயே இயக்கத்தை ஆரம்பித்து விடலாகாது. அவர்கள் அஹிம்சையாக நடந்துகொள்ள மாட்டார்கள். அதிகமான ஹிம்சை கிளம்பினாலும் கிளம்பலாம்.

ஐக்கிய மாகாணத்தில் விவசாயிகள் அஹிம்சையாக இருக்க ஒப்புக்கொண்ட பிறகு, ஜவஹர்லால் நேருவிடம் அவர் ஹிம்சை செய்யச் சொன்னால் தயாராக இருப்பதாகச் சொன்ன விஷயத்தை நாம் மறந்துவிடக் கூடாது. விவசாயிகள் சாத்வீக வரிகொடா இயக்கத்தின் அவசியத்தையும் லட்சணத்தையும் அறிந்து கொண்டு தங்கள் நிலங்கள் பறிமுதல் செய்யப்படும் பொழுதும் தங்கள் ஆடு மாடுகள் முதலிய சங்கமச் சொத்துக்கள் ஏலம் போடப்படும் பொழுதும் எதுவும் செய்யாமல் கையைக் கட்டிக் கொண்டு இருக்கத் தயாராகும் பொழுதுதான் வரி கொடாமை இயக்கத்தை ஆரம்பிக்கலாம்.

# உண்ணாவிரதம்

## 1

வேண்டுமென்று செய்யப்படும் பலாத்காரச் செயல்களோ அல்லது பிடிவாதமாக நடத்திவரும் கலகங்களோ நிகழ்ந்தால் அப்பொழுது அரசாங்கத்துடனும் ஜனங்களுடனும் செய்யும் போராட்டத்தில் உண்ணாவிரதத்துக்கு இடமுண்டு. இறக்கும் வரை நடத்தும் உண்ணாவிரதமானது சத்தியாக்கிரக முறையில் ஒரு சாராம்சமான பகுதியாகும். சில குறிப்பிட்ட சந்தர்ப்பங்களில் அதுவே அதிகமான பலன் தரக்கூடிய சத்யாக்ரக ஆயுதமாயிருக்கும். ஆனால் அதைப் பயிற்சி பெறுதவர்கள் உபயோகித்தலாகாது. அஹிம்சை என்பது எதிரிக்குத் துன்பம் செய்யாமல் அவர் செய்யும் துன்பத்தை ஏற்றுக்கொள்ளும் அதிக ஆற்றல் வாய்ந்த அன்பு சக்தியாகும். எதிரியின் சிறந்த அம்சத்தை வேலை செய்யும்படி தூண்டுவதே அதன் நோக்கம். துன்பம் செய்தல் எதிரியின் இழிந்த அம்சத்தைத் தூண்டும்; துன்பம் நோற்றல் எதிரியின் உயர்ந்த அம்சத்தைத் தூண்டும். அப்படி உயர்ந்த அம்சத்தைத் தூண்டுவதற்குச் சரியான சந்தர்ப்பத்தில் மேற்கொள்ளப்படும் உண்ணாவிரதத்தை விடச் சிறந்த வழி கிடையாது.

## 2

உண்ணாவிரதமாகிய ஆயுதத்தை உபயோகிக்க விசேஷமான சாமர்த்தியம் தேவை. அந்த வித்தையில்

தேர்ச்சி பெருதவர் உபயோகித்தால் அது பலாத்காரமாகக் கூட ஆகிவிடும்.

## 3

மற்றவைகளைப் போலவே உண்ணாவிரதத்தையும் சரியாகவும் உபயோகிக்கலாம், தவருகவும் உபயோகிக்கலாம். ஆனல் தவருக உபயோகித்து விடக்கூடும் என்பதற்காக சத்யாக்ரக ஆயுதசாலையிலுள்ள அந்தச் சக்தி வாய்ந்த ஆயுதத்தை உபயோகியாமல் இருந்துவிட முடியாது.

## 4

உண்ணாவிரதத்தை அன்புடையவரிடமே கையாளலாம். அதுவும் மதுவருந்தும் தந்தையைத் திருத்துவதற்காக உண்ணாவிரத மிருக்கும் மகனைப் போலத் திருத்தும் நோக்கத்துடனிருக்கலாமே தவிர, உரிமைகளைப் பெறும் நோக்கத்துடனிருக்கலாகாது. நான் பம்பாயிலும் பிறகு பர்தோலியிலும் இருந்த உண்ணாவிரதம் அந்த மாதிரியானது. என்னிடம் அன்பு கொண்டிருந்தவர்களை திருத்துவதற்காக உண்ணாதிருந்தேன். ஆனல் ஜெனரல் டயர் இருக்கிருர், அவருக்கு என்னிடம் அன்பு கிடையாது. அவர் தம்மை என்னுடைய விரோதியாகக் கூடக் கருதுகிருர். அப்படிப்பட்டவரிடம் நான் உண்ணாவிரதத்தைக் கையாளலாகாது.

## 5

சத்யாக்ரக முறையிற் சேர்ந்த உண்ணாவிரதத்தை எதிரிக்கு விரோதமாக மேற்கொள்ள முடியாது. அதிகமான அன்புடையவரிடத்தும் அவர்களுடைய நன்மைக்காகவே மேற்கொள்ளலாம்.

## 6

கொடுத்த கடனை வசூலிப்பதற்காக உண்ணாவிரதத்தை மேற்கொள்பவன் ஒருநாளும் உண்மையான சத்தியாக்ரகி